வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu வார மலர் ඊළනාඩු

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 25.02.2024 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 56 | பக்கங்கள் : 16





**08** பயங்கரவாத தடைச்சட்டத்தை மாற்றுவதில் அரசாங்கம் செயல்படுகிறதா?


**09** கட்சிகள் அணிகளாக உருமாறுவதும் கட்சிகளை ரணில் பிளவுபடுத்துவதும்!


**10** பேசாமல் பேசும் திறன்: எலான் மஸ்க் திட்டம் என்ன?


**11** ஆர்.ஆர். அண்ணனின் இழப்பு ஓர் எதிர்பாராத துயரம்

# தேர்தலை ஒருபோதும் ஒத்திவைக்கமாட்டேன்

## சம்பிக்கவிடம் ஜனாதிபதி உறுதி

கொழும்பு, பெப்ரவரி 25

**“ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்கும் எண்ணம் என்னிடம் இல்லை. இவ்வருடம் குறித்த நேரத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும். அடுத்த வருட ஆரம்பத்தில் பாராளுமன்றத் தேர்தலை நடத்த எதிர்பார்த்துள்ளோம்.”**

**- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**



பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தலைமையிலான ஐக்கிய குடியரசு முன்னணியின் ‘நாட்டுக்கான ஒன்றுபட்ட நடவடிக்கை’ என்ற தலைப்பி லான முன்மொழிவு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று கொழும்பில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தேர்தலை நடத்துவது தொடர்பில் பாட்டலி சம்பிக்க ரணவக்க எம்.பி. எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

“நாட்டின் வீழ்ச்சி அடைந்த பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த அரசு கடந்த 2 வருடங்களில்

15



## கச்சதீவு ஆலயத் திருவிழாவில் 4,454 இலங்கையர்கள் பங்கேற்பு

### இந்திய பக்தர்கள் புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், பெப். 25

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா கொடியேற்றத்துடன் நேற்று முன்தினம் ஆரம்பமாகிய நிலையில், 4454 இலங்கையர்கள் பங்கேற் றனர். இந்தியர்கள் குறிப்பாக தமிழ் நாட்டைச் சேர்ந்த வர்கள் புறக்கணித்துள்ளனர்.

இலங்கையர்கள் மாத்திரமன்றி இந்திய பக்தர்களும் இணைந்து வருடம்தோறும் வெகு விமரிசையாக இடம் பெறும் கச்சதீவு புனித

15

## இந்திய-இலங்கை கடல் எல்லையில் கறுப்புக்கொடி ஏந்திப் போராட்டம்!

### யாழ். மீனவர் சமூகம் அழைப்பு

யாழ்ப்பாணம், பெப். 25

இந்திய இழுவை படகுகளுக்கு எதிரான கறுப்புக் கொடி போராட்டம் ஒன்றை இந்திய - இலங்கை கடல் எல்லையில் நடத்துவதற்கு யாழ். மாவட்ட கிராமிய கடற்றொழில் அமைப்புகளின் சம்மேளனம் அழைப்பு விடுத்துள்ளது.

நேற்று சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள அவர் களது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பிலுயே, அந்த அமைப்பின்

15

## ராஜபக்ஷக்களின் கட்சியுடன் பேச்சுக்குகூட செல்லமாட்டேன்!

### கூறுகின்றார் சரத் பொன்சேகா

கொழும்பு, பெப். 25

“ராஜபக்ஷக்களுடன் இணைந்து அரசியல் செய்வதற்கு நான் தயாரில்லை. மொட்டு கட்சி ராஜபக்ஷக்களின் கட்டுப்பாட்டின்கீழ் இருக்கும்வரை அக்கட்சியுடன் குறைந்தபட்சம் பேச்சுக்குகூட செல்லமாட்டேன்.”

- என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவுடன் அக்கட்சியின் தவிசாளரான பொன்சேகா அரசியல் போரில் ஈடுபட்டுள்ளார். தனது கட்சி எம்.பிக்கள் ஊடாக சொற்கணைகளைத் தொடுத்து வருகின்றார் .

15

## முல்லைத்தீவில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு இளைஞர் உயிரிழப்பு!

முல்லைத்தீவு, பெப். 25

முல்லைத்தீவு - மாங்குளம், தச்சடம்பன் பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு இளைஞர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வீதியால் பயணித்த குறித்த இளைஞனை வழிமறித்த மற்றுமொரு இளைஞன் கத்தியால் குத்தியுள்ளார்.

இந்நிலையில், படுகாயமடைந்த இளைஞன் மாங் குளம் ஆதார மருத்துவமனை கொண்டு செல்லப் பட்டபோது உயிரிழந்துள்ளதாகக்

15

## மீனவர் பிரச்னைகள் குறித்து ஆராய இந்தியாவை அழைக்கிறது இலங்கை

கொழும்பு, பெப். 25

உக்கிரமடைந்துள்ள மீனவர் பிரச்னை தொடர்பில் கலந்துரையாட முன்வருமாறு இலங்கை அரசாங்கம் இந்தியாவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் கலந்துரையாட இலங்கை வெளிவிவகார அமைச்சு இந்தியாவிடம் நேரம் கோரியுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார்.

15

## தேர்தல்களில் வாகை சூடுவோம் 50 எம்.பிக்கள் எம்முடன் இணைவர்!

### புதிய கூட்டணி குறித்து சுசில் பிரேம்ஜயந்த

கொழும்பு, பெப். 25

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் என்பன உரிய சந்தர்ப்பத்தில் நடத்தப்படும். குறித்த தேர்தல்களின் எமது புதிய கூட்டணி வெற்றி வாகை சூடும் என்பதை உறுதியாகக் கூறுகின்றேன். அதற்கு சான்றாக பாராளுமன்ற உறுப்பினர்கள் 50 பேர் எம்முடன் இணை யத் தயாராகவுள்ளனர் என்று புதிய அரசியல் கூட்டணியின் கொழும்பு மாவட்டத் தலைவரும் கல்வி அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

புதிய அரசியல் கூட்டணியின் கொழும்பு மாவட்ட முதலாவது பொதுக்கூட்டம் நேற்று சனிக்கிழமை ஹைட் பார்க் மைதானத்தில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்

15

## சாந்தனை நாடு கடத்தும் பயண ஆவணம் வெளியீடு!

சென்னை, பெப். 25

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள சாந்தனை உடனடியாக இலங்கைக்கு நாடு கடத்துவதற்கான பயண ஆவணத்தை இந்திய மத்திய

15

## சட்டத்துக்கு அமைவாகவே இந்திய மீனவர்கள் கைது!

### கச்சதீவில் கடற்படைத் தளபதி சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், பெப். 25

மீனவர் கைது காரணமாக கச்சதீவு திருவிழாவை புறக்கணித்தோம் என்ற இந்திய மீனவர்களின் நியாயப்படுத்தலை ஏற்றுக்கொள்ள முடியாது. நாட்டின் சட்டத்துக்கு அமைவாகவே நாங்கள் செயற்படுகிறோம். அடுத்த ஆண்டு திருவிழாவுக்கு முன்னர் சுமுகமான தீர்வு எட்டப்படும் என்று எதிர்பார்க்கிறேன் என

15

## இப்படியும் நடக்கிறது

ஆர்.ஆர். மறைந்தார் என்ற அந்தச் செய்தியை ஜீரணிக்க முடிய வில்லை. அவருடனான ஊர்க்குரு வியின் நட்பு மிகச் சிறியகாலம்தான் என்றாலும் மிக நெருக்கமானது என்பதால் அது ஜீரணிக்க முடியாத தாக இருந்தது.

உள்ளூராட்சி தேர்தலுக்காக நியமனப்பத்திரங்கள் கோரப்பட்ட சில நாட்களில், தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து தமிழ் அரசு தனித்து செல்வதென்று முடிவெடுத் திருந்த காலம் அது. அப்போது, தமிழ் தேசியக்கட்சிகள் எல்லாம் ஒன்றிணைய வேண்டும் என்றும் இவ்வாறு பிரிந்து பிரிந்து இருப்பது தமிழர்களின் எதிர்காலத்திற்கு உகந்தது அல்ல என்பதையும் ‘ஈழ நாடு’ தொடர்ந்து வலியுறுத்தி வந்தது வாசகர்கள் அறியாததல்ல.

ஈழநாடும் இந்த ஊர்க்குருவியும் ஒற்றுமையை வலியுறுத்திவந்த வேளையில், தமிழ் அரசு தனித்துப் போக முடிவெடுத்தது. அதாவது மேலும் பிரிவினையை ஏற்படுத்தி யது.

தமிழ் அரசு இவ்வாறு முடி வெடுத்ததும், தமிழ் தேசியக் கூட்ட மைப்பிலிருந்த மற்றைய இரண்டு பங்காளிக்கட்சிகளும் சரியான நேரத்தில் சரியான முடிவை எடுத் தார்கள். கூட்டமைப்பிற்கு வெளியே இயங்கிக்கொண்டிருந்த தமிழ் தேசி யக் கட்சிகளையும் இணைத்துக் கொண்டு கூட்டமைப்பை இன்னும் பலமாக கட்டமைக்க முயன்றனர்.

அதற்காக ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோவிலிருந்து பிரிந்து தனித்து இயங்கிவரும் தமிழ் தேசியக்கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி மட்டுமன்றி, சி.வி. விக்னேஸ் வரனின் தமிழ் மக்கள் தேசியக் கூட் டணியையும் சேர்த்துக்கொண்டு பலமான கூட்டமைப்பாக மீண்டு எழ முயன்றனர்.

அவர்களின் அந்த முயற்சி வெற்றி பெறவேண்டும் என்று ஈழநாடும் விரும்பியதில் ஆச்சரியமிருக்காது. அந்தக் காலத்தில்தான் ஆர்.ஆர். என்று அறியப்பட்ட ராகவனுடன் அடிக்கடி தொடர்புகொள்ள வேண்டியேற்பட்டது. புளொட் இயக்கத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவரான அவரை பல தடவைகள் சந்தித்திருந்தாலும் நெருக்கமாக அவரோடு உரையாடவோ, நட்பு பகிரவோ சந்தர்ப்பம் கிடைக்க வில்லை. ஆனால் இந்த கூட்ட மைப்பின் பரவலாக்க முயற்சி பற்றி அறிய அவரோடு தொடர்பு கொண்டபோதுதான், அவ்வாறு கட்சிகளை இணைத்தாலும் எந்தக் கட்சியின் சின்னத்தின்கீழ் இயங்கு வது என்பதில், அதாவது அடுத்த உள்ளூராட்சி தேர்தலில் போட்டி யிடுவது என்பதில்தான் அவர்க ளுக்கு சிக்கல் இருப்பது தெரிய வந்தது.

அப்போதுதான் ஆர்.ஆர். ஒரு தகவலைச் சொன்னார்.

விடுதலைப் புலிகள் தமிழ் அரசி யல் கட்சிகளையெல்லாம் ஒன்றி ணைத்து கூட்டமைப்பை ஆரம் பித்தபோது அதில் இடம்பெறாமல் இருந்த புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். - பத்மநாபா (தற்போது அது தமிழர் சமூக ஜனநாயகக்கட்சி) ஆனந்தசங்கரி ஐயா ஆகியோர் கொழும்பில் ஜன நாயக தமிழ் தேசியக் கூட்டணி என்ற பெயரில் பதிவுசெய்த கட்சி இருக்கின்றபோதிலும் அதில் புளொட், மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ். - பத்மநாபா ஆகிய இரண்டு கட்சிக ளுமே இருப்பதாகவும், அது இரண்டு கட்சிகளுக்கும் சொந்தமா னது என்பதால் நாம் அதுபற்றி தனித்து முடிவெடுக்கமுடியாது என்ற தகவலையும் ஆர்.ஆர். பகிர்ந்துகொண்டார்.

தமிழர் சமூக ஜனநாயகக்கட்சி யின் தலைவர் தோழர் சுகு என்று அறியப்பட்ட சிறிதரன் திருநாவுக் கரசு, இந்த ஊர்க்குருவிக்கு நெருக்க மான நண்பர். அந்தக் கட்சியை கடந்த இரண்டாயிரத்து பதினெட் டாம் ஆண்டு நடைபெற்ற உள்ளூ ராட்சித் தேர்தலில் கூட்டமைப் பிற்குள் உள்வாங்க மாவை, சுமந்தி ரன் ஆகியோர் முன்வந்ததும், பின் னர் அந்த முயற்சி சில காரணங்க ளால் தடைப்பட்டும் போனது. ஆனால் அவர்கள் அதற்கு பின்னர் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தமது இடதுசாரி தோழர்களான டி.யூ., திஸ்ஸ விதாரண, வாசுதேவ போன்றவர்களின் நட்பு காரணமாக கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபயவை ஆதரிக்க முடி வெடுத்திருந்ததால், அவர்களை இப் போது தமது கூட்டமைப்பில் சேர்த் துக் கொள்வது சரியானதாக இருக் காது என்ற அவர்களின் வாதம் ஏற்றுக் கொள்ளக்கூடியதாகவும் இருந்தது.

ஆனால், தோழர் சுகுவை அந்த கட்சி யிலிருந்து விலகுமாறு கேட் கின்ற நிலையில் தாங்கள் இல்லை என்றும் அதனைச் செய்யவே முடி யாது என்றும் ஆர்.ஆர். கூறிய போது அவரது உண்மையான நட் பையும் மனிதத் தன்மையையும் அறியமுடிந்தது.

சுகுவிடம் பேசுகின்ற வேலையை இந்த ஊர்க்குருவி பொறுப் பெடுத்து, அவருடன் பேசியபோது அவர் சொன்னது, “சித்தர் கேட் டால் கொடுத்துவிடுவதில் தனக்கு எதுவும் இல்லை” என்று.

ஆனால் சித்தார்த்தனோ, எந்தக் கட்டத்திலும் அவரை நீங்கள் வில குங்கள் என்று சொல்ல முடியாது என்று திடமாக மறுத்துவிட, ஆர். ஆர். அதற்கு சிறிதளவு கூட சம்மதம் இல்லாமலே பின்னர் அவரோடு பேசவேண்டிவந்தது.

கடைசியில் சுகு அந்தக் கட்சியி லிருந்து வெளியேறியபோது, ஆர்.ஆர். கூறியிருந்தமை இப் போதும் ஞாபகம் இருக்கின்றது. “அண்ணே, முதல் தேர்தலில் அவர் நம்மோடு இல்லாவிட்டாலும், அதற்கு அடுத்த தேர்தலிலாவது சுகுவின் கட்சியை நாம் இணைத்தே ஆகவேண்டும்”.

இந்தச் சம்பவம் சித்தார்த்தன், மற்றும் ஆர்.ஆர். என்ற இருவர் மீதும் இந்த ஊர்க்குருவிக்கு இருந்த மரியாதையை மேலும் உயர்த்தியது.

அதுபோலவே, வடக்கு மாகாண சபையில் முக்கிய அமைச்சராக இருந்த ஒருவர் பின்னாட்களில் ஒரு தடவை மாகாண சபையிலிருந்த வர்கள் பற்றி பேசிக்கொண்டிருந்த போது சொன்னார்:

“தமது அணியில் இருந்தவர்க ளில் மிக நேர்மையானவர் என்றால், புளொட் சிவநேசனைத்தான் சொல்வேன்” என்று. பின்னாளில் வடக்கு மாகாண விவசாய அமைச்ச ராக இருந்த சிவநேசன் பற்றி அவ ரைப்போலவே பலரும் சொல்லி யதை கேட்விப்பட்டிருக்கின்றேன்.

இன்றைய அரசியல்வாதிகளில் அந்த மூவரும் முன் உதாரணமான வர்கள் என்பதை ஆர்.ஆர். பற்றிய இந்தப் பத்தியில் பதிவுசெய்யவேண் டியது அவசியம் என்று நினைக்கின் றேன்.

**- ஊர்க்குருவி.**

## ஆர்.ஆரின் உடலுக்கு நீதிபதி இளஞ்செழியன் சுமந்திரன், டக்ளஸ் உள்ளிட்ட பலரும் அஞ்சலி!

கொழும்பு, பெப். 25

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் மூத்த போராளிகளில் ஒருவரும், புளொட் அமைப்பின் சிரேஷ்ட பிரதித் தலைவரு மான ஆர்.ஆர் எனப்படும் இராகவனின் (வேலாயுதம் நல்லநாதர்) உடல் கொழும் பில் அஞ்சலிக்காக வைக் கப்பட்டது.

பம்பலப்பிட்டியிலுள்ள புளொட் அமைப்பின் அலு வலகத்தில் உடல் அஞ்ச லிக்காக வைக்கப்பட்டது.

இதன்போது, மேல்நீதி மன்ற நீதிபதி இளஞ்செழி யன், மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர்க ளான செல்வம் அடைக்கல நாதன், எம்.ஏ.சுமந்திரன் மற்றும் கட்சித் தலைவர் கள், ஊடகவியலாளர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பெருமளவானோர் திரண்டு அஞ்சலி செலுத் திய வண்ணம் உள்ளனர். (அ)





## ஜப்பானில் வேலை தருவதாக 100 கோடி ரூபா பணம் மோசடி

### பெண் ஒருவர் கைது

கொழும்பு, பெப். 25

ஜப்பான் நாட்டில் வேலைவாய்ப்பு பெற்று தருவதாக கூறி 100 கோடி ரூபா பண மோடி செய்த குற்றச்சாட்டில் பெண் ஒரு வர் கைது செய்யப்பட்டுள் ளார்.

இவ்வாறு கைது செய் யப்பட்டவர் கடவத்தை பிரதேசத்தை சேர்ந்த 51 வய துடைய பெண்ணாவார்.

இவர் ஜப்பான் நாட் டில் வேலைவாய்ப்பு பெற் றுத் தருவதாக கூறி 250 இற் கும் மேற்பட்ட நபர்களிட மிருந்து 100 கோடி ரூபா பணத்தை மோசடி செய் துள்ளதாகவும் பின்னர் அநுராதபுரம் , புத்தளம் மற்றும் குருநாகல் ஆகிய பிரதேசங்களில் தலைமறை வாகியிருந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவருக்கு எதிராக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணிய கத்தின் விசேட விசார ணைப் பிரிவில் 180 முறைப் பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

சந்தேக நபருக்கு எதி ராக மஹர நீதிவான் நீதி மன்றத்தில் 36 பிடியாணை களும் கடுவெல நீதிவான் நீதிமன்றத்தில் 11 பிடி யாணைகளும் பிறப்பிக்கப் பட்டிருந்த நிலையில் இவர் பல்வேறு பிரதேசங்களில் தலைமறைவாகி இருந்த காரணத்தினால் அவரை கைது செய்ய முடிய வில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பில் சந்தேக நபர் நீர்கொழும்பு - சிலாபம் வீதியில் உள்ள வீடொன் றில் தலைமறைவாகி மறைந்திருந்த நிலையில் கைது செய்யப்பட்டுள் ளார். (அ)

## 40 வீத இலங்கையர்களுக்கு கடவுச்சீட்டு

கொழும்பு, பெப். 25

இலங்கையின் குடிவர வுத் திணைக்களத்தின் அறிகையின்படி, கிட்டத் தட்ட 92 இலட்சம் பேருக்கு கடவுச்சீட்டுகள் வழங்கப் பட்டுள்ளன. இது இலங் கையின் சனத்தொகையின் 40 சதவீதமாகும்.

நாட்டின் மொத்த சனத் தொகை 2.2 கோடியை அண்மித்துள்ளதாகவும் அவர்களில் கிட்டத்தட்ட பாதி பேர் வெளிநாட்டு கடவுச்சீட்டுகளை பெற் றுள்ளதாகவும் திணைக் களம் குறிப்பிடுகிறது. (அ)

## இராணுவ கோப்ரல் கைது!

கொழும்பு, பெப். 25

மஹாபாகே பிரதேசத் தில் பெப்ரவரி 21 ஆம் திகதி இடம்பெற்ற துப் பாக்கிச் சூட்டுச் சம்பவத்து டன் தொடர்புடைய பிர தான சந்தேகநபர் ஒருவரை பொலிஸ் விசேட அதிர டிப்படையினர் நேற்றுக் காலை கைது செய்துள்ள னர்.

சந்தேக நபர் செங்கலடி இராணுவ முகாமில் உள்ள 4 ஆவது கெமுனு ஹேவா படைப்பிரிவில் கடமை யாற்றும் கோப்ரல் ஒருவர் என தெரிவிக்கப்பட்டுள் ளது.

மட்டக்களப்பு - செங் கலடி முகாமில் இருந்து பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் குறித்த நபரை கைது செய்ய செல் லும்போது அவர் தப்பிச் சென்றுள்ளார்.

பின்னர் இராணுவப் புலனாய்வு அதிகாரிகள் சந்தேக நபரை அம்பாறைப் பகுதியில் வைத்து கைது செய்தனர்.

பெப்ரவரி 21 ஆம் திகதி, ஒழுங்கமைக்கப் பட்ட குற்றவாளியாகக் கருதப்படும் ‘வெலே சாரங்க’வின் உறவினரான ‘உக்குவா’, திட்டமிட்ட குற்றவாளியாகக் கருதப் படும் ‘டுபாய் நிபுன’ குழு வினரால் சுட்டுக் கொல்லப் பட்டார்.

இந்த துப்பாக்கிச் சூட் டுச் சம்பவத்தில் கைதான பிரதான சந்தேக நபரும் மேலும் இரு முன்னாள் இராணுவ வீரர்களும் அங்கு சென்றிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# இந்தியாவுக்கு வழங்கப்படவுள்ளன பொருளாதார மத்திய நிலையங்கள்

## தேசிய விவசாய சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 29

நாட்டின் பிரதான பொருளாதார மத்திய நிலையங்கள் சிலவற்றை இந்திய நிறுவனம் ஒன்றிக்கு வழங்குவதற்கு அரசாங்கம் தயாராக உள்ளதாக தேசிய விவசாய சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

கொழும்பில் இன்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அந்த சங்கத்தின் தலைவர் அனுராத தென்னக்கோன் இதனைத் தெரிவித்தார்.

அதன்படி, நுவரெலியா, தம்புள்ளை, நாரஹேன்பிட்டி, வெலிசறை, எம்பிலிப்பிட்டி மற்றும் தம்புத்தேகம ஆகிய 6 பொருளாதார மத்திய நிலையங்களே வெளிநாட்டு நிறுவனம் ஒன்றுக்கு வழங்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

# 111 ஆமை முட்டைகளுடன் ஒருவர் கைது!

கொழும்பு, பெப். 25

கொஸ்கொட பிரதேசத்தை சேர்ந்த 41 வயதுடைய ஒருவர் 111 ஆமை முட்டைகளை வைத்திருந்த குற்றச்சாட்டில் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த தகவலின் பேரில் கொஸ்கொட பாலத்திற்கு அருகில் உள்ள கடற்கரை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (அ)

# தீ பிடித்து எரிந்தது வீடு பெண் உடல் கருகி பலி!

கொழும்பு, பெப். 25

புத்தளம், ஆராய்ச்சிக்கட்டுவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கிரிவல்கெல பகுதியில் வீடொன்று தீப்பிடித்து எரிந்ததில் பெண்ணொருவர் உடல் கருகி பலியாகியுள்ளார்.

கிரிவல்கெல பிரதேசத்தைச் சேர்ந்த 65 வயதுடைய வயோதிப பெண்ணொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். நேற்று முன் தினம் இரவே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த பெண் தனது கணவருடன் தென்னை ஓலையினால் வேயப்பட்ட சிறிய வீட்டில் வசித்து வந்துள்ளதாகவும் குறித்த வீடு நேற்று முன் தினம் தீப்பற்றியதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தீப்பற்றிய போது இவரது 70 வயதான கணவர் வெளியேறி உயிரைக் காப்பாற்றியுள்ளார்.

அவர் தற்போது வைத்தியசாலையில் உள்ளார்.

தீ விபத்து தொடர்பில் ஆராச்சிக்கட்டுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# தனது மாமியாரை அடித்து கொலை செய்த மருமகன்!

மட்டக்களப்பு, பெப். 25

மட்டக்களப்பு வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள வாகனேரி பிரதேசத்தில் மருமகன் மாமியாரை அடித்துக் கொலை செய்துவிட்டுத் தப்பி ஓடிய சம்பவம் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை இரவு 9 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

வாகனேரி கூளையடிச் சேனையைச் சேர்ந்த 45 வயதுடைய வைரமுத்து கோமதனி என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவரின் மகள் திருமணம் முடித்து இரு குழந்தைகள் உள்ள நிலையில் தொழில் வாய்ப்புக்காக வெளிநாடு சென்றுள்ளார். அவரது தாயாருடன் குழந்தைகள் மற்றும் அவரது கணவன் வாழ்ந்து வருகின்றனர்.

இந்த நிலையில் மருமகன் மதுபோதையில் மாமியாருடன் தினமும் சண்டையிட்டு வந்தார் எனக் கூறப்பட்டது. சம்பவ தினமான நேற்று முன் தினம் இரவும் மாமியார் வீட்டில் தனிமையில் இருந்தபோது மது போதையில் வந்த மருமகனுக்கும் மாமியாருக்கும் இடையே சண்டை ஏற்பட்டது.

மாமியாரின் தலை மீது பாரிய பொருள் ஒன்றால் தாக்கியதையடுத்து அவர் உயிரிழந்தார். 30 வயதுடைய மருமகன் அங்கிருந்து தப்பி ஓடியுள்ளார் எனப் பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

அயலவர்கள் பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்தமையையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தமையுடன் நீதிமன்ற அனுமதியைப் பெற்று சடலத்தை பிரேத பரிசோதனைக்கு வைத்தியசாலையில் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளை மேற் கொண்டிருந்தனர்.

# மாந்தீவு தொழுநோய் வைத்தியசாலையை சிறை திணைக்களத்துக்கு வழங்க திட்டம்?

மட்டக்களப்பு, பெப். 25

மட்டக்களப்பு - மாந்தீவு தொழுநோய் வைத்தியசாலைக்கு நீதி அமைச்சர் கலாநிதி விஜேதாச ராஜபக்ஸ உள்ளிட்ட குழுவினர் நேற்று முன் தினம் விஜயம் மேற்கொண்டனர்.

இந்த வைத்தியசாலையை சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கும் புனர்வாழ்வு பணியகத்திற்கும் கையளிப்பது தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மாந்தீவு தொழுநோய் வைத்தியசாலைக்கு நீதி அமைச்சருடன் சிறைச்சாலைகள் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அநுராத ஜயரத்ன, இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் உள்ளிட்டோரும் சென்றிருந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் 98 ஏக்கர் நிலப்பரப்பில் வவுணதீவு வாவியின் நடுவே மாந்தீவு அமைந்துள்ளது.

இங்கு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக் குரிய தொழுநோய் பிரிவும் நோயாளர்கள் விடுதியும் உள்ளன.

நீதி அமைச்சர் கலாநிதி விஜேதாச ராஜபக்ஸ உள்ளிட்ட குழுவினர் வைத்தியசாலை, நோயாளர் விடுதி, பழமை வாய்ந்த கட்டடங்கள், மத ஸ்தலங்கள் உள்ளிட்டவற்றை விமானப்படையினரின் உதவியுடன் பார்வையிட்டனர். (அ)

# குறைந்த விலையில் நெல் கொள்வனவு!

## விவசாயிகள் குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 25

அரிசி விலைகள் உயர்ந்தாலும் நெல் ஆலை உரிமையாளர்கள் மிகக் குறைந்த விலைக்கு நெல்லை கொள்முதல் செய்வதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இதனால் அறுவடை செய்யப்பட்ட நெல் விற்பனை செய்வதில் கடும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, நெல் விற்பனையில் விவசாயிகளுக்கு அநீதி இழைக்கப்படுவதாக அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனம் கூறியுள்ளது.

மேலும் நெல் விலையை அதிகரிக்கவேண்டுமாயின் அரிசியின் விலையை மேலும் அதிகரிக்கவேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# மத்திய வங்கியின் உயர் அதிகாரிகளை விசாரிக்கவுள்ள பாராளுமன்ற நிதிச்சபை!

கொழும்பு, பெப். 25

நாட்டில் பொருளாதார நெருக்கடி நீடிக்கும் நிலையில், இலங்கை மத்திய வங்கியின் அதிகாரிகள் 70 வீதத்தினால் சம் பளத்தை அதிகரித்துள்ளதாக கூறப்படும் சம்பவம் தொடர் பில் இலங்கை மத்திய வங்கி யின் உயர் அதிகாரிகளை விசாரிப்பதற்கு பாராளுமன்றத்தின் நிதிச்சபை உள்ளிட்ட பல குழுக்கள் தீர்மானித்துள்ளன.

இதேவேளை, குறித்த சம்பள அதிகரிப்பு தொடர்பில் ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் முறைப்பாடு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தவிடயம் தொடர்பில், ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பாராளுமன்றில் எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர்.

இதேநேரம், இலங்கை மத்திய வங்கியின் அதிகாரிகளை பாராளுமன்றத்துக்கு வரவழைத்து விசாரணைக்குட்படுத்த வேண்டும் என எதிர்க்கட்சியின்



பிரதம அமைப்பாளர் லக்ஷ்மன் கிரியெல்ல சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தநிலையில், இலங்கை மத்திய வங்கி அதிகாரிகள் தற்போது அவர்களது வேதனத்தை அதிகரிக்காமல் இருப்பது சிறந்ததாகும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். (அ)

# 122,500 மில்லியன் ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் ஏல விற்பனை!

கொழும்பு, பெப். 25

122,500 ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்கள், எதிர்வரும் 28ஆம் திகதி ஏல விற்பனையின் ஊடாக வழங்கப்படவுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இதன்படி, 91 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 35,000 மில்லியன் ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும்,

182 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 47,500 மில்லியன் ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும்,

364 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 47,000 மில்லியன் ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் ஏல விற்பனையின் ஊடாக வழங்கப்படவுள்ளதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது.

# முள்ளந்தண்டு பிரச்னையால் பாதிப்படையும் மாணவர்கள்!

## புத்தகப் பையின் நிறையே காரணம்

கல்வித்துறையில் பாடத்திட்டங்கள் விரிவடைந்து வருவதன் காரணமாக மாணவர்கள் நாளாந்தம் பாடசாலைக்கு கொண்டு செல்லவேண்டிய பாடப் புத்தகங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

குறித்த விடயம், நீண்ட காலமாக சமூகத்தில் பேசப் பொருளாக காணப்பட்டு வருகின்றது.

எனினும் இதற்கு உரிய தீர்வை வழங்க கல்வித்துறை அதிகாரிகள் தவறியுள்ளமை கவலைக்குரிய விடயமாகும்.

இந்தநிலையில், முள்ளந்தண்டு பிரச்சினைகள் காரணமாக பாதிக்கப்பட்ட சிறார்கள் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வரும் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.

அதேநேரம், பாடசாலை மாணவர்களின் புத்தக பையின் நிறை அதிகரிப்பால் சிறார்களுக்கு ஏற்படும் பிரச்னைகளை தவிர்க்க ஏற்றுக்கொள்ளப்பட்ட வழிமுறைகள் காணப்படுவதாக பொரளை லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் எலும்பு அறுவைச் சிகிச்சை நிபுணர் ஆர். ஞானசேகரம் தெரிவித்துள்ளார். (அ)

# ரணிலை வீழ்த்துவதற்கு வியூகம் வகுக்கவேண்டும்!

## கோருகின்றார் ஹிருணிகா

கொழும்பு, பெப். 25

**கட்சிக்குள் உள்ளவர்கள் ஒருவருக்கொருவர் முரண்பட்டுக்கொண்டிருப்பதை விட, எதிர்க்கட்சிகளின் பிரதான எதிரியான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வீழ்த்துவதற்கான வியூகத்தை வகுப்பதே காலத்துக்கு பொருத்தமானதாகும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர தெரிவித்துள்ளார்.**

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஐக்கிய மக்கள் சக்திக்குள் இரட்டை நிலைப்பாட்டில் உள்ளவர்கள் தொடர்பில் நான் பல சந்தர்ப்பங்களில் பகிரங்கமாக தெரிவித்திருக்கின்றேன். காலையில் எதிர்க்கட்சித் தலைவருடன் இருப்பவர்கள் மாலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து பேசுகின்றனர்.

எனினும் இவ்வாறானவர்கள் தொடர்பில் தனிப்பட்ட ரீதியில் தனக்கு தெரியப்படுத்துமாறு எதிர்க்கட்சி தலைவர் வழங்கிய ஆலோசனைக்கமைய நான் கட்சி செயற்குழுக் கூட்டத்தில் இது தொடர்பில் தெளிவுபடுத்தியிருக்கின்றேன்.

எனவே கட்சிக்குள் உள்ள பிரச்னைகளை இவ்வாறு செயற்குழுவின் மூலம் தீர்த்துக்கொள்ள முடியும் என்று நம்புகின்றோம்.

ஆனால் கட்சிக்குள் ஒருவரோரொருவர் மோதிக் கொண்டிருக்காமல் பிரதான எதிரியான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தோற்கடிப்பதற்கான வியூகத்தை அனைவரும் இணைந்து வகுக்க வேண்டும். சகல எதிர்க்கட்சிகளும் இணைந்து தோற்கடிக்க வேண்டிய நபர் ரணில் விக்கிரமசிங்க ஆவார்.

எனவே அதற்கு அனைவரும் தயாராக வேண்டும்.

அதனை விடுத்து கட்சிக்குள் முரண்பட்டுக் கொண்டிருந்தால் அது அனைவரையும் மன உளைச்சலுக்கு உள்ளாக்கும்.

நான் தனிப்பட்ட ரீதியில் அறிந்து வைத்துள்ள பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு உடனுக்குடன் கோபம் வருவதைப் போன்று, அக்கோபம் மிக விரைவில் காணாமல் போய்விடும்.

எனவே அவர் விரைவில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைவார் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. நேர்மையான அதிகாரியான அவர் வேறு எந்த தரப்புடனும் இணைய மாட்டார் என்பதை நான் உறுதியாகக் கூறுகின்றேன் - என்றார். (அ)

# நாடளாவிய ரீதியில் 615 பேர் கைது!

கொழும்பு, பெப். 25

நாடளாவிய ரீதியில் கடந்த 24 மணித்தியாலங்களில் பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்ட விசேட நடவடிக்கைகளில் 615 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் குற்றங்களுடன் தொடர்புடைய 499 சந்தேகநபர்கள் மற்றும் குற்றப் பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட பட்டியலில் இருந்த 116 சந்தேக நபர்கள் உட்பட மொத்தம் 615 சந்தேக நபர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது 125 கிராம் 992 மில்லி கிராம் ஹெராயின், 162 கிராம் பனி 361 மி.கி, கஞ்சா 01 கிலோ 157 கிராம், மாவா 328 கிராம் 55 மாத்திரைகள், 6,817 கஞ்சா செடிகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மரக்கறி விலை வீழ்ச்சி



கொழும்பு, பெப். 25

பேலியகொடை புதிய மனிங் சந்தையில் மரக்கறிகளின் விலை மிகவும் குறைவடைந்துள்ளது.

அதன்படி, விலை அதிகரித்துக் காணப்பட்ட ஒரு கிலோ கரட் 350 ரூபாவாக விலை குறைவடைந்துள்ளது.

ஒரு கிலோ தக்காளி மற்றும் போஞ்சிக்காய் 450 ரூபாவாகவும், லீக்ஸ் 300 ரூபாவாகவும் விலை குறைவடைந்துள்ளது.

இதேவேளை, குடை மிளகாய் மற்றும் பச்சை மிளகாய் ஆகியவற்றின் விலைகள் 700 ரூபாவாகவும், 600 ரூபாவாகவும் சற்று அதிகரித்துள்ளது. ஒரு கிலோ இஞ்சி 1200 ரூபாவாகும்.

ஆனால், ஒரு கிலோ கோழி இறைச்சி 1,150 ரூபாவாகவும், தோல் நீக்கப்பட்ட கோழி இறைச்சி 1,100 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகிறது. (அ)

# கைத்தொலைபேசியை திருடி விற்றவர் கைது!

வவுனியா, பெப். 25

வவுனியா நகரப் பகுதியில் உள்ள வியாபார நிலையம் ஒன்றில் கைத்தொலைபேசி திருடி விற்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, பழைய பஸ் நிலையப் பகுதியில் உள்ள தனியாருக்கு சொந்தமான ஊடக நிறுவனம் ஒன்றில் சுமார் 3 இலட்சம் ரூபாய் பெறுமதியான கைத்தொலைபேசி ஒன்று திருட்டுப் போயுள்ளதாக வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

முறைப்பாட்டையடுத்து தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜெயக்கொடி தலைமையிலான பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது குறித்த கைத்தொலைபேசி நகரப் பகுதியில் உள்ள கடை ஒன்றில் விற்பனை செய்யப்பட்ட நிலையில் மீட்கப்பட்டதுடன், குறித்த தொலைபேசியை திருடி விற்ற நபரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் வவுனியா, சகாயமாதாபுரம் பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய நபராவார்.

கைது செய்யப்பட்ட நபரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ)

# யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர்களின் புறக்கணிப்பு முடிவு

யாழ்ப்பாணம், பெப். 25

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளில் இருந்து ஒதுங்கி இருக்க எடுத்த தீர்மானத்தை தற்காலிகமாக கைவிட்டனர்.

விஞ்ஞான பீடத்தில் கல்வி பயிலுகின்ற மாணவர்களின் வரவு பிரச்சினைகள் தொடர்பில் பல்கலைக்கழக விசேட நிர்வாக கூட்டத்தில் கலந்துரையாடுவதற்கு விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியத்தால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை நிராகரிக்கப்பட்ட நிலையில் நேற்று முன் தினம் முதல் போராட்டம் முன்னெடுக்கப்பட்ட நிலையில் குறித்த போராட்டம் கைவிடப்பட்டது.

இது தொடர்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், எம்மால் முன்னெடுக்கப்பட்ட கல்விப் புறக்கணிப்பு போராட்டத்தை தற்காலிகமாக முடிவுக்குக்கொண்டு வருகின்றோம்.

அத்துடன் கீழ்க்காணும் முறைப்பாடுகளை ஆதாரபூர்வமாக விஞ்ஞான பீட நிர்வாகத்துக்கு நிரூபித்துள்ளோம்.

1.அனேகமான இரசாயனவியல் துறை மாணவர்கள் மருத்துவச் சான்றிதழ்கள் இன்றி அதிகளவு விடுமுறைகளில் இருந்தும் மன்னிப்பு அடிப்படையில் பரீட்சை எழுத அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2. விரிவுரைகள் நடத்தப்பட்ட பாடவேளைகள், நியமமாக நடத்தப்பட வேண்டிய மணித்தியாலங்களை விட குறைவாகக் காணப்படுகின்றமை.

3. கற்பிக்கப்படாத பாடவேளைகளுக்கு வரவு கவனத்தில் எடுக்கப்பட்டமை.

மேற்குறிப்பிடப்பட்ட தவறுகள் நிர்வாகத்தரப்பிடம் இருந்தும் மாணவர்களின் வரவுகளை வைத்து பல மாணவர்களை பரீட்சைகளுக்கு தோற்ற அனுமதி மறுக்கப்பட்டமை மாணவர்களுக்கு இழைக்கப்பட்ட மாபெரும் அநீதி ஆகும். எனவே இம்முறை பரீட்சைக்கு வரவுகள் கவனத்தில் எடுக்கப்படாமல் அனைத்து மாணவர்களையும் முதல் தவணை பரீட்சைகளுக்கு தோற்ற அனுமதிக்குமாறு விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியம் சார்பாக தெளிவாக தெரிவிக்கின்றோம்.

தவறும்பட்சத்தில் விஞ்ஞானபீட நிர்வாகத்திற்கு எதிரான போராட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்பதையும் அறித்தருகின்றோம். - என்றுள்ளது. (அ)

# மின் கட்டணக் குறைப்பு; பரிந்துரை அடுத்த வாரம்

கொழும்பு, பெப். 25

மின் கட்டணத்தை குறைப்பதற்கான தீர்மானத்தை அடுத்த வாரத்திற்குள் இலங்கை மின்சார சபைக்கு தெரிவிக்கவுள்ளதாக பொது பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

மின் கட்டணத்தை குறைப்பதற்கான யோசனை இலங்கை மின்சார சபையினால் வழங்கப்பட்டதாக பொது பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்தது.

குறித்த யோசனையை மீளாய்வு செய்து தரவுகள் சரிபார்க்கப்பட்ட பின்னரான பரிந்துரைகளை அடுத்த வாரத்திற்குள் இலங்கை மின்சார சபைக்கு வழங்கவுள்ளதாக ஆணைக்குழு குறிப்பிட்டது.

PUCSL

சில துறைகளில் கடந்த ஒக்டோபர் மாதம் அதிகரிக்கப்பட்ட மின் கட்டணமானது அதே வீதத்தில் குறைக்கப்படுமென மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர அண்மையில் தெரிவித்தார்.

வீடுகள், மதவழிபாட்டுத் தலங்கள், அரச அலுவலகங்கள் மற்றும் சுற்றாடல் ஹோட்டல்கள் உள்ளிட்டவற்றுக்கு அதிகரிக்கப்பட்ட மின் கட்டணம் அதே வீதத்தில் குறைக்கப்படுமென அவர் அறிவித்தார். (அ)

# சிசுவை குழி தோண்டி புதைத்த தாய் கைது!

கொழும்பு, பெப். 25

ஹற்றன் -வட்டவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வட்டவளை தோட்டத்தில் வீடு ஒன்றின் பின் பகுதியில் குழி தோண்டி புதைக்கப்பட்டிருந்த சிசு ஒன்றின் சடலம் மீட்கப்பட்டதாக வட்டவளை பொலிஸார் தெரிவித்தனர்.

வட்டவளை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய சம்பவ இடத்திற்கு விரைந்து செயல்பட்ட பொலிஸார் துணி ஒன்றில் சுத்தி புதைக்கப்பட்டிருந்த சிசுவின் சடலத்தை மீட்டனர்.

சிசுவை பெற்ற தாய் தலைமறையாகிருந்த நிலையில் அவரை கொழும்பில் வைத்து பொலிஸார் கைது செய்தனர். இந்த சம்பவத்துடன் தொடர்புடைய அந்த பெண்ணின் கணவர், மகள் ஒருவர் மற்றும் குழி தோண்ட உதவிய பக்கத்து வீட்டுக்காரரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சம்பவத்தில் தலைமறைவாகியிருந்த தாய் டயகம பிரதேசத்தை சேர்ந்த 37 வயதுடையவர் என தெரிய வந்துள்ளது.

இந்நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ள சிசு முறைகேடாக பெற்றெடுக்கப்பட்ட சிசுவா? சிசு பிறந்தவுடன் கொலை செய்யப்பட்டு வீட்டின் பின்பகுதியில் குழி தோண்டி புதைக்கப்பட்டதா என்ற பல்வேறு கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை செய்து வருகின்றனர். (அ)

ஈழநாடு
Eelanadu
25.02.2024 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், மாசி 13

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# யுத்தக் குற்றங்களின் கதைகள் முடிகின்றனவா?

சஜித் பிரேமதாசவின் ஐக்கிய மக்கள் சக்தியில் தொடர்ந்தும் ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகள் இணைந்து வருகின்றனர். இதன் தொடர்சியாக, தற்போது இறுதி யுத்தத்தின் போது போர்க் குற்றங்களில் ஈடுபட்டார் என குற்றஞ்சாட்டப்பட்ட இராணுவ அதிகாரி ஒருவர் சஜித்துடன் இணைந்திருக்கின்றார். இவர் சவேந்திர சில்வாவின் தலைமையில் இறுதி யுத்தத்தின் போது பணியாற்றிய ஒருவர். இவர் தலைமை தாங்கிய அதிரடிப்படையினர் மீது, பாலியல் வன்புணர்வு உட்பட பல பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

இவ்வாறு இணைந்துகொண்ட இராணுவ அதிகாரி, ஐக்கிய மக்கள் சக்தியின் ஊழல் ஒழிப்பு மற்றும் அமுலாக்கப் பிரிவின் பிரதானியாகவும், நியமிக்கப்பட்டிருக்கின்றார். இது எதனை உணர்த்துகின்றது?

ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகள் ஏன் சஜித் பிரேமதாச அணியுடன் இணைகின்றனர்? முன்னர் அவ்வாறான பலரது கூடாரமாக ராஜபக்ஷக்களின் சிறிலங்கா பொதுஜன பெரமுன மட்டுமே இருந்தது. ராஜபக்சக்கள் மக்கள் மத்தியில் அந்நியப்பட்டுள்ளதாக நம்பப்படும் சூழலில், இராணுவ அதிகாரிகளின் கூடாரமாக ஐக்கிய மக்கள் சக்தியே மாறிவருகின்றது. இவ்வாறானவர்களை உள்வாங்கிக் கொள்வதில் சஜித் பிரேமதாசவும் எவ்வித தயக்கமும் காண்பிக்கவில்லை - ஏன்?

2009இல் யுத்தம் முடிவுற்ற போது, யுத்தத்தின் போது, இடம்பெற்றதாக நம்மப்படும் போர்க் குற்றங்கள் - மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் பிரதான பேசுபொருளாக இருந்தது. 2012இல், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்க ஆதரவு பிரேரணை நிறைவேற்றப்பட்ட பின்புலத்தில், தமிழ் தேசிய அரசியல் உரையாடலில் நீதி மட்டுமே, பிரதான பேசுபொருளானது - வருடங்கள் தோறும் ஜெனிவாவிற்கு செல்லுதல் ஒரு பெரும் சாதனை போன்று நோக்கப்பட்டது. அதனடிப்படையில் ஒருவரை ஒருவர் விமர்சிப்பதில், தமிழ் கட்சிகள் தங்களுக்குள் முட்டி மோதிக் கொண்டன. ஆனால் தற்போது தமிழ் மக்களின் நீதிக்கான பயணம் கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகிவிட்டது.

சஜித் பிரேமதாசவின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, ஓய்வு நிலை இராணுவ அதிகாரிகளின் கூடாரமாக மாறிவருவதை இந்த அடிப்படையில்தான் நோக்க வேண்டும். சஜித் பிரேமதாச, தமிழ் மக்களின் நண்பர் என்னுமடிப்படையில்தான், கடந்த ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்கள் அவருக்கு வாக்களித்தனர். அவ்வாறு வாக்களிக்குமாறுதான் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் தமிழ் மக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியது.

தமிழ் மக்களின் உணர்வுகளை தென்னிலங்கை தலைவர்கள் ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லையா - அல்லது, யுத்தத்தை வழிநடத்திய இராணுவத் தளபதி பொன்சேகாவிற்கே வாக்களித்த மக்கள் தொடர்பில் எதற்காக அலட்டிக் கொள்ள வேண்டுமென்று சஜித் எண்ணுகின்றாரா? அவ்வாறு சிந்தித்தால் அதில் குற்றம் காண்பதும் கடினம்தான். இவ்வாறான விடயங்களை தூர நோக்கில் ஆராயாமல் சம்பந்தன் அணி மேற்கொண்ட வரலாற்று தவறுதான் இவை அனைத்திற்குமான காரணமா?

கடந்த பதின்நான்கு வருடகால தமிழர் நகர்வுகள், விடயங்களை முன்நோக்கி நகர்த்தவில்லை - அதேவேளை இலங்கையின் மீதான சர்வதேச அழுத்தங்களையும் முன்நோக்கி நகர்த்தவும் இல்லை. ஆனால் சர்வதேச விவகாரங்களை கையாளுவதான ஒரு கதையை கூறிக்கொண்டனர் - அவ்வாறாயின் தமிழர் அரசியல் எதை நோக்கி நகர்த்தப்பட்டிருக்கின்றது? இலங்கையின் மீதான மனித உரிமை சார்ந்த அழுத்தங்களை கண்டு தென்னிலங்கை தலைவர்கள் எவருமே அஞ்சவில்லை என்பதைத்தானே நிலைமைகள் காண்பிக்கின்றன.

இப்போது தமிழ் கட்சிகள் என்ன செய்யப் போகின்றன? இதுவரை முன்வைத்து வந்த நீதிக்கான கோரிக்கைகள், இறுதி யுத்தத்தின் போது இடம்பெற்றதாக கூறப்பட்ட போர்க் குற்றங்கள், மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள், அதற்கும் மேலாக இனப்படுகொலை வாதம் - இவை அனைத்திற்கும் என்ன நடந்தது? ‘முதல் கோணல் முற்றிலும் கோணல்’ என்பது போல், சரத் பொன்சேகாவிற்கு தமிழ் மக்கள் வாக்களித்தமைதான், அனைத்துத் தவறுகளுக்குமான ஆணிவேரா?

## கீரிமலை சிவன் மகோற்சவம் நேற்று ஆரம்பம்



*யாழ்ப்பாணம், பெப். 25*

*பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றான ஈழமணித் திருநாட்டின் வடக்கே அமைந்துள்ள கீரிமலை பதியுறை அருள் மிகு நகுலாம்பிகை சமேத நகுலேஸ்வரர் ஆலய வருடாந்த மகோற்சவ பெருவிழாவானது நேற்று முற்பகல் 10.00 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.*

*தொடர்ந்தும் 15 நாட்கள் இடம்பெறவுள்ள மகோற்சவத்தில் 07 ஆம் திகதி பெரிய சப்பறத் திருவிழாவும், மறுநாள் காலை இரதோற்சவம் இடம்பெறவுள்ளதுடன் இரவு சிவராத்திரி விசேட பூசைகளுடன் ஆன்மீகம் சார் நிகழ்ச்சியும் இடம்பெற்று மறுநாளான 09 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (அ)*

## ஹரின் பெர்ணான்டோவின் கருத்துக்கு சு.க. கண்டனம்!

*கொழும்பு, பெப். 25*

*“இலங்கையானது இந்தியாவின் பிராந்தியம் அல்ல. அவ்வாறு பிராந்தியம் என அமைச்சர் கருத்து வெளியிட்டிருந்தால் சுதந்திரக் கட்சி அதனை வன்மையாகக் கண்டிக்கின்றது.” - என்று சுதந்திரக் கட்சியின் பதில் பொதுச் செயலாளரான துஷ்மந்த மித்ரபால தெரிவித்தார்.*

*இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,*

*அமைச்சர் (ஹரின் பெர்ணான்டோ) எந்த நோக்கில் அந்த கருத்தை வெளியிட்டார் என தெரியவில்லை. அது பற்றி நான் முழுமையாக ஆராயவில்லை. எனினும், இலங்கையென்பது இந்தியாவின் பிராந்தியமாகியைடாது.*

*அதேபோல ஶ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இந்திய விரோத போக்கை கடைப்பிடிக்கும் கட்சி அல்ல. பொருளாதாரம் சார்ந்த விடயங்களின்போது ஒத்துழைத்து செயற்படலாம்- என்றார்.*

*அதேவேளை, சுதந்திரக் கட்சிக்கு எதிராக தொடுத்துள்ள வழக்கை தயாசிறி ஜயசேகர நீக்கிக்கொண்டால் அவர் சுதந்திரக் கட்சி தலைமையிலான கூட்டணியில் இணையலாம். அதற்கு தடை இல்லை எனவும் துஷ்மந்த மித்ரபால கூறினார். (அ)*

## குடை மிளகாய் விளைச்சல் அதிகரிப்பு

*கொழும்பு, பெப். 25*

*தற்போது நாட்டின் பல பகுதிகளில் குடை மிளகாயின் விளைச்சல் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*வெலிமடை, ஊவா பரணகம, கெப்படிபொல மற்றும் பொரலந்த ஆகிய பகுதிகளில் குடை மிளகாயின் விளைச்சல் அதிகரித்துள்ளது.*

*தற்போது வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில் சந்தையில் குடை மிளகாய்க்கான கேள்வி அதிகரிக்கும் சாத்தியம் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)*

## மத்திய வங்கி ஆளுநர் வடக்குக்கு!

*கிளிநொச்சி, பெப். 25*

*இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள மத்திய வங்கியின் பிராந்திய அலுவலகத்திற்கு நேற்று விஜயம் மேற்கொண்டார்.*

*எதிர்வரும் திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெறும் வங்கி ஊழியர்களுக்கான செயலமர்வில் கலந்து கொள்வதற்காக வருகை தந்தபோதே கிளிநொச்சி அறிவியல் நகரில் உள்ள பிராந்திய அலுவலகத்திற்கு அவர் சென்றார். (அ)*

## இலங்கை ரூபாவின் பெறுமதி உயர்வு

*கொழும்பு, பெப். 25*

*இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையின் படி, இந்த வருடத்தில் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 3.9 வீதத்தால் வலுவடைந்துள்ளது.*

*யூரோ அலகுக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 6.4% அதிகரித்துள்ளது.*

*ஸ்ரேலிங் பவுண்டிற்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 4.8% வலுவடைந் துள்ளது.*

*இந்திய ரூபாவுக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 3 .7% அதிகரித்துள்ளது. (அ)*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



# ‘சபாஷ்’ பட்ஜெட்!



தமிழக நிதியமைச்சர் தங்கம் தென்னரசு தமிழக சட்டப்பேரவையில் தாக்கல் செய்திருக்கும் 2024 - 25 நிதியாண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் காணப் படும் அறிவிப்புகள் மலைப்பை ஏற்படுத்துகின்றன. பூப்பந்தாட்ட மைதானத்தில் கால்பந்து விளையாட முற்பட்டிருக்கும் அவரது சாதுரியமும், இருப்பதை அனைத்துத் தரப்பினருக்கும் பகிர்ந்து கொடுக்க எத்த னித்திருக்கும் அவரது சாமர்த்தியமும் பாராட்டுக் குரியவை.

2024 - 25 நிதியாண்டின் வருவாய் ரூ.2,99,010 கோடி எனவும், மொத்த செலவினங்கள் ரூ.3,48,289 கோடி எனவும், வருவாய் பற்றாக்குறை ரூ.49,279 கோடி எனவும் நிதிநிலை அறிக்கை தெரிவிக்கிறது. வரும் நிதியாண்டில் ரூ.49,639.92 கோடி அளவிலான பொதுக்கடனை அரசு திருப்பிச் செலுத்த முடியும் என்று எதிர்பார்க்கிறது.

மாநிலத்தின் சொந்த வரி வருவாய் ரூ.1,95,173 கோடி, சொந்த வரி அல்லாத வருவாய் ரூ.30,728 கோடி, மத்திய அரசிடமிருந்து பெறும் மானியங்கள் ரூ.25,354 கோடி, மத்திய வரிகளின் பங்கு ரூ.49,755 கோடி என்கி றது தாக்கல் செய்யப்பட்டிருக்கும் நிதிநிலை அறிக்கை. 2024 - 25 நிதியாண்டின் திட்ட மதிப்பீடு ரூ.47,681 கோடி.

நிதிநிலை அறிக்கையில் கவலையளிக்கும் தகவல், அரசின் கடன் சுமை. 2024 - 25 நிதியாண்டில் மாநில அரசு ரூ.1,55,584.48 கோடி அளவுக்கு மொத்தக் கடன் பெறத் திட்டமிட்டுள்ளது. அது மட்டுமல்லாமல் பொதுக்கடனைத் திரும்பிச் செலுத்தியாக வேண்டும். இதன் விளைவாக, அடுத்த நிதியாண்டு முடிவுக்குள் நிலுவையிலுள்ள கடன் தொகை ரூ.8,33,361.80 கோடியை எட்டும். இது மாநில ஜிடிபியில் 26.41 வீதம் என்பது ஆரோக்கியமான நிதிநிலை அல்ல.

ஏற்கெனவே இந்தியாவிலேயே மிக அதிகமாகக் கடன்சுமை உள்ள மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. கடந்த மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து சந்தையில் அதிகமாகக் கடன் பெறும் மாநிலமாகவும் இருந்து வருகிறது. அரசின் நிலுவைக் கடன் 15-ஆவது நிதி ஆணையம் நிர்ணயித்திருக்கும் 29.1 வீத வரம்புக்குள் தான் இருக்கிறது என்றாலும்கூட, அதிகமான கடன் சுமை எப்போதுமே ஆரோக்கியமான வளர்ச்சி யின் அறிகுறி அல்ல என்பதைச் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை.

அரசின் கடன்சுமை மூலதனச் செலவு காரணமாக அதிகரித்தால், அதில் தவறு காண முடியாது. அதன் விளை வாக மக்கள் மத்தியில் பணப்புழக்கம் அதிகரிக் கவும், பொருளாதார நடவடிக்கைகள் சுறுசுறுப்படைய வும் ஏதுவாகும் என்பதுடன், ஆக்கபூர்வ முதலீடாகவும் மாறு கிறது என்கிற வகையில் அதில் குற்றம் காண முயாது.

அதே நேரத்தில், இலவசங்களுக்காகக் கடன் பெறப் படுகிறது என்பதும், அரசின் நிர்வாகச் செலவினங்க ளாலும், திறமையின்மையாலும் கடன்சுமை அதிகரிப்ப தையும் ஏற்றுக்கொள்ள இயலாது. கடந்த 20 ஆண்டுக ளாக இந்தக் கடன்சுமை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகிறது என்பது, முந்தைய ஆட்சியாளர்களின் பங்களிப்பும் இதில் இருக்கிறது என்பதைத்தான் காட்டுகிறது.

அரசுக்கு மூலதனங்களை உருவாக்கித்தரும் பொதுப் பணி, நீர்வளம் போன்ற துறைகளுக்கும் மக்கள் நல்வாழ்வு, கல்வித் துறை போன்றவற்றிற்கும் கணிச மான நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டிருப்பதற்கு நிதிய மைச்சர் தங்கம் தென்னரசைப் பாராட்ட வேண்டும். மெட்ரோ ரயில் திட்டம், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் போன்றவை நிதியமைச்சரின் சிறப்பு கவனம் பெற்றிருப்பது வரவேற்புக்குரியது.

தொழில் துறைக்கு ரூ.20,198 கோடி குறு, சிறு, நடுத்தரத் தொழில்கள் துறைக்கு ரூ.1,557 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. முன்னதற்கான ஒதுக்கீடு சரி பின்னதற்கான ஒதுக்கீடு மேலும் அதி கரிக்கப்பட்டு அவை ஊக்குவிக்கப்பட்டிருக்க வேண்டும். விருதுநகர் மற்றும் சேலத்தில் ஜவுளிப் பூங்காக்கள், கோவையில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா, தூத்துக்குடியில் புதிய விண்வெளித் தொழில் மற்றும் உந்துசக்திப் பூங்கா உள்ளிட்ட அறிவிப்புகள் தமிழகத்தின் தொழில் வளத்தைப் பெருக்குவதில் கணிசமான பங்களிப்பு வழங்கக் கூடும்.

பள்ளிக்கல்வித் துறை அமைச்சராகவும், தொழில் துறை அமைச்சராகவும் இருந்திருக்கும் இன்றைய நிதிய மைச்சரின் அனுபவங்கள் அவர் தாக்கல் செய்திருக்கும் நிதிநிலை அறிக்கையில் பிரதிபலிப்பதைப் பார்க்க முடிகிறது. அரசுப் பள்ளியில் படித்துக் கல்லூரிகளில் சேரும் மாணவர்களுக்கு மாதம் ரூ.1,000, நடுநிலை - தொடக்கப் பள்ளிகளில் உயர் தொழில்நுட்ப ஆய்வகங் கள், 100 பொறியியல் - கலை அறிவியல் கல்லூரிகளில் புதிய திறன் பயிற்சிக் கட்டமைப்புகள், 10 புதிய அரசு பயிற்சி நிறுவனங்கள், ஒரு லட்சம் மாணவர்களுக்குக் கல்விக் கடன் உள்ளிட்ட அறிவிப்புகள் அடுத்த தலை முறைக்கு செய்யப்படும் முதலீடுகள்.

‘கலைஞரின் கனவு இல்லம்’ திட்டத்தில் எட்டு லட்சம் கான்கிரீட் வீடுகள், சென்னையில் ரூ.1,000 கோடியில் வளர்ச்சித் திட்டம், தாயுமானவன் திட்டம் போன்றவை காலத்தின் கட்டாயங்கள். பழங்குடியின ரின் வாழ்விடங்களில் அடிப்படை வசதி, கூட்டுக் குடி நீர் திட்டங்கள், ஊராட்சி ஒன்றிய ஏரிகள், குளங்கள் சீரமைப்பு, 2,000 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் போன்றவை அடித்தட்டு மக்களின் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்யும்.

மதி இறக்கம் (ஆட்டிஸம்) உடையோருக்கான உயர் திறன் மையம், நிதியமைச்சரின் சமூக அக்கறைக்கு எடுத்துக்காட்டு. மணிமேகலையின் அட்சய பாத்திரம் போல, நிதியமைச்சர் தங்கம் தென்னரசின் 2024 - 25 நிதியாண்டுக்கான பட்ஜெட் அனைவரையும் ஏதோ ஒருவிதத்தில் சென்றடையும் அறிவிப்புகளால் கவனம் ஈர்க்கிறது!

## இந்தவார ராசிபலன் 25.02.2024 - 01.03.2024

நல்ல நேரம்: 9.29 - 10.59

ஞாயிற்றுக்கிழமை
சோபகிருது வருடம் - மாசி 13
ராகு காலம் : 04.59 - 06.29 திதி : பிரதமை

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் தனவரவு அதிகமாவதால் தர்ம காரியங்களில் ஈடுபாடு ஏற்படும். சிறு சிறு உடல் உபாதைகள் ஏற்படலாம். எனவே, உடல் ஆரோக்கியத்தில் அக்கறை கொள்ளவும். மாணவர்கள் தெளிவான அறிவியல் பாடங்களைச் சுலபமாக கிரகித்துக் கொள்வர். அதன் காரணமாகத் தேர்வில் நல்ல மதிப்பெண்கள் பெறுவார். மனைவியிடம், நண்பன், மற்றும் உறவுகளிடம் கருத்து முரண்பாடுகளை தவிர்க்கவும். பெண்கள் மூலம் சந்தோஷம் இருக்கும். விபத்துக்களை தவிர்க்க வாகனங்களில் எச்சரிக்கையுடன் செல்லவும். தீய நட்பை தவிர்க்கவும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் உங்களுக்கு சுமாரான வாரம். மாணவர்கள் கல்வி யில் வெற்றி பெற கடினமாக உழைக்க வேண்டியதிருக்கும். தெரிந்தவர் கள், நண்பர்களில் மிகவும் கஷ்டப்படுபவர்களுக்கு உதவிக்கரம் நீட்டு வதால் மகிழ்ச்சியடைவீர்கள். குடும்பத்தினரிடையே கருத்து வேறுபாடு களை தவிர்த்து, அனுசரித்துச் செல்வது நல்லது. மிகவும் அன்பு செலுத்தும் பெண்கள் ஆதரவால் லாபம் ஏற்படும். சொல் புத்தியும், சுயபுத்தியும் இல்லாத பிள்ளைகளின் போக்கு கவலை அளிக்கலாம்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் உங்களுக்கு எப்போதும் பணம் பற்றிய சிந்தனையா கவே இருக்கும். தொழிலைப் பொறுத்தவரை சிறு சிறு தடைகள் ஏற்படலாம். தெய்வ வழிபாடு மற்றும் தெய்வீகக் கருத்துக்களைக் கேட்டல் என இந்த வாரம் தெய்வீக வாரமாக அமையும். உழைப்பின் காரணமாக நேரத்துக்கு உணவருந்த முடியாத நிலை ஏற்படும். எதிர்பார்த்த நபர்களிடம் இருந்து பண வருமானம் இருக்கும். உறவினர் வருகை, விருந்தால் மகிழ்ச்சி, கேளிக்கைகளிலும் சந்தோஷம் ஆகியவை ஏற்படும். தாய், மனைவி, தோழி எனப் பெண்களால் இலாபம் உண்டு.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் உங்களுக்கு வாழ்க்கையில் மகிழ்ச்சி நிறைந்த நிகழ்ச்சிகள் நடைபெறும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடக்கும். பணிபுரியும் பெண்கள் தற்போது உள்ள வேலையை விட்டு வேறு நல்ல வேலைக்கு முயற்சி செய்வர். பங்குச் சந்தை மூலம் புதிய வருமானங்கள் கிடைக்கும். மற்றவர்கள் துயர் கண்டு அவர்களுக்கு உதவும் நல்ல எண்ணம் மேலோங்கும். சீரான பொருளாதார நிலை ஏற்பட தொழிலில் கடினமாக உழைக்க வேண்டிய நிலை ஏற்படும். தீட்டிய முக்கியத் திட்டங்கள் நிறைவேறக் காலதாமதம் ஆகலாம்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் உங்களுக்கு இனிப்பான செய்திகள் வரும். இல்லத தில் சுப காரியம் செலவுகளுக்கு குறைவிருக்காது. அதிக உழைப்பிற்குப் பிறகு எடுத்த காரியங்கள் ஈடேற, அதன் காரணமாக இலாபங்கள் பெருகும். பிறர் மேல் இரக்கம் ஏற்பட்டுத் தானதர்மங்கள் செய்வார்கள். அரசாங்கத்திடம் இருந்து எதிர்பார்க்கும் காரியங்களில் சிபாரிசு மூலம் அனுகூலம் ஏற்படும். வாக்குவன்மை, வாகன யோகம் உண்டு. சில மாணவர்கள் கல்வியில் உயர்நிலை எய்துவர். உத்தியோகம் மற்றும் தொழிலில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் உங்களுக்கு பணவரவு அதிகரிக்கும். மாணவர்கள் கல்வியில் தேர்ச்சி பெறுவர். தெய்வ சிந்தனை மற்றும் தர்ம சிந்தனை யும் ஏற்படும். சுயமுன்னேற்றுத்துக்கான திட்டங்களை தீட்டி அதில் வெற்றி பெறுவீர்கள். சிலருக்கு உடன்பிறப்புகளுடன் கருத்து வேறு பாடுகள் எழலாம். தண்ணீர்ப் பழங்கள், பூக்கள் இரத்தினங்கள் ஆகிய பொருட்கள் வியாபாரம் ஆதாயம் தரும்.வாழ்வு சிறக்கும் பிரபலமானவர்களின் ஆறுதலும், அன்பும் கிடைக்கும். எல்லா விதத்திலும் அனுகூலமான பலன்கள் நடைபெறும், உயர் பதவிகள் கிடைக்கும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் சென்ற வாரம் இருந்த கவலைகளையெல்லாம் மறந்து மகிழ்ச்சி அடைவீர்கள். நீங்கள் ஈடுபடும் காரியங்களில் வெற்றி கிட்டும். உடல் ஆரோக்கியம் சீர்படும். குடும்பத்தில் குழப்பம் ஏற்படாது இருக்க பிறரிடம் கோபத்தைக் காட்டுவது அமைதியைக் கடைப்பிடியுங்கள். இக்கட்டான சூழ்நிலைகளில் சகோதரர்கள் கை கொடுப்பர். செலவுகள் அதிகமாகிக் பிறரிடம் கடன் வாங்கும் நிலை ஏற்படும். வியாபாரத்தில் திட்டமிட்டபடி புதிய விரிவாக்கங்கள் செய்து முடிப்பீர்கள். அதன் காரணமாக வருவாய் ஓரளவு அதிகரிக்கும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் உங்களுக்கு புண்ணிய தல யாத்திரைகள் ஏற்படும். திருப்திகரமான பொருளாதார உயர்வினால் எப்போதும் மனதில் மகிழ்ச்சி பொங்கும். குடும்பத்தாருக்கும் அவர்கள் ஆசைகள் நிறை வேற்றுவதால் குதுகலமாய் இருப்பர். அனுபவ பூர்வமான அறிவுத் திறன் கூடும், பூமி வீடு மூலம் இலாபம் ஏற்படும். குடும்பத்தில் மனைவியின் பணிவிடை மகிழ்ச்சி தரும். மதிப்பு, கௌரவம் உயரும். சோம்பேறித்தனம் அதிகரிக்கும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் நீங்கள் பங்குச் சந்தை மற்றும் போட்டி பந்தயங்க ளில் ஈடுபடாது இருப்பது நல்லது. அதன் காரணமாக இழப்பைத் தவிர்க்கலாம். திருமண வயது வந்து, திருமணமாகாத பெண்களுக் குத் திருமணத்துக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அவசிய மற்ற, அலைச்சல் தரும் பயணங்கள் மேற்கொள்ள நேரும். அரசு ஊழியர்களுக்கு அவர்கள் இடும் கட்டளைகளை ஏற்று நடக்கும்படியான அதிகாரம் மிக்க உயர் பதவிகள் கிடைக்கும். சிலருக்கு தெய்வ சங்கல்பத்தால் புத்திர பாக்கியம் ஏற்படும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் பல திசைகளில் இருந்தும் தனவரவு அதிகமாக இருக்கும். உங்கள் வாக்கு வன்மை மற்றும் சிறந்த பொதுசனத் தொடர்பு காரணமாக உபரி வருமானம் கிடைக்கும். சிலருக்குப் பேச்சே தொழில் மூலதனமாகும். வேளாண் பொருட்கள் உற்பத்தி விவசாயிகளுக்கு திருப்தி அளிக்கும் வகையில் இருக்கும். நண்பர்கள் மற்றும் உறவினர்க ளுடன் வீணான வாக்குவாதத்தில் ஈடுபடாது இருப்பது நல்லது. உங்கள் நற்குணங்கள் அனைவரின் பாராட்டையும் பெறும். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டாகும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் பூமி அல்லது வாகனம் வாங்கும் யோகம் குறி காட்டப் படுகிறது. குடும்ப சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். வீட்டிற் குத் தேவையான நவீன உபகரணங்கள் வாங்கி மகிழ்வீர்கள். தொழி லில் நல்ல ஆதாயம் பெற, புதிய திட்டங்களில் உங்கள் பணத்தை முதலீடு செய்வார்கள். பழைய நண்பர் ஒருவரின் வரவு அந்த நாள் ஞாபகங்கள் நினைவுறுத்தி மகிழ்விக்கும். மனதில் நினைத்தபடியே வியாபார சம்பந்தமான வெளிநாட்டுப் பயணங்கள் இலாபம் தரும். வங்கிக் கணக்கில் ரொக்க இருப்பு கூடும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் முதல் எதிர்காலத்தில் பொருளாதார முன்னேற்றங்கள் சிறப்பாக இருக்கும். குடும்ப விழாக்கள், சந்தோஷத் தருணங்களாக அமையும். மனைவியுடன் உறவு சீராக, மகிழ்ச்சிகரமானதாக இருக் கும். முன்னர் சேமித்த சேமிப்பு களின் பலனைத் தற்போது அறுவடை செய்வீர்கள். பங்குச் சந்தையில் ஆலோசித்து முதலீடு செய்வது இழப்பைக் குறைக்கும். மனைவிமார்கள் தங்கள் கணவரிடம் இருந்து உண்மைக் காதலையும், உன்னத அன்பையும் பெறுவர். கீழே பணிபுரிபவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், வெளிநாட்டு வாசம் ஏற்படலாம்.

# கடுமையான கடன் நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறதா தமிழ்நாடு?

## எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுகள் உண்மையா?

முரளிதரன் காசிவிஸ்வநாதன்

இந்த ஆண்டிற்கான தமிழக நிதிநிலை அறிக்கை சமீபத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் நிலையில், தமிழ்நாடு கடுமையான கடன் நெருக்கடியில் சிக்கித்தவிப்பதாக எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றன. இது எந்த அளவுக்கு உண்மை? ஒரு மாநிலம் எந்த அளவுக்குக் கடன் வாங்கலாம்?

தமிழ்நாட்டின் 2024-25-ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை பிப்ரவரி 19, திங்கள், தாக்கல் செய்யப்பட்டது. இந்த நிதிநிலை அறிக்கையை ஒட்டி தமிழ்நாட்டிற்கு இருக்கக்கூடிய கடன்கள் குறித்த தகவல்கள் வெளியிடப்பட்டன.

அதன்படி தமிழ்நாட்டின் இந்த ஆண்டின் வருவாய் பற்றாக்குறை 49,278.73 கோடி ரூபாயாக இருக்கும் என்றும் நிதிப் பற்றாக்குறை மாநிலத்தின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.44 வீதம் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிதி ஆண்டில் மாநில அரசு 1,55,584.48 கோடி ரூபாயை கடனாக வாங்கும் என்றும், 49,638.82 கோடி ரூபாய் மதிப்பிலான கடனை திரும்பச் செலுத்தும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த நிதியாண்டின் முடிவில் அதாவது 2025 மார்ச் 31-ஆம் தேதி தமிழ்நாட்டின் ஒட்டுமொத்தக் கடன் 8,33,361.80 கோடி ரூபாயாக இருக்கும்.

**கடனை அடைக்க 86 ஆண்டுகள் ஆகும்**

இந்த விவரங்கள் வெளியான பிறகு, தமிழ்நாட்டிற்கு இருக்கக்கூடிய கடன்கள் குறித்து எதிர்க்கட்சிகள் கடுமையான விமர்சனத்தை முன்வைத்தன.

இது தொடர்பாக பேசிய பா.ஜ.கவின் மாநிலத் தலைவர் கே. அண்ணாமலை, “ஆட்சிக்கு வந்து மூன்று ஆண்டுகளில், 5 லட்சம் கோடி ரூபாய் கடனில் இருந்து 8 லட்சம் கோடி ரூபாய் கடனாக மாற்றி வைத்திருக்கிறார்கள். மொத்தம் 8 லட்சத்து 23 ஆயிரம் கோடி ரூபாய் கடன் தமிழகத்துக்கு இருக்கிறது. இந்தக் கடனை அடைக்கவே இன்னும் 86 ஆண்டுகள் ஆகும்,” என்று குறிப்பிட்டிருக்கிறார்.



அதேபோல, பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் அன்புமணி ராமதாசும் இந்தக் கடன் அளவைச் சுட்டிக் காட்டி கடுமையான அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

அதில், “தமிழ்நாட்டில் 2021-2-2ஆம் ஆண்டில் திமுக ஆட்சிப் பொறுப்பேற்ற போது தமிழக அரசின் நேரடிக் கடன் ரூ.4,56,660.99 கோடியாக இருந்தது. திமுக அரசு பொறுப்பேற்ற பிறகு 2024-25-ஆம் ஆண்டு வரை மொத்தம் ரூ.3,76,700.81 கோடி கடன் வாங்கியிருக்கிறது,” என்று அவர் குறிப்பிட்டார்.

ஒரு மாநிலத்தில் நிதிப் பற்றாக்குறை எந்த அளவுக்கு இருக்கலாம் எந்த அளவுக்குக் கடன் வாங்கலாம் என்பதை இந்தியாவில் நிதி ஆணையம் நிர்ணயிக்கிறது. 15-வது நிதி ஆணையத்தின் பரிந்துரைகளின்படி, 2021-22-இல் ஒரு மாநிலத்தின் நிதிப் பற்றாக்குறை அதன் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4 வீதம் ஆகவும் 2022-23-இல் 3.5 வீதம் ஆகவும் 2025-26இல் 3 வீதம் ஆகவும் இருக்கலாம் என வரையறுத்தது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, அதன் நிதிப் பற்றாக்குறை கடந்த ஆண்டில் 3.45 வீதம் இருந்தது, இந்த ஆண்டு 3.44 வீதம் குறைக்கப்பட்டிருப்பதாக இந்த பட்ஜெட்டில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

கடன் தொகையைப் பொறுத்தவரை, இந்த ஆண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 28.9 வீதம் குறைவாக இருக்க வேண்டும் என வரையறுக்கப்பட்டிருக்கிறது. கடன் தொகையைப் பொறுத்தவரை, அது மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 26.4 வீதம் ஆக இருக்கிறது.

**கடன் வாங்கி வேறொரு கடனை அடைப்பது சிக்கலை ஏற்படுத்தும்**

“ஒரு மாநிலம் கடன் வாங்குவது பிரச்னையல்ல. அந்தக் கடன் எதற்காக செலவழிக்கப்படுகிறது என்பது முக்கியம். இந்த ஆண்டில் தமிழ்நாடு 1,55,584.48 கோடி ரூபாயை கடனாக வாங்கும் என்றும் 49,638.82 கோடி



ரூபாய் கடனை திரும்பச் செலுத்தும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

“அப்படியானால், ஒரு கடனை வாங்கி மற்றொரு கடனை திரும்பச் செலுத்துகிறோம். இது மிகச் சிக்கலான விஷயம். முதலீட்டிற்காக கடன் வாங்கினால் பரவாயில்லை. ஆனால், செலவுகளுக்காக கடன் வாங்கினால் அதற்கு முடிவே இருக்காது,” என்கிறார் முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரியான எஸ். நாராயண்.

தமிழ்நாட்டின் வருவாய் குறைந்திருப்பதும் கடன் அதிகரிப்பதால் அதற்கான வட்டி அதிகரித்து, கடனைத் திருப்பிச் செலுத்தும் காலம் அதிகரிப்பதும் கவலை அளிப்பதாகச் சொல்கிறார் இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் முதன்மை ஆலோசகர் டாக்டர் ஆர். கண்ணன்.

“வருவாய் குறைந்திருப்பதாகச் சொல்வது கவலை அளிக்கிறது. மற்றொரு பக்கம் கடன் அதிகரிக்க அதிகரிக்க ‘Debt Service’ நாம் திரும்பச் செலுத்தும் தவணைகள் அதிகரித்துக்கொண்டே போகும். இதனால், நாம் கடனை திருப்பி அளிக்கும் காலம் அதிகமாகும். இது தொடர்பாக விரிவான ஆய்வு மேற்கொள்ள வேண்டும்.

“தமிழ்நாட்டின் அரசுப் போக்குவரத்துக் கழகம் நிதி ரீதியில் மிக சிக்கலான நிலையில் இருப்பதாகத் தெரிகிறது. அதில் கவனம் செலுத்த வேண்டும். அதேபோல, ‘tax to GDP’ விகிதம் குறைவாக இருக்கிறது. அதனை அதிகரிக்க வேண்டும்,” என்கிறார் கண்ணன்.

முதலீட்டுச் செலவுகளுக்குக் கடன் வாங்கினால் அதில் பிரச்சனை இல்லை. ஆனால், செலவுகளுக்காக வாங்கினால் பிரச்சனைதான் என்கிறார் தமிழக பொருளாதார நகர்வுகளை நீண்ட காலமாக கவனித்து வரும் பொருளாதார ஆலோசகரான பாலசுப்பிரமணியன்.

“ஆனால், தமிழக பொருளாதாரம் மிகவும் வலுவானது. மிகப் பெரியது. ஆகவே பெரிய சிக்கல் வராது என்றே கருதுகிறேன்,” என்கிறார் பாலசுப்பிரமணியன்.

**இந்தப் பிரச்னையைச் சமாளிக்க என்ன செய்வது?**

“ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியோடு ஒப்பிட்டால், நம்முடைய வரி வருவாய் மிகக் குறைவாக இருக்கிறது. இதனைச் சரி செய்ய வேண்டும். அரசின் கவனம், அந்த திசையில் இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே இதிலிருந்து மீண்டுவிடலாம் எனக் கருதுகிறேன்,” என்கிறார் எஸ். நாராயண்.

விவசாய உற்பத்தியிலும் சிறு, குறு தொழில்துறை உற்பத்தியிலும் கவனம் செலுத்துவது பலனளிக்கும் என்கிறார் டாக்டர் கண்ணன்.

“விவசாய உற்பத்தியை அதிகரிப்பது ஒரு புறமிருக்க, சிறப்பான சேமிப்பு வசதிகளைக் கட்டுவது முக்கியம். ஆகவே விளைபொருள்கள் வீணாகாது. விவசாயிகளுக்கு கூடுதல் வருவாய் கிடைக்கும். தமிழ்நாட்டில் சேவைத் துறை மிகச் சிறப்பாக இருக்கிறது. அதற்கு இணையாக சிறு, குறு தொழில்துறையிலும் கவனம் செலுத்த வேண்டும்,” என்கிறார் அவர்.

அரசின் கடன் என்பது அதன் பொருளாதாரத்தின் ஒரு பகுதி, தனி நபர்களின் கடனைப்போல இதனைக் கருதக்கூடாது என்கிறார் மாநில திட்டக் கமிஷனின் துணைத் தலைவரான ஜெ. ஜெயரஞ்சன்.

“மாநில அரசுக்கு நான்கு வழிகளில் வருவாய் வருகிறது. ஒன்று சொந்த வரி வருவாய், இரண்டாவது மத்திய அரசு அளிக்கும் வரிப் பகிர்வு, மூன்றாவது வரியல்லாத வருவாய், நான்காவது கடன். ஆகவே, மாநில அரசின் வருவாயில் எப்போதுமே கடன் என்பது ஒரு பகுதி.

“ஒரு அரசின் கடன் என்பது தனி நபர்களின் கடனைப் போல அல்ல. அரசு நிலையானது. அதன் பொருளாதாரத்தில் கடனும் ஒரு பகுதி என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அந்தக் கடனை எந்த அளவுக்கு வாங்கலாம் என சில கட்டுப்பாடுகள் இருக்கின்றன. அந்த அளவுக்குள்தான் மாநில அரசு கடன் வாங்கி யிருக்கிறது” என்கிறார் அவர்.

மேலும், மத்திய அரசிடமிருந்து மாநில அரசுக்கு வரவேண்டிய வருவாய் குறைந்துகொண்டே வருவதையும் அவர் சுட்டிக்காட்டுகிறார்.

“மத்திய அரசு மாநில அரசுக்கு பகிர்ந்தளிக்கும் தொகை குறைந்துகொண்டே வருகிறது. தன் வருவாயி லிருந்து மாநிலங்களுக்கு 41 வீதம் பகிர்ந்தளிப்பதாகச் சொல்கிறது மத்திய அரசு. ஆனால், மொத்த வருவாயில் கிட்டத்தட்ட 20 வீதம் செஸ் என எடுத்துக்கொள்கி றார்கள். மீதமுள்ள தொகைதான் பகிரப்படுகிறது,” என்கிறார் ஜெயரஞ்சன்.

தொடர்ந்து பேசிய அவர், “அடுத்ததாக, மத்திய அரசின் திட்டங்களில் முன்பு மத்திய அரசின் பங்களிப்பு 60 - 40 என இருந்தது. இப்போது அது 75- 25 என சுருங்கிவிட்டது. இதனால், மத்திய அரசுத் திட்டங் களின் பலனைப் பெற கூடுதல் நிதியை மாநில அரசு செலவிட வேண்டியிருக்கிறது.

பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்திய போது மத்திய அரசும் மாநில அரசும் தலா 49% அளிக்கும் என்றும் மீதமுள்ள 2% விவசாயிகள் செலுத்தினால் போதும் என்றும் சொல்லப்பட்டது. இப்போது மத்திய அரசின் பங்களிப்பு 30% ஆகிவிட்டது. ஆகவே இந்தத் திட்டத்திற்கு முன்பு 500 கோடி ரூபாயை செலவழித்துக் கொண்டிருந்த மாநில அரசு, இப்போது 1,200 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்ய வேண்டியிருக்கிறது,” என்றார் ஜெயரஞ்சன்

மேலும், “அதேபோல, மெட்ரோ ரயில் திட்டத்திற்கு மத்திய அரசு அளிக்க வேண்டிய தொகையை அளிக்காததால், மாநில அரசு கூடுதலாக 12,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்கிறது. மாநில அரசின் கடன் எனப் பேசும்போது இந்த விஷயங்களை எல்லாம் கணக்கில் கொள்ள வேண்டும்,” என்கிறார் ஜெயரஞ்சன்.

**10 லட்சம் வேப்பங் கன்றுகளுக்கு ரூ.2 கோடி**

இதேவேளை, தமிழ்நாட்டின் வேளாண் நிதிநிலை அறிக்கையில் பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருந்தாலும் செய்ய வேண்டியது நிறைய இருக்கிறது என்கிறார்கள் விவசாயிகளும் பொருளாதார நிபுணர்களும்.



தமிழ்நாட்டின் வேளாண் நிதிநிலை அறிக்கை தமிழக சட்டப்பேரவையில் தனியாக தாக்கல் செய்யப்பட்டது. நிதிநிலை அறிக்கையை வேளாண்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தாக்கல் செய்தார்.

கடந்த ஆண்டில் ரூ. 38,904 கோடி ரூபாய்க்கு வேளாண் நிதிநிலை தாக்கல் செய்யப்பட்ட நிலையில் இந்த ஆண்டு, 42,281 கோடி ரூபாய்க்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வேளாண் நிதிநிலை அறிக்கையில், குறிப்பிடத்தக்க திட்டமாக மண் வளத்தைக் காப்பதற்கான “மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம்” என்ற புதிய திட்டம் 206 கோடி ரூபாயில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

அது தவிர, 100 உழவர் அங்காடிகள் அமைப்பதற்கான அறிவிப்பு, எண்ணெய் வித்துகள், துவரம் பருப்பு பயிரிடும் பரப்பை அதிகரிப்பதற்கான திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

மேலும், சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு அளித்த விவசாயிகளுக்கு மத்திய அரசு நிர்ணயித்த ஆதாய விலையைவிட கூடுதலாக ஒரு டன்னுக்கு 215 ரூபாய் வழங்கப்படும் என குறிப்பிடப்பட்டிருக்கிறது.

டெல்டா மாவட்டங்களில் 2,235 கி.மீ. தூரத்திற்கு சி, டி பிரிவு கால்வாய்கள் தூர்வாரப்படும் என்றும் 5,338 கி.மீ. தூரத்திற்கு ஆறுகள், கால்வாய்கள் தூர்வாரப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

(14ஆம் பக்கம் பார்க்க)

# பயங்கரவாத தடைச்சட்டத்தை மாற்றுவதில் உண்மையான அக்கறையுடன் அரசாங்கம் செயற்படுகிறதா?



வீரகத்தி தனபாலசிங்கம்

இலங்கையில் இரு சட்டமூலங்கள் அண்மைக்காலமாக சர்ச்சைக் குரியவையாக இருந்துவருகின்றன. பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் இணையவெளி பாதுகாப்பு சட்டமூலம் (Online Safety Bill) ஆகியவையே அவை.

இணையவெளி பாதுகாப்பு சட்டமூலம் கடந்த மாதம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பின்னரும் கூட பிரச்சினைக்கு உள்ளாகியிருக்கிறது.

அந்த சட்டமூலம் அரசியலமைப்புக்கு இசைவானதாக அமைவதற்கு அவசியமானவை என்று உயர்நீதிமன்றம் விதந்துரைத்த சகல திருத்தங்களையும் சேர்க்காமல் அரசாங்கம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றியதை சபாநாயகர் சான்றுப்படுத்தி பெப்ரவரி முதலாம் திகதி முதல் சட்டமாக்கியதை அரசியலமைப்பபை மீறியசெயல் என்று கூறி தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் உயர்நீதிமன்றத்தில் மனுவொனறைத் தாக்கல் செய்திருக்கிறார்.

"இணையவெளி பாதுகாப்பு சட்டமூலம் அரசியலமைப்புக்கு இசைவான முறையில் ஒருபோதும் சட்டமாக்கப்படவில்லை. 2024 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க இணையவெளி பாதுகாப்பு சட்டம் என்று வெளியிடப்பட்ட ஆவணத்தில் உயர்நீதிமன்றத்தின் பல விதப்புரைகள் இல்லை. அதனால் சபாநாயகர் பொதுமக்களின் நம்பிக்கையை மீறிச் செயற்பட்டிருக்கிறார்.

"அந்த சட்டத்தை இடைநிறுத்தி இடைக்கால உத்தரவொன்றை உயர் நீதிமன்றம் பிறப்பிக்கவேண்டும். அந்த சட்டத்தை சபாநாயகர் சான்றுப்படுத்தியது சட்டப்படி செல்லுபடியாகாது என்றும் சபாநாயகர் அரசியலமைப்பை மீறிவிட்டார் என்றும் பிரகடனம் செய்யவேண்டும். எந்த ஆலோசனையின் அடிப்படையில் சபாநாயகர் அவ்வாறு செயற்பட்டார் என்பதை தீர்மானிக்க அவரிடமிருந்து பதிவுகளைக் கோரவேண்டும்" என்று சுமந்திரன் தனது மனுவில் குறிப்பிட்டிருக்கிறார்.

அதேவேளை, கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளாகியிருக்கும் இணையவெளி பாதுகாப்பு சட்டத்துக்கு கொண்டுவருவதற்கு அரசாங்கம் உத்தேசித்திருக்கும் திருத்தங்களின் பட்டியல் ஒன்றை பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ரிரான் அலஸ் கடந்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பித்தார். நான்கு பேரைக் கொண்ட நிபுணர்கள் குழுவினால் வரையப்பட்ட அந்த சகல திருத்தங்களுக்கும் அமைச்சரவை அங்கீகாரம் அளித்திருக்கிறது

அந்த புதிய திருத்தங்கள் சட்ட வரைஞரினதும் சட்டமா அதிபரினதும் பரிசீலனைக்கு அனுப்பப்படவேண்டியவையாக இருக்கின்ற அதேவேளை, பாராளுமன்றத்துக்கு போகுமுன்னர் சவாலுக்கு உட்படுத்தப்பட்டால் உயர் நீதின்றத்தின் பரிசீலனைக்கும் உட்படவேண்டும்.

இணையவெளி பாதகாப்பு சட்டமூலம் மீதான விவாதம் கடந்த மாதம் பாராளுமன்றத்தில் இரு நாட்கள் இடம்பெற்றபோது உயர்நீதிமன்றம் விதந்துரைத்த சகல திருத்தங்களும் சேர்க்கப்படவில்லை என்று எதிரணி கட்சிகள் சுட்டிக்காட்டிய போதிலும், அரசாங்கம் அதற்குச் செவிசாய்க்காமல் சட்ட மூலத்தை அவசர அவசரமாக நிறைவேற்றியது.

அவ்வாறு நிறைவேற்றியபோது அமைச்சர் ரிரான் அலஸ் பின்னர் ஒரு கட்டத்தில் தேவையான திருத்தங்களைக் கொண்டுவரலாம் என்று கூறியது சட்டமூலம் நிறைவேற்றப்பட்ட முறையில் இருந்த பெரும் குறைபாட்டை அம்பலப்படுத்தியது.

அவ்வாறு குறைபாட்டுடன் நிறைவேற்றப்பட்ட சட்டமூலத்தை சான்றுப்படுத்தி கையெழுத்திடுவதற்கு முன்னதாக சந்தித்துப் பேசுவதற்கு எதிரணி கட்சிகள் கால அவகாசத்தை கேட்டபோதிலும் சபாநாயகர் அதைப் பொருட்படுத்தவில்லை.

சுமந்திரன் தாக்கல் செய்த மனு விடயத்தில் உயர்நீதிமன்றம் எவ்வாறு நடந்துகொள்ளும் என்பது முக்கியமான கேள்வி. சட்டவாக்கத்துறைக்கும் (பாராளுமன்றம்) நீதித்துறைக்கும் இடையில் அரசியலமைப்பு அடிப்படையிலான தகராறு ஒன்று ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கவும் கூடும்.

இது இவ்வாறிருக்க, உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் (Anti -Terrorism Bill) அரசியலமைப்புக்கு இசைவான முறையில் சட்டமாக்கப்படுவதற்கு அவசியமான சில திருத்தங்களை கடந்த வாரம் விதந்துரைத்திருக்கும் உயர்நீதிமன்றம் அவை சேர்க்கப்படாவிட்டால் சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றுவதுடன் தேசிய சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றில் மக்களின் அங்கீகாரத்தையும் பெறவேண்டும் என்று கூறியிருக்கிறது.







> பயங்கரவாத தடைச்சட்டத்தை மாற்றக்கூடாது என்ற உள்நோக்கத்தில்தான் அரசாங்கம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றமுடியாத அளவுக்குஅதை விடவும் கொடூரமான ஏற்பாடுகளுடன் கூடிய சட்டமூலத்தை கொண்டுவருகிறதோ என்ற சந்தேகம் எழுகிறது.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தின் அரசியலமைப்புத் தகுதியைக் கேள்விக்குள்ளாக்கி தாக்கல் செய்யப்பட்ட முப்பதுக்கும் அதிகமான மனுக்களை பரிசீலித்த பிறகு உயர்நீதிமன்றம் அறிவித்த தீர்மானத்தை கடந்த செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ச வாசித்தார்.

"சட்டமூலத்தின் 8 பிரிவுகள் அரசியலமைப்புக்கு முரணானவையாக அமைந்திருப்பதாக கருதப்படுகின்றன. அதனால் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவுடன் அவை நிறைவேற்றப்படவேண்டும். சில பிரிவுகள் சர்வஜன வாக்கெடுப்பில் மக்களின் அங்கீகாரத்தையும் பெறவேண்டியது அவசியமாகும். உயர்நீதிமன்றத்தின் விதப்புரைகளின் பிரகாரம் சட்டமூலம் திருத்தப்படுமானால் அதை பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்ற முடியும்" என்று ராஜபக்ச கூறினார்

உயர்நீதிமன்றத்தின் தீர்மானத்தில் மிகவும் முக்கியமாக அவதானிக்கவேண்டியது சட்டமூலத்தில் "பயங்கரவாதக் குற்றச்செயல்கள்" என்று வர்ணிக்கப்பட்டிருப்பவை பெருமளவுக்கு சர்வதேச சட்டங்களுக்கு இசைவான முறையில் அமையவேண்டும் என்ற வலியுறுத்தலாகும். அதாவது சட்டமூலத்தில் பயங்கரவாதத்துக்கு கொடுக்கப்படும் வரைவிலக்கணத்தை உயர்நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளவில்லை.

"பயங்கரவாதம் என்பதற்கான வரைவிலக்கணம் ஐக்கிய நாடுகளின் வரைவிலக்கணத்தின் வழியில் அமைய வேண்டும் என்கின்ற அதேவேளை, 2001 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட பயங்கரவாதத்துக்கு நிதியுதவி செய்தல் (Terrorist Financing தொடர்பான 1373 தீர்மானத்துக்கு ஏற்றதாகவும் இருக்கவேண்டும்.

"பயங்கரவாதச் செயல் ஒன்றுக்கான வரைவிலக்கணத்தை தீர்மானிக்கும் போது ஐக்கிய இராச்சியம், அவுஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் கனடா ஆகிய நாடுகளின் சட்டங்களில் கூறப்பட்டுள்ள வரைவிலக்கணத்தை பரிசீலனைக்கு எடுக்கவேண்டும். பயங்கரவாதத்துக்கு எதிரான இலங்கையின் உத்தேச சட்டத்தை திருத்தும்போது மேற்கூறப்பட்ட நாடுகளின் சட்டங்கள் பயனுடையவையாக இருக்கமுடியும்" என்று உயர்நீதிமன்றம் கூறியிருக்கிறது.

**பயங்கரவாதத்துக்கு வரைவிலக்கணம்**

பயங்கரவாதத்துக்கு வரைவிலக்கணம் வகுப்பது என்பது உண்மையில் ஒரு சர்வதேசப் பிரச்சினை. அதில் ஐக்கிய நாடுகள் சபையினால் கூட இதுவரையில் உலகளாவிய கருத்தொருமிப்பைக் காணமுடியவில்லை.

ஒருவருக்கு பயங்கரவாதியாகத் தோன்றுபவர் இன்னொருவருக்கு விடுதலைப் போராளியாக தென்படுவார் என்பது நாம் வழமையாக பேசுகின்ற ஒன்று. நாடுகள் அவை எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளின் அடிப்படையிலேயே பயங்கரவாதத்துக்கு வியாக்கியானத்தைக் கொடுக்கின்றன. இலங்கை அதற்கு விதிவிலக்கு அல்ல.

கடந்த வருடம் மார்ச் மாதத்தில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட நாளில் இருந்து பயங்கரவாதத்துக்கு அதில் கொடுக்கப்பட்டிருக்கும் வரைவிலக்கணம் குறித்து விமர்சனங்கள் வெளிவந்த வண்ணமே இருந்தன

தெளிவற்றதாகவும் வரம்பு மீறியதாகவும் அமைந்திருக்கும் அந்த வியாக்கியானம் அரசியல் எதிர்ப்பியக்கங்களை ஒடுக்குவதற்கும் அடிப்படை உரிமைகள் மீறப்படுவதற்கும் வழிவகுக்கக்கூடியது என்பதே பரவலான அபிப்பிராயமாக இருந்தது.

பயங்கரவாதத் தடைச்சட்டமும் (Prevention of Terrorism Act) வேறு குற்றவியல் சட்டங்களும் பரந்தளவில் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுவந்த இலங்கையின் கடந்த பல தசாப்தகால வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தின் பல ஏற்பாடுகள் குறித்து சட்டத்துறைச் சமூகமும் உள்நாட்டு மற்றும் சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்களும் அச்சம் வெளியிட்டன.

தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் இடம்பெற்றுவந்த படுமோசமான துஷ்பிரயோகங்கள் குறித்து உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் கிளம்பிய விமர்சனங்களைத் தொடர்ந்து மேம்பாடான சட்டம் ஒன்றைக் கொண்டுவருவதாக உறுதியளித்த இலங்கை அரசாங்கம் குறைபாடுகளை இல்லாமல் செய்வதற்கு பதிலாக மக்கள் ஒன்றுகூடுவதற்கு இருக்கும் சுதந்திரத்தையும் பேச்சுச் சுதந்திரத்தையும் கட்டுப்படுத்தக்கூடியதாகவும் சொத்துச்சேதம், களவு, கொள்ளை போன்ற குற்றச்செயல்களை உள்ளடக்கியதாகவும் பயங்கரவாதத்தின் வியாக்கியானத்தை விசாலப்படுத்தும் சட்டமூலம் ஒன்றைக் கொண்டுவந்திருக்கிறது என்று மனித உரிமைகள் கண்காணிப்பு (Human Rights Watch) அமைப்பு கடந்த வருடம் தெரிவித்தது

பயங்கரவாதத்துக்கு எதிரான அதிகாரங்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுவந்த இலங்கையின் வரலாற்றினதும் அமைதிவழிப் போராட்டங்களை ஒடுக்குவதற்கு தற்போதைய அரசாங்கம் தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளினதும் வெளிச்சத்திலேயே பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை நோக்கவேண்டியிருக்கிறது என்று அந்த அமைப்பு கூறியது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை விடவும் கொடூரமானதாக புதிய சட்டமூலம் அமைந்திருக்கிறது என்பதே உண்மை. அரசாங்கத்துக்கு எதிரான எந்த விதமான போராட்டத்தையும் பயங்கரவாதச் செயல் என்று வியாக்கியானம் செய்வதற்கு அது வகைசெய்கிறது.

அரசாங்கத்தின் எந்தவொரு நடவடிக்கையையும் கேள்விக்கு உள்ளாக்குவதையும் அரசாங்கத்தைப் பதவிவிலகுமாறு அல்லது ஜனாதிபதியை பதவி துறக்குமாறு கோரிக்கை விடுப்பதையும் பயங்கரவாதச் செயல்களாக வியாக்கியானம் செய்யமுடியும்.

தொழிற்சங்கம் ஒன்று அதன் உறுப்பினர்களின் சம்பளத்தை அதிகரிக்குமாறு "அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கும்" நோக்குடன் முன்னெடுக்கும் வேலைநிறுத்தத்தையும் வீதிப்போராட்டத்தையும் "அத்தியாவசிய சேவைகளையும் விநியோகங்களையும்" சீர்குலைக்கும் பயங்கரவாதச் செயல்கள் என்று வியாக்கியானம் செய்யமுடியும். ஒட்டுமொத்தமாக நோக்கும்போது மீண்டும் ஒரு மக்கள் கிளர்ச்சிக்கு இடமளிப்பதில்லை என்பதில் அரசாங்கம் மிகவும் உறுதியாக இருக்கிறது.

இத்தகைய விமர்சனங்கள் சுமார் ஒரு வருடத்துக்கு முன்னர் கிளம்பிய போதிலும், பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தில் பெரிய மாற்றங்கள் செய்யப்படமாட்டாது என்று அப்போதே

(14ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதி தேர்தலை இலக்கு வைத்து கட்சிகள் அணிகளாக உருமாறுவதும் கட்சிகளை ரணில் பிளவுபடுத்துவதும்!

பனங்காட்டான்

இலங்கையின் அடுத்த ஜனாதிபதி தேர்தலைப் பற்றி தமிழர் தாயகமெனும் வடக்கிலும் கிழக்கிலும் பெருமளவுக்கு எந்த அக்கறையுமில்லை. தமிழரசுக் கட்சியின் உட்கட்சித் தேர்தல்தான் அங்கு இப்போது முக்கியமான சமாசாரம்.

மாறாக, தென்னிலங்கையில் தினசரி ஏதோ ஒரு செய்தி ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக வெளிவந்தவாறுள்ளது. இத்தேர்தல் எப்போது இடம்பெறுமென்று எந்த அறிவிப்பும் அதிகாரபூர்வமாக இதுவரை வரவில்லை.

அக்டோபர் மாதத்தில் தேர்தல் நடைபெறுமென்று நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ச அறிவித்துள்ளதால் நிச்சயமாக தேர்தல் நடைபெறுமென்ற நம்பிக்கை சிலரிடம் துளிர்த்துள்ளது. தேர்தல் சட்டத்தின் பிரகாரம் அக்டோபர் மாதத்துக்கு முன்னர் ஜனாதிபதி தேர்தல் நடைபெற வேண்டுமென்பது எல்லோருக்கும் தெரியும். ஆனாலும் பலருக்கும் இதில் நம்பிக்கையில்லை.





இருப்பினும், நம்பிக்கையூட்டும் வகையில் இத்தேர்தலில் தாம் போட்டியிடப் போவதாக ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார். எந்தக் கட்சியில் அல்லது எந்த அணியில் போட்டியிடப் போகி றார் என்று மட்டும் அவர் தெரிவிக்கவில்லை.

கடந்த வருடம் நாடு முழுவதுமுள்ள 340 உள்ளூராட்சிச் சபைகளுக்கு தேர்தல் நடத்த ஏற்பாடானது. 8,325 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. பல அரசாங்க ஊழியர்கள் சம்பளமற்ற விடுப்பு எடுத்து போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்தனர். 58 அரசியல் கட்சிகளும் 329 சுயேட்சைக் குழுக்களும் போட்டியிட களமிறங்கின.

வாக்காளர் அட்டைகள் பல்லாயிரம் ரூபா செலவில் அச்சிடப்பட்டது. அறிவிக்கப்பட்டவாறு தேர்தல் நடைபெற வேண்டுமென நீதிமன்றமும் உத்தரவிட்டது. இன்றுவரை தேர்தல் நடைபெறவில்லை. இதுபற்றி இப்போது யாரும் பேசுவதுமில்லை. எல்லோரும் மறந்துவிட்டனர். நடைபெறாதுபோன உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெற்றவர் ரணில் விக்கிரமசிங்க. அவரது திட்டப்படி தேர்தல் நடைபெறாமலே போய்விட்டது.

1987ம் ஆண்டில் ராஜிவ் காந்திக்கும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவுக்குமிடையில் கைச்சாத்தான இலங்கை-இந்திய ஒப்பந்தம் இன்னும் நான்கு மாதங்களில் முப்பத்தியேழு வயதைத் தாண்டப் போகிறது. வடக்கும் கிழக்கும் இணைந்த மாகாண சபைக்கு ஒருமுறை மட்டுமே தேர்தல் இடம்பெற்றது. வடமாகாண சபைக்கு ஒரு தடவை மட்டுமே தேர்தல் இடம்பெற்றது.

இப்போது மாகாண சபைகள் ஆட்சி பீடத்தின் ஏஜன்டுகளாக நியமனமான ஆளுனர்களால் நிர்வகிக்கப்படுகிறது. இவர்கள் செயற்படுத்தும் திட்டங்களை தட்டிக் கேட்க மாகாண சபைகள் இல்லை. 13ம் திருத்தத்தின் கீழ் மாகாண சபைகளுக்கு காணி அதிகாரமும் காவற்துறை அதிகாரமும் வழங்கப்பட்டது. இன்றுவரை இந்த அதிகாரங்கள் மத்திய அரசிடமே உள்ளன.

சட்டப்படி இந்த அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்கக்கூடாது என்பதில் மாறிமாறி ஆட்சிக்கு வரும் சகல சிங்களக் கட்சிகளும் ஒற்றை நிலைப்பாட்டிலுள்ளன. வழங்கப்படாத காவற்துறை அதிகாரத்தை 13ம் சட்டத் திருத்தத்தில்கூட இருக்க விடக்கூடாது என்ற முனைப்பு இப்போது எழுந்துள்ளது. இதற்கென அரசியல் அமைப்பில் 22ம் திருத்தத்தை கொண்டுவர தனிநபர் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சிங்கள இனவாதத்தைக் கக்கி வரும் பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவரான சுயாதீன எதிரணி எம்.பி. உதய கம்மன்பில கடந்த வாரம் இதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார். மற்றொரு சிங்கள இனவெறி அரசியல் கட்சியான விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணி எம்.பி. மொகமட் முசம்மில் இதனை வழிமொழிந்தார்.

சட்ட மாஅதிபரின் அவதானிப்பை இச்சட்டமூலம் பெற்ற பின்னர் 52(4)ம் நிலையியற் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் வர்த்தமானியில் பிரசுரமாகும். இது நாடாளுமன்றத்துக்கு வரும் பட்சத்தில் நடத்தப்படும் வாக்கெடுப்பில் வெல்லுமா தோற்குமா என்பதற்கும் அப்பால், சிங்கள பேரினவாதம் சாதாரண காவற்துறை அதிகாரங்கூட மாகாணங்களுக்கு இருக்கக்கூடாது என்பதில் எவ்வளவு தூரம் துவேசத்துடன் செயற்படுகின்றது என்பதை இதனூடாக நோக்க முடிகிறது.

அதிகாரப் பரவலாக்கல் என்ற அடிப்படைக் குறிக்கோளால் 13ஆம் திருத்தத்தில் இணைக்கப்பட்டது மாகாண நிர்வாகம். இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக உருவான 13ஆம் திருத்தத்தை வெற்றுக்கடதாசியாக்குவதற்கு சிங்களப் பேரினவாதம் தொடர்ந்து போராடி வருகிறது.

எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேமதாச தமது காலஞ்சென்ற தந்தை ரணசிங்க பிரேமதாச போன்று ராணுவ ரீதியாக தமிழர் பிரச்சனைக்குத் தீர்வு க ாண விரும்புவது போலத் தெரிகிறது. போர்க்குற்றவாளிகளாகவும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களாகவும் அடையாளம் காணப்பட்ட முன்னாள் ராணுவ அதிகாரிகளையும், தளபதி களையும் தமது கட்சியில் இணைப்பதில் அதீத அக்கறை காட்டி வருகிறார்.

போர் உக்கிரமடைந்திருந்த வேளையில் ராணுவ தளபதியாகவிருந்த சரத் பொன்சேகா ஏற்கனவே சஜித் பிரேமதாச அணியிலுள்ளார். மீண்டும் ஒரு தடவை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் விருப்பம் அவரிடம் இன்னமும் இருக்கிறது. இவர் ஒருவர் போதாது என்று தமிழர் தாயகத்தில் போரில் முன்னணியில் நின்ற படைத்துறை அதிகாரிகளை ஒவ்வொருவராக சஜித் தம்முடன் இணைத்து வருகிறார்.

**ஜனாதிபதி தேர்தல் ஒக்ரோபரில் நடைபெறவுள்ளதாக நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச தெரிவித்த போதிலும் தேர்தல் நடைபெற்று முடியும்வரை அதனை நம்பும் நிலையில் பலரும் இல்லை. ஆனாலும் தேர்தலை இலக்கு வைத்து அரசியல் கட்சிகள் தங்கள் மீதான நம்பிக்கையின்மையால் அணிகளை உருவாக்கி வருகின்றன. ரணில் தமது பாணியில் மற்றைய கட்சிகளை பிளவுபடுத்தி லாபம் பெறும் முயற்சியில் அமைதியாக செயற்பட்டு வருகிறார்.**

முன்னாள் கடற்படைத் தளபதியான சரத் வீரசேகர போன்ற படைத்துறை அதிகாரிகளை உள்வாங்கி வியத்கம என்ற ‘குசினி ஆலோசனை’ அமைப்பை உருவாக்கி ஜனாதிபதியான கோதபாய ராஜபக்ச, அவர்களின் வழிநடத்தலில் செயற்படப் போய் இறுதியில் என்னவானார் என்பதை சஜித் பிரேமதாச எண்ணிப் பார்க்க மறந்துவிட்டார்.

கொழும்பிலுள்ள ஆங்கில ஊடகமொன்றில் பணியாற்றும் ஒருவர் இந்தப் பத்தியாளரிடம் சில நாட்களுக்கு முன்னர் இதுபற்றித் தெரிவிக்கையில், “சஜித் பிரேமதாசவை நெருக்கடியில் தள்ளி பழிவாங்குவதற்காக முன்னாள் படைத்துறை அதிகாரிகளை ரணில் விக்கிரமசிங்கவே அவரிடம் அனுப்பி விடுகிறார்” என்று கூறியதில் உண்மை இருக்கலாம்.

ஜே.வி.பி.யின் தலைவர் அனுர குமார திசநாயக்க அடுத்த ஜனாதிபதி தாமே என்ற நம்பிக்கையில் வீச்சாக நடைபயில்கிறார். அழைக்கும் நாடுகளுக்கெல்லாம் சென்று வருகிறார். அமெரிக்கா சென்றபோது அமோக வரவேற்பு. இந்தியாவும் சும்மா விடவில்லை. அங்கு ஏகப்பட்ட சந்திப்புகள். ஜனாதிபதித் தேர்தல் தேவைக்கு பெருந்தொகை நிதியை இந்தியாவிடமிருந்து அவர் பெற்றதாக பௌத்த விகாராதிபதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

1971 ஏப்ரலில் அன்றைய பிரதமர் சிறிமாவோவின் அரசைக் கவிழ்த்து ஆட்சியைக் கைப்பற்ற றோஹண விஜேவீர தலைமையிலான ஜே.வி.பி. மேற்கொண்ட புரட்சியை இந்திரா காந்தி தலைமையிலான இந்திய ஆட்சிபீடமே தவிடுபொடியாக்கியது. இரண்டு வாரங்களில் பல்லாயிரம் சிங்கள இளைஞர்களை கொன்று குவிக்க இந்தியா ஒரு டசின் ராணுவ உலங்கு வானூர்திகளை இலங்கைக்கு வழங்கியது ரகசியமன்று.

1987ல் இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபோது அதற்கு எதிர்ப்பு தெரிவிக்குமுகமாக ஜே.வி.பி. பாரிய வன்செயல்களில் ஈடுபட்டது. இந்திய பொருட்களுக்கு தடை விதித்தது. இந்திய சினிமாப் படங்களுக்கு தடை விதித்தது. இதனை மீறியவர்களை படுகொலை செய்தது. இன்று ஜே.வி.பி. இந்தியாவின் ‘தோழன்புள்ள’ பிரியன். அரசியலில் நண்பன் பகைவனாவதும், பகைவன் நண்பனாவதும் - மாற்றம் ஒன்றே மாற்றமில்லாதது.

அனுர குமார திசநாயக்கவின் இந்திய விஜயம் தொடர்பாக ஊடகவியலாளர் ஒருவர் வினவியபோது ரணில் வழங்கிய பதில் சுவையானது. “வழக்கமாக தேர்தல் நடைபெறவுள்ள வேளைகளில் எதிர்க்கட்சியினரையே இந்தியா அழைத்து உரையாடுவது வழக்கம். தற்போது இலங்கையில் எதிர்க்கட்சியாக சஜித் பிரேமதாச அணி இல்லையென் பதை இந்தியா புரிந்துள்ளது” என்ற பதிலினூடாக சஜித் பிரேமதாசவை அரசியலின் ஓரத்துக்கு நாசூக்காக தள்ளியுள்ளார்.

இலங்கையில் நடைபெறப் போகும் ஜனாதிபதி தேர்தலில் கட்சி வேட்பாளர்கள் என்ற அடிப்படையில் அல்லாது கூட்டு அணிகளின் வேட்பாளர்கள் என்பதிலேயே பலரும் அக்கறை கொண்டுள்ளனர். இதற்காக சிறிய கட்சிகள் சுயாதீன குழுக்கள், சுயேட்சைகள் தங்களுடன் இணைத்துக் கொள்வதில் பல கட்சிகளும் தீவிரம் கொண்டுள்ளன.

ரணில் விக்கிரமசிங்க மட்டும் முற்றிலும் மாறாக மற்றைய கட்சிகளையும் அணிகளையும் பிளந்து பிரித்து அதிலுள்ளவர்களை தமது அணிக்குள் இழுக்கும் தமது வழக்கமான பாணியில், அமைதியாக செயற்பட்டு வருகிறார்.


அதேசமயம், தமிழரசுக் கட்சித் தலைவர் தெரிவுப் போட்டியில் சுமந்திரன் தோல்வியடைந்ததையிட்டு ரணில் மகிழ்ச்சி கொண்டுள்ளதாகவும் கொழும்பு ஊடக நண்பரொருவர் தெரிவித்தார். “எங்கள் சட்ட மாஅதிபர்” என்று சுமந்திரனை சில மாதங்களுக்கு முன்னர் ரணில் விக்கிரமசிங்க அழைத்தமை ‘வஞ்சகப் புகழ்ச்சி’ என்று ரணிலின் அமைச்சர் ஒருவர் கூறியுள்ளது கவனிக்கப்பட வேண்டியது.



# பேசாமல் பேசும் திறன்: எலான் மஸ்க் திட்டம் என்ன?

மருத்துவர் ஆ. காட்சன்

சிந்திப்பதை எல்லாம் மனிதனால் செயல்படுத்த இயலாது என்பதை உணர்ந்த கண்ணதாசன், ‘நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால் தெய்வம் ஏதுமில்லை’ என்று எழுதிவைத்துச் சென்றார். ஆனால், மனித மூளை சிந்தித்தால் மட்டுமே போதும், அதை அந்நபரின் முயற்சி இல்லாமலேயே செயல்பாடாக நடத்திக் காண்பிக்க முடியும் என்பதை நிரூபிப்பதில் முதல் மைல்கல்லைத் தொழிலதிபர் எலான் மஸ்க் எட்டியுள்ளார்.




**சிந்தித்தாலே போதும்!**

யாரையேனும் திறன்பேசியில் அழைக்கவேண்டுமானால், அதை எடுத்துத் தொடுதிரையைத் தொட்டு, பெயரைத் தேடி அழைப்பதுதான் வழக்கம். சில திறன்பேசிகளில் நண்பரின் பெயரை உச்சரித்தால் அதுவே அழைத்துவிடும். ஆனால், கைகளைப் பயன்படுத்த முடியாத அல்லது பேச முடியாத பாதிப்புகளை ஏற்படுத்தும் நரம்பியல் நோய்கள் உள்ள நபர்களுக்கு இது சாத்தியமல்ல.

இப்படிப் பாதிப்புக்குள்ளான நபர்கள், நண்பர் ஒருவரைத் தொடர்புகொள்ள வேண்டுமென்று சிந்தித்தாலே போதும், அவரது திறன்பேசி அவர் நினைத்த நண்பருக்கு அழைப்பைப் பெற்றுக்கொடுக்கும் அல்லது பேச முடியாத நபரின் சிந்தனைகளை அவரது நண்பருக்குத் திறன்பேசியின் மூலம் குறுஞ்செய்தியாக அனுப்ப முடியும். இதுதான் எலான் மஸ்க்கின் ‘நியூராலிங்க்’ (Neuralink) நிறுவனத்தின் ‘டெலிபதி திட்டம்’ (Telepathy project).

**எப்படிச் சாத்தியமாகும்?**

ஒரு நடவடிக்கையைச் செயல்படுத்தும் முன் நுணுக்கமாகத் திட்டமிடுவது, அதை உடல் உறுப்புகள் மூலம் செயல்படுத்துவது, பேச்சுத்திறன் போன்றவை முன்மூளையின் (Frontal lobe) வெவ்வேறு பகுதிகளின் செயல் பாடுகளாகும்.

உடல் உறுப்புகளைப் பயன்படுத்தி வெளியுலகைத் தொடர்புகொள்ள இயலாத நபரின், நடவடிக்கைகளைத் திட்டமிடும் (Planning) மூளைப் பகுதியில் ‘நியூராலிங்க் சில்லு’ (Neuralink Chip) ஒன்றை ரோபாட்டிக் நுண்துளை அறுவைசிகிச்சை மூலமாகப் பொருத்துவது நியூராலிங்க் திட்டத்தின் முதல்கட்டம்.

பின்பு, பிரத்யேகமாகத் தயாரிக்கப்பட்ட இந்தச் சில்லுவின் நுண் இழைகள் மூலமாகச் சேகரித்து அனுப்பப்படும் அலைக்கற்றைகளை இதற்கென்று தயாரிக்கப்பட்ட திறன்பேசி அல்லது கணினிச் செயலிகள் குறிவிளக்கம் (Decode) செய்து திறன்பேசி அல்லது கணினியை வேலை செய்ய வைக்கிறது. இதன் மூலம் செயற்கை உறுப்புகளைக் கூட சிந்திப்பதன் மூலம் அந்நபரை செயல்படுத்தவைக்கலாம்.

மூளையின் சிந்தனைக்கும் திறன்பேசி - கணினிகளின் செயல்பாட்டுக்கும் இடையிலான இடைவெளியை நிரப்பும் இந்த மந்திரப் பயன்பாடு ‘மூளை-கணினி இடைமுகம்’ (Brain-Computer Interface) என்று அழைக்கப் படுகிறது.

**எதிர்காலத் திட்டங்கள்:**

மூளைநரம்பு நோய்களால் பார்வை, பேச்சுத்திறன், கைகால் செயலிழப்பு ஏற்பட்டவர்கள் தங்களது சிந்தனையில் உள்ளதை வெளிப்படுத்தவும், விரும்பிய செயல்களைச் சிந்திப்பதன் மூலம் மட் டுமே நடைமுறைப்படுத்தும் வகையில் நியூராலிங்க் திட்டம் வடிவமைக்கப் பட்டுள்ளது. எதிர்காலத்தில் மருத்துவத் துறைக்கு அப்பாற்பட்ட பல நோக்கங்களுடன் இது விரிவுபடுத்தப்பட இருப்பதாக எலான் மஸ்க் தெரிவித்துள்ளார்.

மூளையில் சில்லு பொருத்தப்பட்ட இரண்டு நபர்கள், தங்களுக்கிடையே சிந்தனைகளைத் தூரத்திலிருந்தவாறே பரிமாறிக்கொள்ள முடியும். இதனால்தான் இந்தத் திட்டத்துக்கு ‘டெலிபதி’ என்று பெயரிடப்பட்டுள்ளது. ஸ்டான்லி குப்ரிக்கின் ‘தி ஷைனிங்’ (1980) திரைப்படத்தில் இப்படியான அறிவியல் தொடர்புகள் இல்லாமலேயே, இதை ஒரு அமானுஷ்ய வித்தை போலச் சித்தரித்திருப்பதை சினிமா ரசிகர்கள் கவனித்திருக்கலாம்.

மூளை - கணினி இடைமுகத்தின் மூலம், சிந்திப்பதைச் செயற்கை நுண்ணறிவுக்கு அனுப்பி, செயலிகள் மூலம் கட்டுரைகூட எழுதவைக்க முடியும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்காலத்தில் ஆயிரக்கணக்கான சிலிக்கான் துகள்களை மூளைக்குள் செலுத்தி, அதன் மூலம் நரம்புகளின் வேலைகளை வெளியிலிருந்தே கட்டுப்படுத்தும் திட்டமும் உள்ளது. இதற்கு நரம்புத் தூசுகள் (Neural dust) என்றழைக்கப்படும் தூசுபோன்ற சிலிக்கான் சில்லுகளைப் பயன்படுத்த விருப்பதாகவும் தெரிகிறது. உச்சகட்டமாக, ஒருவர் உலகைப் புரிந்துகொள்ளும் விதத்தையே மாற்ற முடியும் என்பது ஆச்சரியமான, அதிர்ச்சிகரமான தகவல்.

**காத்திருக்கும் சவால்கள்:**

இந்த உயிரிச் சில்லுவை (Bio-chip) மனித மூளைக்குள் பதிக்கும் முதல்கட்ட வேலை ஜனவரி 29 அன்று வெற்றிகரமாக நடந்துள்ளது. இனி அது அனுப்பும் அலைக்கற்றைகளைக் குறிவிளக்கம் செய்து, நினைத்த காரியத்தைச் சாத்தியமாக்குவது பெரும் சவாலானது. இந்த மூளை - கணினி இடைமுகத்தை நிரப்புவது செயற்கை நுண்ணறிவுதான் (Artificial Intelligence).

இதனால் எலான் மஸ்க்கின் இந்தப் பரிசோதனை முயற்சி ஒருவேளை சாத்தியமானாலும், கூகிள் போன்ற தேடுதளங்களில் நாம் ஒன்றைத் தேடும்போது, செயற்கை நுண்ணறிவின் மூலம் தரப்படும் பரிந்துரைகள் சில நேரம் தவறாக இருப்பதைப் போல், மூளை-கணினி இடைமுகத்தின் செயல்பாடுகள் ஒரு சதவீதம் இருந்துவிட்டால்கூட இதன் விளைவு மோசமாக இருக்கும் என்று ஆராய்ச்சியாளர்கள் எச்சரிக்கின்றனர்.

இந்தத் திட்டத்தின் கீழ் இயங்கவிருக்கும் சுமார் 50 வகையான பணியாளர்களில் ஒருவர் மட்டுமே நரம்பியல் அறுவைசிகிச்சை நிபுணராவார். மற்ற எல்லா பணியாளர்களும் மென்பொருள் தொழில்நுட்ப நிபுணர்கள்தாம். எனவே, இத்திட்டத்தை ஆய்வகப் பரிசோதனையிலிருந்து மருத்துவத் துறைக்கு மாற்றும்போது பல மருத்துவ நெறிமுறைச் சிக்கல்களுக்கு (Medical Ethical problems) உள்ளாக வாய்ப்புள்ளது.




**மனநலம் சந்திக்கவிருக்கும் சவால்கள்:**

அறிவியல் தொழில்நுட்பங்கள் முன்னேறும் போதெல்லாம் அதற்கேற்ப மனநலப் பாதிப்புகளின் அறிகுறிகளும் புதிய பரிமாணங்களை எடுத்துக்கொள்வது வழக்கம். வேற்றுக்கிரகவாசிகள் தங்களுடன் தொடர்பு கொள்கிறார்கள், தங்கள் சிந்தனைகளைப் பிறர் அறிந்துகொள்கிறார்கள் அல்லது அவை வெளியே ஒளிபரப்பப்படுகின்றன, தூங்கும்போது தங்களது மூளைக்குள் வைக்கப்பட்ட சில்லு மூலமாகத்தாங்கள் கண்காணிக்கப்பட்டுக் கட்டுப்படுத்தப்படுகிறோம் என்றெல்லாம் மனச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் மனப்பிறழ்வுக்கு ஆளாவதுண்டு.

ஆனால், நியூராலிங்க் திட்டத்தின் மூலம் இதுஉண்மையில் நடக்கச் சாத்தியம் ஏற்படுமாயின் நிஜத்திலிருந்து மனப்பிறழ்வை வித்தியாசப்படுத்துவது சவாலாக இருக்கும். சிந்தனைகளில் தோன்றும் எதிர்மறை எண்ண ஓட்டங்களெல்லாம் நிஜத்தில் நடந்துவிடுமோ (Magical thinking) என்றபதற்றத்துக்கு ஆளாவது, எண்ணச் சுழற்சி நோயின் (OCD) ஒரு அறிகுறியாகும்.

ஆனால், சிந்திப்பதேசெயல்பாட்டுக்குச் சமம் (Thought is equal to act)என்பது நியூராலிங்க் மூலம் சாத்தியமானால், திறன்பேசிகள், செயற்கை நுண்ணறிவு போன்ற தொழில்நுட்ப முன்னேற்றங்களால் பல சவால்களை எதிர்கொண்டு வரும் மனநலத் துறை, இன்னும் அதிகச் சவால்களைச் சந்திக்க நேரிடும்.

**எதிர்பார்ப்பும் விமர்சனங்களும்**

எலான் மஸ்க்கை ஆதரித்துப் பலர் பேசினாலும் பல விமர்சனங்களையும் அவர் எதிர்கொண்டிருக்கிறார். டெஸ்லா கார்கள் மூலம் ஓட்டுநர் இல்லாப் போக்குவரத்து, ஸ்பேஸ் எக்ஸ் மூலம் விண்வெளி ஆய்வுகள், புவி வெப்பமாதலிலிருந்து விடுவிக்கும் முயற்சிகள் முதல் நியூராலிங்க் திட்டம் வரை எல்லாமே அவரது விசித்திரமான அல்லது பிரம்மாண்ட மனநிலையின் வெளிப்பாடுகள் என்று சில அறிவியலாளர்கள் விமர்சிக்கின்றனர்.

கண்ணதாசன் பாடலில் சொன்னது போல, கடவுளின் இடத்தை மனிதனின் மனதிலிருந்து எடுக்கும் ‘எதிர் கடவு’ளை உருவாக்கும் முயற்சியாக இதைக் கருதி இறையியலாளர்களும் எதிர்ப்புக் காட்டி வருகிறார்கள். ‘நியூராலிங்க் சில்லு’ மூளையில் பொருத்தப் பட்டுள்ள நபரின் உடல்நிலை சீராக இருப்பதாகவும், விரைவில் பிரத்யேகச் செயலிகள் மூலம் அவரது சிந்தனை ஓட்டங்கள் கண்காணிக்கப்பட இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஒருவேளை இம்முயற்சி வெற்றிகரமாக முடிந்தால் மருந்துகள், அறுவை சிகிச்சைகளால் பயன்பெற முடியாமல் இயன்முறை மருத்துவத்தை மட்டும் நம்பியிருக்கும் உறுப்புகள் செயலிழந்த, ஆனால் சிந்திக்கும் திறனுள்ள நபர்களுக்குப் வரப்பிரசாதமாக அமையலாம்.






# ஆர்.ஆர். அண்ணனின் இழப்பு ஓர் எதிர்பாராத துயரம்

யதீந்திரா

காலம் எல்லோரையும் ஒரு நாள் பிரிக்கும். இந்த உண்மையை நாம் உணர்ந்திருந்தாலும் கூட, நம்மால் நேசிக்கப்பட்டவர்கள் - நம்மை நேசித்தவர்கள், நம்மை விட்டு பிரிகின்ற போது, நம்மை ஆட்கொண்டிருக்கும், கால உண்மையை மீறியும், நம் கண்கள் ஈரமடைகின்றன. இதயம் கனக்கின்றது. ஆர்.ஆர் அண்ணனின் பிரிவும் அப்படியான ஒன்று தான். ஆர்.ஆர் அண்ணன் இவ்வாறு பிரிவாரென்று, ஒரு கணமேனும் எவருமே எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். இது ஓர் எதிர்பாராத துயரம்தான். அவர் உடல் நலக் குறைவால் பாதிக்கப்பட்டிருப்பதாக, சித்தார்த்தன் அண்ணன் குறிப்பிட்ட போது, எல்லாம் சரியாகிவிடும், போய் பார்க்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டேன். அது நிராசையாகிவிட்டது.

ஆர்.ஆர் அண்ணன், 2009இற்கு பின்னரான அரசியல் சூழலில் எனக்கு அறிமுகமான பல நண்பர்களில் ஒருவர். ஆனால் பலருடன் நாம் பழகினாலும், உரையாடிக் கொண்டாலும் கூட, சிலருடன் மட்டும்தான், ஏதோவொரு நெருக்கம் ஏற்பட்டுவிடுகின்றது - அவர் எந்த இயக்கத்தை சேர்ந்தவர், அந்த இயக்கம் பற்றி கதைகள் எத்தகையது - அவரது கடந்த காலம் எவ்வாறானது - என்னும் விசாரணைகள் எவையும் அந்த நெருக்கத்தை குலைப்பதில்லை.

ஆர்.ஆர் அண்ணனுடனான நெருக்கம் இப்படியான ஒன்றாகவே இருந்தது. அவரது யதார்த்தமான பார்வையும், எனது அரசியல் பார்வைகளோடு அவருக்கிருந்த ஒத்த கருத்துக்கள் என்பனவும் அவர் மீதான எனது மதிப்புக்குக் காரணமாக இருக்கலாம் - எல்லாவற் றுக்கும் அப்பால், தனிப்பட்ட ரீதியில் என்மீது அவருக்கிருந்த மதிப்பான நட்பும், எங்களுக்கிடையிலான பரஸ்பர மதிப்பிற்கு காரணமாக இருந்திருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகின்றது. ஒருவர்



நம்மை விட்டு பிரிகின்ற போது, அவர் தொடர்பில் சில குறிப்புக்களை எழுத வேண்டும் என்னும் எண்ணம் ஏற்படுவதும் கூட, இந்த நெருக்க உணர்வின் விளைவுதான்.

2011இல்,. அப்போது நான் பல தளங்களில் எழுதிக் கொண்டிருந்தேன். "மிகுதி நேரில்" என்னும் தொடர் பத்தி ஒன்றையும் ஞாயிறு தினக்குரலில் எழுதிக் கொண்டிருந்தேன். அது பொங்குதமிழ் என்னும் இணைத்தளத்தல் மறுபிரசுரமாகியது. நமது அரசியலின் கடந்த காலத்தை திரும்பிப்பார்க்க வேண்டிய தன் அவசியத்தை வலியுறுத்தும் சுய விமர்சன எழுத்துக்களாகவே அவை இருந்தன. அந்த சந்தர்ப்பத்தில்தான், ஆர்.ஆர் அண்ணன் தானாவே என்னுடன் தொடர்பு கொண்டார். உங்களுடைய எழுத்துக்கள் சிறப்பாக இருக்கின்றன - அதனால்தான் நானாகவே உங்களுடன் தொடர்பு கொள்கின்றேன் என்றார். அதன் பின்னர், சித்தார்த்தன் அண்ணன் என்னுடன் பேசினார். நட்பு தொடர்கின்றது.

ஆர்.ஆர் அண்ணன் சார்ந்திருந்த தமிழீழ மக்கள் விடுதலை கழகம் (புளொட்) தொடர்பிலோ, அதன் அன்றைய காலம் தொடர்பிலேயே எனக்கு எதுவும் தெரியாது. ஓர் அரசியல் மாணவனாக படித்தும் - கேட்டும் அறிந்து கொண்டவைகள்தான் அனைத்தும் - ஆனாலும், அவை தொடர்பில் கறுப்பு வெள்ளையான பார்வைகள் என்னிடமில்லை. அனைத்து இயக்கங்களிலும் அற்புதமான மனிதர்கள் இருந்தனர் - அவர்கள் தாங்கள் நேசித்த இயக்கத்திற்காக தங்களை தியாகம் செய்தனர் என்பதே உண்மை. ஆர்.ஆர் அண்ணனையும் நான் அவ்வாறான ஒருவராகவே பார்க்கின்றேன். இயக்கங்களுடையில் மோதல்கள் ஏற்பட்ட போது - அதாவது, தாங்கள் நேசித்த மக்களை மறந்து, தாங்கள் விரோதித்த பிரதான எதிரியை மறந்து, தங்களுக்குள் தியாகிகளையும் துரோகிகளையும் தேடுவதற்கான ஆடு - புலியாட்டத்தின் விளைவாக, பல நல்ல மனிதர்கள் அரசியலின் பெயரால் அழிந்து போயினர். மக்களுக்காக, தங்களின் வாழ்வை அர்ப்பணிக்கப் புறப்பட்டவர்கள், இறுதியில் மக்கள் மத்தியிலேயே முகமிழந்து வாழும் அவலம் நிகழ்ந்தது. இவ்வாறான அவல வரலாறு ஒன்றின் சாட்சிதான் ஆர்.ஆர். அண்ணனும். அவரது காலத்தவர்களின், காலம் முழுவதும், இவ்வாறான வரலாறாகவே கழிந்திருக்கின்றது.

ஆர்.ஆர்.அண்ணன் சார்ந்த கழகத்தின் தோழர்களில் சிலருக்கு மட்டும் தெரிந்ததும், பொது வெளிகளில் பலரும் அறியாத விடயமும் ஒன்றுண்டு. 1988 இல் இடம்பெற்ற மாலைதீவு சதிப் புரட்சி தொடர்பில் இன்றைய தலைமுறையில் எவரும் அறிந்திருக்க மாட்டார். ஆனால் ஒரு சிறிய ஆயுத அமைப்பு, ஓர் அயல் நாட்டையே கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றது. இந்த தாக்குதல் திட்டத்திற்கு துணைப் படைத்தளபதியாக செயற்பட்டவர் ஆர்.ஆர் என்பது, பலருக்கும் தெரியாது. மாலைதீவு சதிப் புரட்சி பற்றி நான் அறிந்திருந்த கதைகள் வேறு. ஆனால் அவற்றின் உண்மைத் தன்மையை பற்றி ஆர்.ஆர் அண்ணனோடு உரையாடி ஒரு கட்டுரையையும் எழுதியிருக்கின்றேன்.

ஒரு சுவாரசியமான விடயமொன்றை ஆர்.ஆர் பகிர்ந்து கொண்டார். ஆரம்பத்தில் இந்தக் தாக்குதலுக்கான திட்டத்தை இந்திய உளவுத்துறையே வகுத்ததாக ஒரு புனைவு உலவவிடப்பட்டிருந்தது ஆனால், புளொட்டின் இந்தப் புரட்சி நடவடிக்கையை, தடுத்து, அவர்களை கைது செய்ததே இந்திய படைகள்தான். ஒப்பரேசன் நாகதாளி (Operation Cactus) என்னும் பெயரில் இந்திய கடற்படையே, குறித்த தாக்குதல் திட்டத்தை முறியடித்தது. தாங்கள் கைது செய்யப்பட்ட பின்னர், தங்களிடமிருந்த தொலைத் தொடர்பு கருவிகளை காட்டி, உங்களை பாக்கிஸ்தானா அனுப்பியது என்று கேட்டு, இந்திய படையதிகாரிகள் தங்களை அடித்த போது - தாங்களோ அடியை வாங்கிக் கொண்டு - இல்லை சேர், இது சிறிலங்கா இராணுவ முகாமை தாக்கிய போது, நாங்கள் கைப்பற்றியவை என்று தாங்கள் கூறியதாக - கூறிச் சிரித்தார். ஏனெனில் அந்த கருவிகள் பாக்கிஸ்தான் தயாரிப்பு.

தமிழ் சூழலில் மாலைதீவு புரட்சியில் புளொட்டின் பங்குபற்றல், தொடர்பில் விரிவாக எழுதப்பட்ட கட்டுரை அதுவாகத்தான் இருக்குமென்று, பின்னர் என்னுடன் பேசுகின்ற போது ஒரு முறை குறிப்பிட்டிருந்தார். அண்மையில் மாலைதீவு தொடர்பில் ஆங்கில கட்டுரை ஒன்றை எழுதுவதற்கான குறிப்புக்களை எடுத்துக் கொண்டிருந்த போதும், மாலைதீவு சதிப்புரட்சியில் பங்குகொண்டவர்களின் எண்ணிக்கை தொடர்பில் உறுதிசெய்து கொள்வதற்காக தொடர்பு கொண்டிருந்தேன்.

கொழும்பு செல்லும் போதெல்லாம் அவரை சந்திக்காமல் திரும்பிய சந்தர்ப்பங்கள் அரிதானது. அரசியல் தொடர்பில் நீண்ட நேரம் பேசிக்கொள்வோம். இனி அவ்வாறான ஒரு நண்பர் இல்லையென்னும் போது, மனது கனக்கின்றது.

# கனடா, பிரிட்டனில் பணிபுரிவோர் வாழ்க்கைத் துணையை அழைத்துச் செல்வது இனி கடினம்!

## புதிய விதிகள் என்ன?

பல மேற்கத்திய நாடுகள் தங்கள் விசா கொள்கைகளை மாற்றியுள்ளன. கனடா, பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் ஆஸ்திரேலியா போன்ற நாடுகள் புலம்பெயர்ந்தோர் பல்வேறு வகையான விசாக்களைப் பெறுவதற்கான சட்டங்களையும் விதிமுறைகளையும் கடுமையாக்கியுள்ளன.

கனடா, பிரிட்டன் ஆகிய நாடுகள் வாழ்க்கைத் துணைக்கான விசா பெறுவதற்கான விதிகளை கடுமையாக்குவதாக அறிவித்துள்ளன. இதனால், அந்நாடுகளில் பணிபுரிவோர் தங்களது வாழ்க்கைத் துணையை உடன் அழைத்துச் செல்வது இனி கடினமாகலாம்.

இலங்கை, மற்றும் இந்தியாவில் இருந்து கனடாவில் குடியேற பலரும் முயற்சிக்கின்றனர்.

அவ்வாறு, தங்கள் மனைவி மற்றும் குழந்தைகளை வெளிநாடுகளுக்கு அழைத்துச் செல்ல வாழ்க்கைத் துணைக்கான விசா தேவை. வாழ்க்கைத் துணை விசாவைப் பெற வெவ்வேறு நாடுகள் வெவ்வேறு கால அவகாசத்தை எடுத்துக் கொள்கின்றன.

வாழ்க்கைத் துணை விசா என்பது ஒரு வகையான சார்பு விசா அல்லது அனுமதிப் பத்திரமாகும். இது உங்களை குறிப்பிட்ட அந்த நாட்டில் வாழ அனுமதிக்கிறது.

**வாழ்க்கைத் துணை விசா என்றால் என்ன?**

வாழ்க்கைத் துணை விசாவைப் பெற விண்ணப்பதாரர் மற்றும் சார்ந்திருப்பவர் இருவரும் 18 வயதுக்கு மேல் இருக்க வேண்டும். இது தவிர, இருவருக்கும் திருமண சான்றிதழ் இருக்க வேண்டும்.

கூடுதலாக, ஒவ்வொரு நாடும் தனது துணையை அழைத்துக் கொள்பவருக்கு (ஸ்பொன்சர் பார்ட்னர்) குறைந்தபட்ச ஆண்டு வருமானத்தை நிர்ணயிக்கிறது. ஒவ்வொரு நாட்டிலும் இதற்கு வெவ்வேறு அளவு உள்ளது. இது மாறுபடலாம்.

இது தவிர, ஸ்பொன்சர் செய்யும் பார்ட்னர் தனது மனைவியுடன் வாழ போதுமான ஏற்பாடுகளை வைத்திருக்க வேண்டும்.

சார்ந்திருக்கும் துணைவர், அங்கீகரிக்கப்பட்ட ஆங்கில மொழித் தேர்வில் வெற்றிகரமாக தேர்ச்சி பெறுவதும் அவசியம்.

இதுதவிர, சம்பள சான்றிதழ், வங்கி விவரங்கள், செல்லுபடியாகும் பாஸ்போர்ட் ஆவணம், திருமணச் சான்றிதழ் ஆகியவை வாழ்க்கைத் துணை விசாவிற்கு தேவை. விவாகரத்து செய்திருந்தால், விவாகரத்து சான்றிதழ் மற்றும் குழந்தைகள் இருந்தால், அவர்களின் விவரங்களும் தேவை.

இங்கு ஒரு முக்கியமான விஷயம் என்னவென்றால், வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு விதிகளின்படி ஆவணங்களை அளித்தல் வேண்டும்.

**கனடா என்ன மாற்றங்களைச் செய்துள்ளது?**

கனடாவில் வாழ்க்கைத் துணை விசாவிற்கு விண்ணப்பித்து பெற எட்டு - ஒன்பது மாதங்கள் முதல் ஒரு வருடம் வரை ஆகும். இருப்பினும், அது பின்னர் ஏழு மாதங்களாகவும் பின்னர் ஆறு மாதங்களாகவும் இறுதியாக இரண்டு மாதங்கள் என்றும் குறைக்கப்பட்டது.

சில சந்தர்ப்பங்களில் இந்த விசாக்கள் ஒரு மாதத்திற்குள் வழங்கப்படுகின்றன. இருப்பினும், முதுநிலை அல்லது முனைவர் பட்டத்திற்கு படிக்கும் சர்வதேச மாணவர்கள் மட்டுமே தங்கள் வாழ்க்கைத் துணையை அழைக்க வாழ்க்கைத் துணை விசாவைப் பயன்படுத்த முடியும் என்று கனடா அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

அதற்கும் குறைந்த படிப்புகளில் படிக்கும் மாணவர்கள், இந்த விசாவில் தங்கள் வாழ்க்கைத் துணையை கனடாவுக்கு அழைக்க முடியாது.

கூடுதலாக, ஸ்பான்சர் செய்யும் பார்ட்னர், கனடா குடிமகனாகவோ அல்லது நிரந்தர குடியிருப்பாளராகவோ இருக்க வேண்டும். இயலாமை தவிர வேறு காரணங்களுக்காக அவர்கள் சமூக உதவியைப் பெறவில்லை என்பதை அவர் நிரூபிக்க வேண்டும்.

அவர் தன் வாழ்க்கைத் துணையின் நிதித் தேவைகளை மூன்று வருடங்கள் பூர்த்தி செய்ய வேண்டும்.

கனடாவின் ஐஆர்சிசி அமைச்சர் மில்லர் கூறும் போது, "கனடாவுக்கு அதிக எண்ணிக்கையிலான மாணவர்கள் வீடு, சுகாதாரம் மற்றும் பிற வசதிகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளனர். இங்கு வரும் மாணவர்கள் தீய சக்திகளின் வலையில் சிக்காமல் இருக்கவும் கனடாவின் மக்கள்தொகை நிலையானதாக வளரவும் வேண்டும் என்பதே எங்கள் முயற்சி" என்றார்.

**பிரிட்டன் என்ன மாற்றங்களைச் செய்துள்ளது?**

வாழ்க்கைத் துணை விசா பெறுவதற்கான விதிகளை பிரிட்டனும் கடுமையாக்கியுள்ளது. இத்தகைய கடுமையான சட்டங்களால் நாட்டுக்கு வரும் புலம்பெயர்ந்தோரின் எண்ணிக்கையை குறைக்க முடியும் என்று பிரிட்டன் அரசு நம்புகிறது.

ஏப்ரல் 2024 முதல் தங்கள் விசா மூலம் வாழ்க்கைத் துணையை பிரிட்டனுக்கு அழைத்துக்கொள்ள விரும்புவோருக்கு ஊதிய விதிகளில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

முன்னதாக, பிரிட்டனில் ஸ்பான்சர் பார்ட்னர், வாழ்க்கைத் துணை விசாவுக் விண்ணப்பிப்பதற்கான குறைந்தபட்ச ஆண்டு வருமானம் 18,600 பவுண்டுகளாக இருந்தது. இருப்பினும், புதிய விதிகள் இந்த குறைந்தபட்ச ஆண்டு வருமானத்தை ஏப்ரல் 2024-ல் 29,000 பவுண்டுகளாகவும், ஆண்டின் இறுதியில் 34,500 பவுண்டுகளாகவும் அதிகரிக்கும். இந்த குறைந்தபட்ச வருமானம் இறுதியாக 2025-ம் ஆண்டின் தொடக்கத்தில் 38,700 பவுண்டுகளாக உயர்த்தப்படும்.

ஈழநாடு



# டாக்டர் ப.விக்கினேஸ்வரா ஈராண்டு நினைவாக நூல் வெளியீடு:

டாக்டர் விக்கினேஸ்வராவின் ஈராண்டு நினைவாக "கலா நிதி த.கலாமணி அணிந்துரைகள்" எனும் நூல் தற்போது ஈழத்தில் வெளிவருகிறது.

சுன்னாகம் டாக்டர் ப. விக்கினேஸ்வரா மண்பயனுறச் சேவை நல்கிய மக்கள் மருத்துவர் ஆவார். இடர்காலத்தில் அவர் நல்கிய மருத்துவப் பணிகளை யாழ்ப்பா ணம் மண்ணும், மக்களும் என்றும் நினைவில் கொள்வர்.

மருத்துவ பணியாற்றிய வைத்தி யர் ப. விக்கினேஸ்வரா அவர்கள் அமரராகி (22.2.22) இரு வருட மாகிறது. ஆனால் அவரிடம் சிகிச்சைபெற்ற மக்கள் இன்றும் அவரது திறமை களையும், சேவை களையும் புகழ்ந்து நினைவு கூரு கின்றனர்.

ஜீவநதி பதிப்பகத்தின் 332 ஆவது வெளியீடாக, பிரபல வைத்தியரும் இடர்காலத்தில் மண் பயனுறச் சேவை நல்கிய மக்கள் மருத்துவர் சுன்னாகம் டாக்டர் விக்கினேஸ்வரா அவர்களின் ஈராண்டு நினைவாக, 'கலாநிதி த.கலாமணி அணிந்துரைகள்' வெளிவருகின்றது.

ஒவ்வொரு வருடமும் டாக்டர் ப.விக்கினேஸ்வரா நினைவாக ஈழத்து எழுத்தாளர்களின் நூல்கள் வெளியிடப்பட்டு வருகின்றமை அறிந்ததே. 2022 இல் மறைந்த டாக்டர் ப.விக்கினேஸ்வராவின் 31ம் நாள் நினைவாக பேராசிரியர் பாலசுகுமார் எழுதிய "ஈழத்தில் மாட்டு வண்டிச் சவாரியும் தமிழர் மரபும்" எனும் நூல் வெளியானது.

இதன்பின் கடந்த வருடம் 2023 இல் டாக்டர் ப.விக்கினேஸ்வராவின் முதலாவது ஆண்டு நினைவாக ஈழத்தின் பிரபல்ய எழுத்தாளர் தீபச்செல்வன் எழுதிய "பள்ளிக் கூடங்கள் கட்டடக்கூடுகள் அல்ல" எனும் கல்வியியல் கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியிடப்பட் டது.

இவ்வருடம் டாக்டர் விக்கினேஸ்வரா ஈராண்டு நினைவாக கலாநிதி த.கலாமணி அவர்களால் எழுதப்பெற்ற 35 படைப்பாளர்க ளின் நூல்களுக்கான அணிந்துரை களின் தொகுப்பு நூலான "கலாநிதி த.கலாமணி அணிந்துரைகள்" எனும் நூல் தற்போது வெளிவரு கின்றமை குறிப்பிடத்தக்கது. ●






உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி

வியுக்தியார் பதில்கள்
ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
viyukthiyar@gmail.com

# வியுக்தியார் பதில்கள்

**செல்வா. கேசவன்**
**சங்கிலியன் வீதி, நல்லூர்.**

**கேள்வி:** இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு மற்றும் பொதுக்குழுக் கூட்டங்களுக்கு எதிராக வழக்குகளைத் தொடுத்துள்ள கட்சி உறுப்பினர்களிடம் வழக்குகளை வாபஸ் பெறக்கோருவது என்றும், நிபந்தனை இல்லாமல் வழக்குகளைக் கைவாங்க அவர்கள் இணங்காவிட்டால், தொடர்ந்து வழக்குகளை எதிர்கொள்வது என்றும் தமிழரசுக் கட்சியின் பிரமுகர்கள் கூடி முடிவுசெய்துள்ளதுடன் சுமந்திரன் இல்லாத சட்டத்தரணிகள் குழு ஒன்றின் மூலம் வழக்குகளை சந்திப்பது என்றும் முடிவுசெய்துள்ளதாமே. இதுவரை தமிழர்கள் சம்பந்தப்பட்ட வழக்குகள் மட்டுமன்றி தெற்கு அரசியல் வழக்குகளையும் சுமந்திரனே வாதாடி வந்த நிலையில் இப்படியொரு முடிவை எடுப்பது சரியானதா?

**வியுக்தியார்:** சுமந்திரனும் ஒரு எதிர் மனுதாரராக சேர்க்கப்பட்டுள்ள நிலையில் அவர் அந்த வழக்கில் ஆஜராக முடியாது என்பது சட்டத்தை படித்த சாதாரண சட்டத்தரணிகளுக்கும் தெரிந்திருக்கும். அப்படியொரு நிலையில் அவர் எப்படி கட்சியின் தலைமை கேட்டால் அந்த வழக்குகளில் தான் ஆஜராக தயாராக இருப்பதாக அறிவித்தார் என்பது இன்னும்தான் இந்த வியுக்தியாருக்கு புரியவில்லை. அது சரி, 27ம் திகதி மத்திய செயற்குழுவில் முடிவெடுக்கப்பட்டதுபோல அதாவது குகதாசனை பொதுச்செயலாளராக தெரிவுசெய்த முடிவை அப்படியே தொடர்வதெனில் வழக்குகளை வாபஸ்பெற ஏற்பாடு செய்வதாக நமது மட்டக்களப்பு எம்.பி. சாணிக்கிய, புதிய தலைவருடன் பேரம்பேசியதாக ஒரு செய்தி வந்ததே. அதிலிருந்து இந்த வழக்குகளின் பின்னணியில் யார் இருக்கிறார்கள் என்பது புரியவில்லையா? அப்படியிருக்கையில் சட்டம் இடம்கொடுத்தாலும், சுமந்திரனை ஆஜராக விடுமளவிற்கு விசயம் புரியாதவர் இல்லையே புதிய தலைவர்.

---

**க. தில்லைநாதன்,**
**மட்டுவில், சாவகச்சேரி**

**கேள்வி:** 2009 வன்னி இறுதிப் போரில் ஏராளமான தமிழ் மக்கள் கொல்லப்பட காரணமானவர்களுள் ஒருவராக அறியப்படும் மேஜர் ஜெனரல் சத்தியப்பிரிய லியனகேயும் கடைசியாக ஐக்கிய மக்கள் சக்தி கட்சியில் இணைந்துள்ளாராமே. இப்படியே போனால், கோட்டாவின் கட்சிபோல அல்லவா சஜித் கட்சியும் மாறப் போகின்றது?

**வியுக்தியார்:** முன்னர் ஒரு தடவை ஒரு ராணுவ அதிகாரியிடம் கோட்டாபய இப்படி ராணுவ அதிகாரிகளையே முக்கிய பதவிகளுக்கு நியமிப்பது குறித்து கேட்டபோது அவர் சொன்னதுதான் ஞாபகத்திற்கு வருகின்றது. அவர் சொன்னார், 'ராணுவத்திலும் நிர்வாக திறமையுள்ளவர்கள் இருக்கிறார்கள். இருந்தார்கள். ஆனால் கோட்டா அவர்கள் யாரையும் பயன்படுத்தவில்லை. மாறாக சண்டையில் திறமையானவர்களையே பயன்படுத்தினார். அதற்கு காரணம், சண்டை பிடிப்பதில் கொட்டிக்காரர் என்றால், அவர்கள் எப்படியான மனநிலை உள்ளவர்கள் என்பது தெரியும்தானே. அவர்கள் மூளையைப்பயன்படுத்துபவர்கள் இல்லையே. அவர்களைத்தான் கோட்டா பயன்படுத்தினார். நிர்வாகம் தெரிந்தவர்களை பயன்படுத்தினால், அவர்கள் தன்னை மிஞ்சிவிடுவார்களோ என்ற எண்ணமாக இருக்கலாம்." என்று. இப்போது சஜித்தும் சண்டையில் திறமையானவர்களை தேடித்தேடி கட்சியில் சேர்த்து வருகிறார். என்னதான் நடக்கின்றது என்று பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

---

**எம். கௌதம்,**
**அமிர்தகழி, மட்டக்களப்பு**

**கேள்வி:** இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஸ் ஜா, பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனை அழைத்து, யாழ் இந்தியத் துணைத்தூதரகத்தில் சந்திப்பொன்றை நடத்தியுள்ளார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டமைக்காக சிறீதரனுக்கு வாழ்த்துரைத்த அவர், கட்சியின் உள்ளக முரண்பாடுகளைக் களைந்து, அடுத்தகட்ட நகர்வுகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளாராமே?.

**வியுக்தியார்:** தமிழ்அரசு கட்சிக்கான தலைவர் தேர்தலின்போது, ஒரு வேட்பாளர் தனது பிரச்சாரத்தின் போது தான் தலைவராக வருவதையே அமெரிக்கா விரும்புகின்றது என்றும், தான் தலைவராக வந்தால் நமது பிரச்சினைக்கும் தீர்வு கண்டுவிடலாம் என்றும் பிரச்சாரம் செய்ததாக நமது ஊர்க்குருவியர் ஒரு தடவை எழுதியிருந்தார். அப்போது சிறிதரன் தலைவராவதைத் தான் இந்தியா விரும்புவதாகவும் சில செய்திகள் தெரிவித்திருந்தன. தாங்கள் விரும்பிய ஒருவர் தலைவரானது அவர்களுக்கு சந்தேசமாக இருந்திருக்கும் தானே. அதுதான் அவரைக் கூப்பிட்டு வாழ்த்தினார்களோ தெரியவில்லை. அவர்கள் விரும்பியவர் தலைவரானாலும் தற்போது ஏற்பட்டிருக்கும் உள்கட்சி நெருக்கடிக்கு தீர்வுகாண யோசனையும் சொல்லியிருப்பார்களோ என்னவோ?

**ரி. ஜீவன்குமார் வெள்ளவத்தை,**
**கொழும்பு.**

**கேள்வி:** எல்லை மீறும் இந்திய இழுவைப் படகுகளை தடுக்க நடவடிக்கை எடுக்காவிடின் கடலில் அசம்பாவிதங்கள் இடம்பெறுவதை தடுக்க முடியாமல் போகும் என யாழ். மீனவர்கள் எச்சரித்துள்ளனரே. அது சட்டத்தை மீறும் செயலாக அவர்களுக்கு தெரியவில்லையா?

**வியுக்தியார்:** எல்லை தாண்டி மீன்பிடிப்பது சாதாரணமாக நடக்கக்கூடியதுதான். கடலில் எல்லைகளை கண்டுபிடிக்க முடியுமா என்ன? ஆனால் அவ்வாறு ஒருவர் எல்லை தாண்டுகின்றபோது, அவர்களுக்கு எல்லை தாண்டிவிட்டீர்கள் என்று சொல்லி அவர்களின் எல்லை வரை கொண்டுசென்று விடலாம். ஆனால் தமிழக மீனவர்களோ, பருத்தித்துறையின் கூப்பிடு தூரத்திற்கு அதாவது நமது கரைவரை வந்து மீன்பிடித்துக் கொண்டு, அதுகும் நாம் தடைசெய்துவைத்திருக்கின்ற இழுவை மடி பீன்பிடியில் ஈடுபட்டுக்கொண்டிருப்பது ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்லவே. குட்டக்குட்ட குனி பவன் மடையன் என்று ஒரு பழமொழியை அல்லவா நமது முன்னோர்கள் சொல்லித்தந்துவிட்டு போய்விட்டார்கள்.

---

**இரா. இராஜேஸ்கரன், ஸ்ரேசன் வீதி, வவுனியா.**

**கேள்வி:** இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர், செயலாளர் தெரிவுக்காக நடந்த வாக்கெடுப்புக்களின் மூலம், கட்சி சில கூறுகளாக பிளவுபட்டுள்ளமையை யாரும் மறுதலிக்க முடியாது என வடமாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்துள்ளாரே?

**வியுக்தியார்:** பச்சைக் நிறத்திலான ஒரு கடதாசியைக் காட்டி இது என்ன நிறம் என்று கேட்டால், பச்சை என்றுதானே சொல்ல முடியும். அதைவிட்டு அது சிவப்பு என்று சொல்லமுடியுமா? அதேபோலத்தானே கட்சி பிளவுபட்டு விட்டதா என்று கேட்டால் மனுசன் உண்மையைத்தானே சொல்ல முடியும்.

---

**அ. சிவகணேஸ்,**
**மறவன்புலவு, சாவகச்சேரி.**

**கேள்வி:** தான் இந்தியாவிற்கு சென்றிருந்தபோது, அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் இந்திய தரப்பில் எதுவும் பேசப்பாடமை தமக்கு வியப்பாக இருந்தது - என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளாரே. அப்போ இந்தியா அதனைக் கைவிட்டுவிட்டது என்று நாம் நினைக்கலாமா?

**வியுக்தியார்:** அவரை எதற்கு அழைத்தது என்பதை கடந்த வாரமும் சொல்லியிருந்தேனே. இலங்கையுடன் தாங்கள் செய்கின்ற வர்த்தக உடன்படிக்கையான எட்கா உடன்படிக்கைக்கு எதிராக வாய் திறக்காதீர்கள் என்று கேட்பதற்காகத்தான் இவர்கள் அழைக்கப்பட்டனர். அதுதவிர தங்கள் தரப்பில் செய்யப்படும் வர்த்தக நடவடிக்கைகளை கண்டிப்பதையும் இந்தியா விரும்பவில்லை என்பதும் அவருக்கு இப்போது தெரிந்திருக்கும். அதனால்தான் அவைபற்றி அவர் இப்போது வாய் திறப்பதில்லையே. 13வது திருத்தம் பற்றி இவரோடு கதைப்பதற்கு என்ன இருக்கின்றது என்று நினைத்தார்களோ என்னவோ?

# சர்ச்சையை கிளப்பிய புட்டினின் நேர்காணல்: உக்ரைன் போரில் ஊடக முரண்பாடு!



சமூக ஊடக சலசலப்புக்கு மத்தியில், மாஸ்கோவிற்கு டக்கர் கார்ல்சனின் (Tucker Carlson interview) வருகை இருந்தது. அமெரிக்காவின் பிரபல தொலைக்காட்சியான ஃபொக்ஸ் நியூசின் தொகுப்பாளரான டக்கர் கார்ல்சன், விளாடிமிர் புட்டினுடன் நடாத்திய பேட்டியும் மேற்குலக ஊடகங்களில் பெருங் காட்சியாக மாறியுள்ளதுடன் பாரிய சர்ச்சையையும் கிளப்பியுள்ளது.

மாஸ்கோவில் புட்டினின் போர்க் கதைக்கு டக்கர் கார்ல்சன் நம்பகத்தன்மையைக் கொடுக்கிறார் என்ற விமர்சனம் அமெரிக்க ஊடகங்களில் எழுந்துள்ளது. இருப்பினும், ரஷ்ய ஊடகங்கள் கார்ல்சனை ‘உண்மையைப் பேசும்’ பிரபலமாகக் கொண்டாடின என்பது மற்றோர் விடயமாகும்.

புகழ்பெற்ற போல்ஷோய் பாலே மற்றும் சிறந்த உணவு விடுதிகளுக்குச் சென்றதாகக் கூறப்படும் டக்கர் கார்ல்சனின் பயணத்திட்டம் மேற்குலக ஊடகங்களில் விமர்சனத்தையும், சர்ச்சையையும் கிளப்பியுள்ளது. ஆயினும் புட்டின் நேர்காணலை நிறுத்த அமெரிக்க அரசாங்கம் முயன்றதாக அவர் முதலில் குற்றம் சாட்டினார். இந்த நேர்காணலை நிறுத்த ஜோ பைடன் நிர்வாகம் உளவு பார்த்ததாக டக்கர் கார்ல்சன் குற்றச்சாட்டினை வெள்ளை மாளிகை முழுமையாக மறுக்கிறது.

மேற்கத்திய அரசாங்கங்கள் நேர்மாறாக இந்த நேர்காணல் வீடியோவை தணிக்கை செய்ய தங்களால் முடிந்த அனைத்தையும் செய்யும். அவர்களால் கட்டுப்படுத்த முடியாத வெளியுறவு தகவல்களுக்கு அவர்கள் பயப்படுகிறார்கள் என டக்கர் கார்ல்சன் கூறியுள்ளார்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினை நேர்காணல் செய்த செய்தி அமெரிக்காவின் புருவங்களை உயர்த்தியது என்றும், கிரெம்ளினுக்கான பிரச்சார கருவியாக அவர் செயல்படுவதாக பலர் குற்றம் சாட்டி விவாதங்களை ஊடகங்களில் தூண்டியுள்ளனர்.

**உக்ரைன் போர் பற்றிய உண்மை**

மாஸ்கோவில் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டினின் பேட்டி மூலம் உண்மையை அமெரிக்கர்களுக்குத் தெரிந்து கொள்ள உரிமை உண்டு என்று டக்கர் கார்ல்சன் தன் பக்க நியாயத்தை கூறுகிறார்.

முன்னாள் வொக்ஸ் நியூஸ் (FOX NEWS) தொகுப்பாளர் டக்கர் கார்ல்சன் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினுடன் அளித்த பேட்டி “பெரும்பாலான அமெரிக்கர்களுக்கு புட்டின் ஏன் உக்ரைனை ஆக்கிரமித்தார் அல்லது இப்போது அவரது இலக்குகள் என்ன என்று தெரியவில்லை” என்றும் கூறியுள்ளார்.


உக்ரைன் போர் பற்றிய “உண்மையை” வெளிப்படுத்த ஒரு வாய்ப்பாக இந்த பேட்டி அமைந்ததுடன், மேற்கத்திய ஊடகங்கள் பொய்களால் நிரப்பப்பட்ட ஒரு திரிபு படுத்தப்பட்ட பார்வையை முன்வைத்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

மேலும் புட்டினின் விளக்கத்தை கேட்க அமெரிக்கர்களுக்கு உரிமை உண்டு என்றும் வலியுறுத்தியுள்ளார்.

பெரும்பாலான அமெரிக்கர்களுக்கு புட்டின் ஏன் உக்ரைனை ஆக்கிரமித்தார் அல்லது இப்போது அவரது இலக்குகள் என்ன என்று தெரியவில்லை என்று கார்ல்சன் மாஸ்கோவில் பேட்டியில் கூறியுள்ளார்.



கார்ல்சன் அமெரிக்கா மீது விமர்சிக்கும் வார்த்தைகளைக் என்றுமே குறைக்கவில்லை. அமெரிக்காவின் ஊழல் குற்றச்சாட்டுகளை வெளிப்படுத்தியதற்காக, மேற்கத்திய ஊடகங்கள் அவரை விமர்சித்தது. அத்துடன் உக்ரைனின் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி, உண்மையற்ற போர் பிரச்சாரத்தில் பங்கேற்பதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.



அதேவேளை அமெரிக்காவில் ஜெலென்ஸ்கியின் நேர்காணல்களை அவர் விமர்சித்ததுடன், மோதலில் அமெரிக்க ஈடுபாட்டை விமர்சித்து வந்துள்ளார். உக்ரேனிய போர் தீவிரமாக நடந்துகொண்டிருக்கும் வேளையில் ரஷ்ய நிலைப்பாட்டுக்கு மற்றொரு ஆதரவை சேர்த்துள்ளார். கார்ல்சன் புட்டினுடனான தனது பிரத்தியேக நேர்காணலை ஒளிபரப்பிய நிலையில், உக்ரைன் போரின் பொதுக் கருத்துக்களை வடிவமைப்பதில் அவரது பங்கினை பலர் சிலாகித்துள்ளனர்.

**மேற்கத்திய ஊடகங்கள் பொய்யும் திரிபும்**

“நீங்கள் புட்டினின் குரலைக் கேட்டதில்லை. அது தவறு, அமெரிக்கர்களுக்கு அவர்கள் சம்பந்தப்பட்ட ஒரு போரைப் பற்றி எங்களால் முடிந்த அனைத்தையும் அறிய உரிமை உண்டு. அதைப் பற்றி அவர்களிடம் சொல்ல எங்களுக்கு உரிமை உள்ளது” என்றும் அவர் அழுத்தமாக வலியுறுத்தியுள்ளார்.

ஐங்கரன் விக்கினேஸ்வரா

இதற்கு முன்பாக ரஷ்ய அதிபரை நேர்காணல் செய்ய மாஸ்கோ சென்றதனை அமெரிக்க அரசும் மற்றய மேற்குலக ஊடகங்களும் பாரியளவில் கிண்டல் செய்தன. ஆனால் மேற்கத்திய ஊடகங்கள் பொய்களால் நிரப்பப்பட்ட ஒரு திரிபுபடுத்தப்பட்ட பார்வையை முன்வைத்ததாக அவர் கூறியுள்ளார். மேலும் புட்டின் நிலைப்பாட்டெ பார்த்து அறியவும் அமெரிக்கர்களுக்கு உரிமை உண்டு என்றும் கூறியுள்ளார்.

டக்கர் கார்ல்சன் மாஸ்கோ பேட்டியுடன் ஒரு புயலை கிளப்பியுள்ளார். இந்த நேர்காணலை தணிக்கை செய்யப்படாததாக வெளியிடும் தனது விருப்பத்தை எக்ஸ் தள உரிமையாளர் எலோன் மஸ்க்கின் ஆதரவை பெற்றுள்ளார். இந்த நேர்காணலை கார்ல்சன் தனது சொந்த வலைத்தளமான TuckerCarlson.comஇல் இலவசமாக பார்க்கவும் அனுமதித்துள்ளார்.

**சர்ச்சைக்குரிய டக்கர் கார்ல்சன் பின்னணி**

டொனால்ட் ட்ரம்பின் தவறான கூற்றுகளை வெளியிட்டதை தொடர்ந்து கார்ல்சனின் சர்ச்சைக்குரிய ஊடக வரலாறு கேள்விக்குறியானது.

ஃபொக்ஸ் நியூஸில் இருந்து அவர் வெளியேற்றப்பட்டார். இப்போது அவரது மாஸ்கோ முயற்சியானது மேலும் சிக்கலைச் சேர்த்துள்ளது.

அத்துடன் டொனால்ட் ட்ரம்பின் விவரணங்களை ஒளிபரப்பியதால் ஃபொக்ஸுக்கு எதிராக ஒரு பெரிய அவதூறு வழக்குக்கு வழிவகுத்ததுடன், கார்ல்சனின் நம்பகத்தன்மை பற்றிய கேள்விகளை எழுப்பியது. ஆனால் ஃபொக்ஸுடன் பிரிந்ததில் இருந்து, கார்ல்சன் எக்ஸ் இல் ஒரு தளத்தை உருவாக்கியுள்ளார். அங்கு அவரது நிகழ்ச்சிகள், பெரும்பாலும் ரஸ்ஸல் பிராண்ட் மற்றும் ஆண்ட்ரூ டேட் போன்ற நபர்கள் வரை பல நிகழ்வுகளை காணலாம்.

டக்கர் கார்ல்சன் ரஷ்ய ஜனாதிபதியை நேர்காணல் செய்வதனையும், மாஸ்கோவிற்கு வருவதனை நிறுத்தவும் அமெரிக்க அரசாங்கம் முயன்றது என்பது உண்மையே. டக்கர் கார்ல்சனின் சர்ச்சையை கிளப்பிய ரஷ்ய ஜனாதிபதியின் நேர்காணல் பல உண்மைகளை சர்வதேசத்திற்கு வெளிக்காட்டியுள்ளது.

உக்ரைன் போர் பற்றிய உண்மைகளையும், மேற்கத்திய ஊடகங்கள் பொய்மைகளையும் தெளிவுபடுத்து உள்ளது.

ஆயினும் இந்த நேர்காணலை மேற்குலக ஊடகங்கள் புட்டினின் பிரச்சாரம் என்றும், வழமையான அமெரிக்க ஊதுகுழல்களாக இந்த நேர்காணலை உண்மையற்றது என தங்கள் பாணிக்கு பறைசாற்றி வருகின்றன.



# 'நாட்டுக்கான ஒன்றுபட்ட நடவடிக்கை' முன்மொழிவு ஜனாதிபதியின் கைகளில்

கொழும்பு, பெப். 25

ஐக்கிய குடியரசு முன்னணியின் 'நாட்டிற்கான ஒன்றுபட்ட நடவடிக்கை' என்ற தலைப்பிலான முன்மொழிவு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று சனிக்கிழமை முற்பகல் கொழும்பில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் இடம்பெற்றது.

ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க உள்ளிட்ட குழுவினர், ஜனாதிபதியை சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டதுடன், குறித்த முன்மொழிவை ஜனாதிபதியிடம் கையளித்தனர்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, நாட்டின் வீழ்ச்சி அடைந்த பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த அரசாங்கம் கடந்த இரண்டு வருடங்களில் கடுமையாக உழைத்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

மறுசீரமைப்புத் தீர்மானங்கள் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை மிகச்சரியான பாதையில் கொண்டு செல்வதற்கு அரசாங்கம் செயற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அனைவரினதும் ஆதரவுடன் அதனை மேலும் நடைமுறைப்படுத்துவதே தமது நோக்கமாகும் எனவும் தெரிவித்தார். (அ)

# அதிக வெப்பநிலை காரணமாக தண்ணீர்ப் பாவனை அதிகரிப்பு

கொழும்பு, பெப். 25

தற்போதைய நாட்களில் அதிக வெப்பநிலை காரணமாக நீர் பாவனையும் அதிகரித்துள்ளதாக நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் தொடர்பாடல் முகாமையாளர் சரத் சந்திர முது பண்டா தெரிவித்தார்.

இதேவேளை, நாட்டின் பல பகுதிகளில் இன்று இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, மேல், தென், சப்ரகமுவ, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

(அ)

# ஐஸ் போதைப்பொருள் பாவனை: கான்ஸ்டபிள் உட்பட 7 பேர் கைது

கொழும்பு, பெப். 25

நுரைச்சோலை ஆலங்குடா பிரதேசத்தில் கைவிடப்பட்ட வீடொன்றில் ஐஸ் போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்டிருந்த இளம் பொலிஸ் கான்ஸ்டபிள் உட்பட ஏழு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக நுரைச்சோலை பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ் டபிள் புத்தளம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றுபவர் எனவும், இவரிடமிருந்து 1 கிராம் 200 மில்லி கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பிரதேசத்தில் கைவிடப்பட்ட வீடொன்றில் இளைஞர்கள் குழுவொன்று ஐஸ் போதைப்பொருளைப் பயன்படுத்துவதாக நுரைச்சோலை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட ஏழு பேரில் ஆறு பேர் ஆலங்குடா மற்றும் நுரைச்சோலை பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும், இவர்கள் ஏற்கனவே ஐஸ் போதைப்பொருளைப் பயன்படுத்தியுள்ளதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது. (அ)

# கடுமையாக கடன் நெருக்கடியில்...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

**மண்ணுயிர் காத்து, மன்னுயிர் காப்போம்**

இந்த வேளாண் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப் பட்ட பல திட்டங்கள் முக்கியமானவையாக இருந்தாலும் இன்னும் செய்ய வேண்டியது நிறைய இருக்கிறது என்கிறார்கள் வேளாண் பொருளாதார நிபுணர்களும் விவசாயிகளும்.

"விவசாயத்திற்கு தனியான நிதிநிலை அறிக்கை என்றவுடன் பலர் இதனை விவசாயத்திற்கு அளிக்கப்பட்ட மரியாதையைப் போல பார்க்கிறார்கள். அப்படியல்ல, விவசாயத்தில் பிரச்னைகள் என்பவை இடம் சார்ந்து இருக்கும். அதைத் தனித்தனியாக விவாதிக்க வேண்டும் என்பதற்காகத்தான் தனி நிதிநிலை அறிக்கை வேண்டும் என்று கோரப்பட்டது. அப்படி விவாதிக்கப்படுவது மகிழ்ச்சி அளிக்கிறது.

குறிப்பிடத்தக்க அறிவிப்புகள் என்று பார்த்தால், இந்த நிதிநிலை அறிக்கை மண்வளம், பயிர்களின் வளம், அதிக சத்துகள் கிடைப்பது என மூன்றையுமே பேசி யிருப்பது முக்கியமானது. இதற்காக "மண்ணுயிர் காத்து, மன்னுயிர் காப்போம்" என்ற திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அது வரவேற்கத்தக்கது.

அதேபோல, ரசாயனமற்ற விவசாயம் குறித்துப் பேசும்போது, அதற்கான இடு பொருள் தேவை என்பது மிக முக்கியமானது. அதை இந்த நிதிநிலை அறிக்கையில் பேசியிருக்கிறார்கள். ஆனால், இன்னும் செய்ய வேண்டியது நிறைய இருக்கிறது" என்கிறார், வேளாண் பொருளாதார நிபுணரான ஆர். கோபிநாத்.

**வேப்பங்கன்று வளர்க்க ரூ.2 கோடி எதற்கு?**

திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயியும் தமிழ்நாடு விவசாய சங்கங்களின் கூட்டியக்கத்தின் திருவாரூர் மாவட்டச் செயலாளருமான அழகர் ராஜ், கடந்த நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட திட்டங்களே முழுமையாக செயல்படுத்தப்படவில்லை என்கிறார்.

"கடந்த நிதிநிலை அறிக்கையில் பருத்தி உற்பத்தியை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்கள். திருவாரூர் மாவட்டத்தில்தான் அதிகம் பருத்தி விளைகிறது. பெரிதாக எந்த நடவடிக்கையும் இல்லை. இப்போது 10 லட்சம் வேப்பங்கன்றுகளை உருவாக்க 2 கோடி ரூபாய் செலவிடப் போவதாகச் சொல்லியிருக்கி றார்கள். வேப்பங்கன்றுகள் சாதாரணமாக வளரக் கூடியவை. அதற்காக 2 கோடி ரூபாய் நிதியைச் செல வழிப்பது தேவையற்றது" என்கிறார்.

அதேபோல, பல அறிவிப்புகளுக்கான நிதி ஒதுக்கீடு போதுமானதாக இல்லை என்கிறார் அவர்.

16,500 கோடி ரூபாய் விவசாயிகளின் கடன்களுக்காக ஒதுக்கியிருந்தாலும் அந்தக் கடன்கள் சிறிய விவசாயிகளுக்குக் கிடைப்பதில் சிக்கல் இருக்கிறது என்கிறார் அவர்.

# பயங்கரவாத தடைச்சட்டத்தை...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

நீதியமைச்சர் கலாநிதி விஜேதாச ராஜபக்ச கூறினார் என்பது கவனிக்கத்தக்கது. உயர்நீதிமன்றத்தின் கடந்த வாரத்தைய தீர்மானம் சட்டத்துறைச் சமூகம், சிவில் சமூக அமைப்புகள், உள்நாட்டு மற்றும் சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்கள் அந்த சட்டமூலம் குறித்து முன்வைத்த நியாயபூர்மான விமர்சனங்களை அரசாங்கம் கவனத்தில் எடுத்து உரிய மாற்றங்களைச் செய்யவில்லை என்பதை தெளிவாக வெளிக்காட்டுகிறது.

கடந்த 45 வருடகாலமாக நடைமுறையில் இருந்துவரும் பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு பதிலாக மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்யக் கூடியதாக சர்வதேச நியமங்களுக்கு இசைவான முறையில் பயங்கரவாதத்துக்கு எதிரான ஒரு சட்டத்தைக் கொண்டுவருமாறு சர்வதேச சமூகம் இலங்கை அரசாங்கங்களை வலியுறுத்தி வந்திருக்கிறது.

முதலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் 2016 ஏப்ரலில் முதல் புதிய பயங்கரவாத தடுப்புச் சட்டமூலம் ஒன்றைக் கொண்டுவரும் செயன்முறைகளில் இறங்கியது. விக்கிரமசிங்க நியமித்த குழுவொன்று மூன்று வருடங்களாக பொதுக் கலந்துரையாடல் எதுவுமின்றி சட்டமூலத்தை வரையும் நடவடிக்கைகளில் ஈடுபட்டது. அதில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கூட சம்பந்தப்படுத்தப்படவில்லை. எனினும் 2018 செப்டெம்பரில் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட சட்டமூலம் வர்த்தமானியிலும் வெளியிடப்பட்டது.

ஆனால், அதன் அரசியலமைப்புத் தகுதியைக் கேள்விக்குள்ளாக்கி தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை ஆராய்ந்த உயர்நீதிமன்றம் பல்வேறு பிரிவுகள் அரசியலமைப்புக்கு முரணாக இருப்பதால் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவுடனும் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றில் மக்களின் அங்கீகாரத்துடனுமே அதை சட்டமாக்க முடியும் என்று கூறியது.

இறுதியில் அந்த சட்டமூலத்தை 2020 ஜனவரியில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தலைமையிலான அரசாங்கம் வாபஸ் பெற்றுக்கொண்டது.

பிறகு ஜனாதிபதி விக்கிரமசிங்க தலைமையிலான தற்போதைய அரசாங்கம் 2022 ஆகஸ்டில் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை தயாரிக்கும் நடவடிக்கைகளில் இறங்கியது. நீதியமைச்சர் விஜேதாச, சொலிசிட்டர் ஜெனரல் நெரின் புள்ளே தலைமையில் நியமித்த நிபுணர்கள் குழு சட்டமூலத்தை வரைந்தது.

அந்த வரைவு 2023 ஜனவரியில் சட்டமா அதிபர் சஞ்சய் இராஜரத்தினத்தினால் அமைச்சர் விஜேதாசவிடம் கையளிக்கப்பட்டது.2023 மார்ச் 17 பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

இந்த சட்டமூலம் தொடர்பில் விரிவான கலந்துரையாடலுக்கு கால அவகாசம் தரவேண்டும் என்று சட்டத்துறைச் சமூகமும் சிவில் சமூகமும் கேட்டுக்கொண்ட போதிலும் அவற்றினால் முன்வைக்கப்பட்ட அவதானங்களை உள்ளடக்கியதாக கடந்த வருடம் செப்டெம்பரில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் அமைந்திருக்கவில்லை என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டியது.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்தையும் இணையவெளி பாதுகாப்பு சட்டமூலத்தையும் கடந்த செப்டெம்பரில் வர்த்தமானியில் வெளியிட்டிருந்தாலும் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை அரசாங்கம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை.

இணையவெளி பாதுகாப்பு சட்டமூலத்தை நிறைவேற்றிய கையோடு பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தையும் நிறைவேற்றுவதில் அரசாங்கம் கவனம் செலுத்திக் கொண்டிருந்த நிலையில் கடந்த வாரம் உயர்நீதிமன்றத்தின் தீர்மானம் வந்திருக்கிறது

உயர்நீதிமன்றத்தின் தீர்மானத்தின் பிரகாரம் செயற்பட்டு அரசியலமைப்பு ஏற்பாடுகளுக்கு இசைவான முறையில் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை சாதாரண பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றுவதில் அரசாங்கம் அக்கறை காட்டுமா? பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் இல்லாத நிலையில் இந்த சட்டமூலத்தை அரசாங்கம் கைவிடுமா? பதில் வேண்டி நிற்கும் முக்கிய கேள்விகள் இவை.

பயங்கரவாத தடைச்சட்டத்தை பதிலீடு செய்வதற்கான ஒரு புதிய சட்டத்தை என்றென்றைக்குமே கொண்டு வரமுடியாமல் போகுமா என்பது இன்னொரு முக்கியமான கேள்வி.

பயங்கரவாத தடைச்சட்டத்தை மாற்றக்கூடாது என்ற உள்நோக்கத்தில் தான் அரசாங்கம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றமுடியாத அளவுக்கு அதை விடவும் கொடூரமான ஏற்பாடுகளுடன் கூடிய சட்டமூலத்தைக் கொண்டுவருகிறது என்ற சந்தேகமும் எழுகிறது.

## சாந்தனை....

அமைச்சின் வெளிநாட்டவர்களுக்கான பிராந்திய பதிவு அதிகாரி வெளியிட்டுள்ளார்.

இதன்படி, தற்போது திருச்சியில் உள்ள சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சாந்தன், திருச்சியில் உள்ள விமான நிலையத்தின் ஊடாக நாடு கடத்தப்படுவார் என தெரிவிக்கப்படுகிறது.

சாந்தனின் கோரிக்கைக்கு அமைய, தமிழகத்தில் உள்ள இலங்கை துணை தூதரகம் அண்மையில் அவருக்கான பயண ஆவணத்தை வழங்கியிருந்தது.

இந்த நிலையில் மத்திய வெளிவிவகார அமைச்சின் வெளிநாட்டவர்களுக்கான பிராந்திய பதிவு அதிகாரியும் சாந்தனுக்கான தற்காலிக பயண ஆவணத்தை வெளியிட்டுள்ளார்.

அதேநேரம் அவருக்கான பயணச்சீட்டு உறுதிப்படுத்தப்பட்டவுடன் அவர் நாடு கடத்தப்படுவார் என மாவட்ட ஆட்சியர் பிரதீப்குமார் தெரிவித்துள்ளதாக தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (அ)

## முல்லைத்தீவில்....

கூறப்படுகிறது.

இதன்போது தாக்குதலில் 27 வயதுடைய விஜயராசா சோபிதன் என்ற இளைஞனே உயிரிழந்தார் என பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## ராஜபக்ஷக்களின்....

இந்நிலையில் பொன்சேகாவுக்காக மஹிந்தவின் சலூன் கதவு திறந்தே உள்ளது என மொட்டு கட்சி தரப்பில் தெரிவிக்கப்படும் கருத்துகள் தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே பொன்சேகா இவ்வாறு கூறினார்.

" ராஜபக்ஷக்களுக்கு வெட்கம் இருக்குமானால் அவர்களும் என்னுடன் அரசியல் செய்யமாட்டார்கள். மொட்டு கட்சியில் சில நல்லவர்களும் உள்ளனர். எனினும், மொட்டு கட்சி ராஜபக்ஷக்களின் கட்டுப்பாட்டின்கீழ் இருக்கும்வரை எதுவும் சாத்தியப்படமாட்டாது.

ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னரே வேட்பாளர் பெயரிடப்பட வேண்டும். ஒரு வருடத்துக்கு வேட்பாளரை அறிவித்து, வெற்றி தமக்கே எனக் கூறுவது ஏற்புடைய நடவடிக்கை அல்ல." - எனவும் பொன்சேகா குறிப்பிட்டார். (அ)

## தேர்தலை....

கடுமையாக உழைத்துள்ளது" - என்றும் இதன்போது ஜனாதிபதி குறிப்பிட்டார்.

மறுசீரமைப்புத் தீர்மானங்கள் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை மிகச்சரியான பாதையில் கொண்டு செல்வதற்கு அரசு செயற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அனைவரினதும் ஆதரவுடன் அதனை மேலும் நடைமுறைப்படுத்துவதே தமது நோக்கமாகும் என்றும் தெரிவித்தார்.

அரசியல் பேதமின்றி நாட்டுக்கான பொதுவான வேலைத்திட்டத்தில் இணையுமாறு அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் விடுத்துள்ள திறந்த அழைப்பையும் நினைவுகூர்ந்த ஜனாதிபதி, நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தில் ஏனைய அரசியல் கட்சிகளின் அனைத்து சாதகமான முன்மொழிவுகளையும் உள்ளடக்குவதற்கு தயங்கமாட்டேன் என்றும் தெரிவித்தார்.

வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு தொடர்பான சர்வதேச நாணய நிதியத்துடன் அடுத்த மாதம் நடைபெறவுள்ள பேச்சில் ஏனைய அரசியல் கட்சிகளும் பங்கேற்க சந்தர்ப்பம் வழங்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க விடுத்த கோரிக்கைக்கு ஜனாதிபதி நல்ல பதிலை வழங்கினார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## சட்டத்துக்கு....

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா தெரிவித்தார்.

கச்சதீவு புனித அந்தோனியார் திருத்தலத்தின் வருடாந்த திருவிழா வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நேற்று சனிக்கிழமை நிறைவடைந்தது. திருவிழாவில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் கடற்படைத் தளபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையில் தேசிய நல்லிணக்கத்துக்கு கச்சதீவு புனித அந்தோனியார் திருவிழா சிறந்த எடுத்துக்காட்டாக காணப்படுகிறது. இனம், மதம், மொழி என்ற அடிப்படையில் எவ்வித வேறுபாடுகளுமில்லாமல் இலங்கையர் என்ற அடிப்படையில் நாட்டு மக்கள் அனைவரும் இந்த திருவிழாவில் கலந்து கொண்டதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

கச்சதீவு புனித அந்தோனியார் திருத்தலத்தின் வரலாற்று சிறப்பு மிக்க வருடாந்த திருவிழாவை சிறப்பான முறையில் நடத்துவதற்கு வழங்கிய சகல தரப்பினருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்திய மற்றும் இலங்கையின் உறவின் பாலமாக இந்த திருவிழா அடையாளப்படுத்தப்படுகிறது.

இந்திய மீனவர்கள் கைது செய்யப்படுவதால் கச்சதீவு திருவிழாவை புறக்கணிப்பதாக இந்திய மீனவர்கள் குறிப்பிடும் நியாயப்படுத்தலை ஏற்றுக்கொள்ள முடியாது. இலங்கையின் சட்டத்துக்கு அமையவே கைதுகள் இடம்பெறுகின்றன. சட்டத்தை மீறும் போது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியது எமது பொறுப்பாகும்.

இலங்கை - இந்திய மீனவர் பிரச்னை பல ஆண்டுகாலமாக தொடர்கிறது. இதற்கு பேச்சுவார்த்தைகள் ஊடாக தீர்வு காண வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளோம். அடுத்த திருவிழாவுக்கு முன்னர் முரண்பாடற்ற தீர்வு ஒன்று காணப்பட வேண்டும். இந்திய மீனவர்கள் வழமை போல் திருவிழாவில் கலந்துகொள்ள வேண்டும்-என்றார்.

## இந்திய....

பிரதிநிதி பாக்கியநாதன் றேகன் இவ்வாறு அழைப்பு விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்திய இழுவைப் படகுகள் எமது கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து தொழில் முதல்களை அழித்து வந்த வேளை, எமது கடற்படையினரால் அந்த இந்திய இழுவைப் படகுகள் கைப்பற்றப்பட்டு அதில் பயணித்த மீனவர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள். இப்போது இந்திய அரசாங்கம், அந்த மீனவர்களை விடுதலை செய்யுமாறு எமது அரசாங்கத்துக்கு அழுத்தங்களை கொடுத்துக் கொண்டிருக்கின்றது.

எங்களுடைய வளங்களை அழித்தவர்களை எப்படி விடுதலை செய்ய முடியும்? அவர்களுக்குரிய தக்க தண்டனை கொடுத்த பின்னரே விடுதலை செய்யலாம். ஏனென்றால் எங்களது வளங்கள் எத்தனையோ காலமாக அழிக்கப்பட்டுள்ளன.

எங்கள் வளங்களைச் சூறையாடி தங்களது பிழைப்புகளை நடத்தியவர்கள், தங்களது மீனவர்களை எமது அரசாங்கம் பிடித்து வைத்துள்ளபோது அவர்களை விடுதலை செய்யுமாறு கேட்கின்றார்கள்.

அடுத்த வாரத்தில் எமது கடல் தொழிலாளர்கள் இணைந்து கறுப்புக் போராட்டம் ஒன்றினை இலங்கை - இந்திய கடல் எல்லையில் நடத்த உள்ளோம்.

எங்களது அரசாங்கம் இந்திய அரசாங்கத்தின் அழுத்தங்களுக்கு அடிபணிய கூடாது. கைது செய்த மீனவர்களுக்கு தக்க தண்டனையை கொடுக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் அவர்களிடம் மண்டியிடக் கூடாது என்பதை நாங்கள் ஆணித்தரமாக தெரிவித்துக் கொள்கின்றோம்-என்றார். (அ)

# வவுனியாவில் 'மேழி 70' விழா

வவுனியா,பெப்.25

கலாநிதி மேழிக்குமரன் அவர்களின் எழுபது அகவையையும் ஐம்பதாண்டு இலக்கிய பயணத்தையும் முன்னிட்டு இரு நூல்கள் வெளியீட்டு நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு வவுனியா நகரசபை கலாச்சார மண்டபத்தில் நடைபெற உள்ளது.

வவுனியாத் தமிழ்ச் சங்கத்தின் நிறுவுநர்,தமிழருவி த.சிவகுமாரனின் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் த.மங்களேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன்,கல்வி அமைச்சின் ஓய்வுநிலை மேலதிக செயலாளர் திரு. உடுவை எஸ்.தில்லைநடராஜா மற்றும் கௌரவ விருந்தினர்களாக வவுனியா தேசிய கல்வியற் கல்லூரியின் ஓய்வு நிலை பீடாதிபதி திரு.க.பேர்னாட், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் ந.சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர்.இவ்விழாவில் எழுத்தாளர் மேழிக்குமரனின் கொள்ளிக்காசு சிறுகதைத் தொகுப்பு நூலும் 'அல்சைமர்' மருத்துவ நூலும் வெளியீடு செய்யப்படவிருக்கின்றன.

## தேர்தல்களில்....

போது இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த ஜனவரி மாதம் ஜாஎலவில் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தை விட பன்மடங்கு மக்கள் தொகையுடன் இன்று கொழும்பில் எமது முதலாவது கூட்டத்தை ஆரம்பித்துள்ளோம். இன்று இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் உட்பட மட்டக்களப்பின் முக்கிய அரசியல் பிரமுகர்கள் என்னுடன் இணைந்துள்ளனர்.

தற்போது சில அரசியல் கட்சிகள் தமக்கு போட்டியாக அரசியலில் வேறு எந்த பலமும் இல்லை என்று எண்ணிக் கொண்டிருக்கின்றன. அது அந்த எண்ணம் தவறானதாகும். அவ்வாறு எண்ணும் கட்சிகளுக்கு சவாலாக எமது புதிய கூட்டணியை நாம் உருவாக்கியிருக்கின்றோம்.

எமது கூட்டணி இளம் தலைமுறையினரின் நிலைப்பாடுகளுக்கும் கொள்கைகளுக்கும் இடைமளிக்கும் கூட்டணியாக அமைந்துள்ளது. வெற்றிக்கான கூட்டணியை அமைப்பதற்கு பல ஆண்டுகள் தேவையில்லை. ஆறு மாத காலத்துக்குள் வெற்றியை நோக்கிய பயணத்தை இலக்காகக் கொண்டு எமது கூட்டணி கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நாட்டில் எவ்வாறான நிலைமை காணப்பட்டது என்பதை சகலரும் அறிவார்கள். அன்று இளைஞர்களால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தை சில அரசியல் சக்திகள் தமது சந்தர்ப்பவாத அரசியலுக்காக பயன்படுத்திக்கொள்ள முயற்சித்தன.

அதன் அடிப்படையிலேயே ஜனாதிபதி அலுவலகம் அலுவலகமும் பிரதமர் அலுவலகமும் கைப்பற்றப்பட்டன.

அதனைத் தொடர்ந்து, பாராளுமன்றத்தை முற்றுகை இடுவதற்கான முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டன. எனினும், அந்த முயற்சி தடுக்கப்பட்டது. அதன் காரணமாகவே இலங்கையில் ஜனநாயகம் பாதுகாக்கப்பட்டது. இல்லை என்றால் இன்று ஜனநாயகம் கேள்விக்குறிக்குள்ளாகியிருக்கும்.

2009ஆம் ஆண்டு பிரபாகரனின் யுத்தம் நிறைவடைந்தது. ஆனால், அதன் பின்னர் பொருளாதார யுத்தம் ஆரம்பித்தது. அந்த யுத்தம் இன்றும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. எனவே எமது புதிய கூட்டணியின் இலக்கு பொருளாதார யுத்தத்தை நிறைவுக்கு கொண்டு வந்து நாட்டை அபிவிருத்தியடைச் செய்வதாகும்.

2022ஆம் ஆண்டு மே மாதம் நான் எனது அமைச்சை பொறுப்பேற்கும் போது பாடசாலைப் புத்தகங்களையோ சீருடைகளையோ வழங்க முடியாத நிலைமை காணப்பட்டது. ஆனால், இன்று முதலாம் தவணை ஆரம்பித்த உடனே எம்மால் பாட புத்தகங்களை விநியோகிக்க முடிந்துள்ளதோடு சீருடைகளையும் வழங்க முடிந்துள்ளது.

தற்போது தொழில் இன்றி உள்ள புதிய பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனங்களை வழங்க தயாராக உள்ளோம். கடந்த 75 ஆண்டுகளாக ஏமாந்தது போதும் என்ற நிலைப்பாட்டில் மக்கள் உள்ளனர். எனவே மக்கள் மாற்றத்தையும் புதுமையும் எதிர்பார்க்கின்றனர். மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையில் எமது புதிய கூட்டணி செயல்படும்.

அதற்கமைய எமது அடுத்த கூட்டம் இதனை விட பன்மடங்கு மக்கள் தொகையுடன் முன்னெடுக்கப்படும். அதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக பாராளுமன்ற உறுப்பினர்கள் 50 பேர் எம்முடன் இணைய தயாராகவுள்ளனர். தற்போது ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் பேசப்படுகின்றது. அரசியலமைப்புக்கு அமைய ஒக்டோபர் 17ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படவேண்டும். அடுத்த வருடம் ஒகஸ்ட் மாதத்துக்கு முன்னர் பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

அந்த இரு தேர்தல்களும் குறிப்பிட்ட தினத்தில் இடம்பெறும். குறித்த உத்தேச தேர்தல்களில் எமது புதிய கூட்டணி பாரிய வெற்றி பெறும் என்று நம்புகின்றோம். அந்த வெற்றிப் பயணத்துக்கான நடவடிக்கைகளையே நாம் இன்று ஆரம்பித்துள்ளோம். கற்பனை கதைகளால் மாத்திரம் எதையும் செய்துவிட முடியாது. எனவே, வார்த்தைகளால் மாத்திரமின்றி செயற்பாடுகளாலும் நாம் எமது வெற்றியை நிரூபித்து காட்டுவோம்-என்றார். (அ)

## மீனவர்....

அதற்காக இந்தியாவின் பதிலை எதிர்பார்த்துள்ளதாகவும் அதன் பின்னர் மீனவர் பிரச்னையை தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் வெளிவிவகார அமைச்சர் கூறினார்.

கடற்றொழில் அமைச்சு இந்த பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் எனவும் தேவை ஏற்பட்டால் வெளிவிவகார அமைச்சும் அதில் பங்கேற்கும் எனவும் வெளிவிகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார்.

## கச்சதீவு....

அந்தோனியார் ஆலய திருவிழா நேற்று இடம்பெற்றது. நேற்றுமுன்தினம் மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமான திருவிழாவில் சிலுவைப் பாதை, நற்கருணை ஆராதனை மற்றும் திருச்சொரூப பவனி ஆகியன இடம் பெற்றன.

வருடாந்த திருவிழா திருப்பலி நிகழ்வு நேற்று காலை 7 மணிக்கு யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் அருட்பணி. ஜே. ஜெபரட்ணம் அடிகளார் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இந்த திருவிழாவுக்கு இலங்கையில் இருந்து 4454 பக்தர்கள் கலந்து கொண்டனர். இந்திய பக்தர்கள் மீனவர்களின் விடுதலையை வலியுறுத்தி வருகை தரவில்லை என தெரிவிக்கப்பட்டது.

திருவிழாவில் பக்தர்களின் நலன் கருதி சுகாதார வசதிகள் போக்குவரத்து ஒழுங்குகள், உணவு வசதிகள் என்பன ஏற்பாடு செய்யப்பட்டன.

குறித்த திருவிழாவில் கடற்படை உயர் அதிகாரிகள், ஜனாதிபதியின் செயலாளர், யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

ஈழநாடு
Eelanadu

# இந்தியாவின் பாதுகாப்புக்கு உறுதியளித்தது இலங்கை!

## டில்லியில் கூறினார் தாரக பாலசூரிய

புதுடில்லி, பெப். 25

**இந்தியாவின் பாதுகாப்பு கரிசனைகளுக்குப் பங்கம் விளைவிக்கும் வகையில் இலங்கையை வேறொரு நாடும் பயன்படுத்துவதற்கு விடமாட்டோம் என வெளியுறவுத்துறை இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய இந்தியாவுக்கு உறுதியளித்துள்ளார்.**

புதுடில்லியில் நடைபெற்ற உரையாடலில் கலந்துகொண்ட பிறகு செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றிய போதே நேற்று முன்தினம் அவர் இந்த உறுதிமொழியை வழங்கினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்

பாதுகாப்பு விடயங்கள் குறித்து இந்தியா கவலைப்படக் கூடாது. சர்வதேச நீரோட்டத்தில் இந்தியாவின் வளர்ந்து வரும் அந்தஸ்தை நாங்கள் அறிவோம்.

இந்தியாவின் பாதுகாப்பு விடயத்தில் எந்த மூன்றாம் தரப்பினரும் அல்லது நாடும் இலங்கையை பயன்படுத்துவதற்கு அனுமதிக்கமாட்டோம்.

எனவே நேர்மையான கருத்துப் பரிமாற்றத்தின் மூலம், எந்த பிரச்னையையும் சமாளிக்க முடியும். நாங்கள் எந்த நாட்டுடனும் வர்த்தகம் செய்யத் தயாராக இருக்கிறோம்.

ஆனால் இந்தியாவைப் பொறுத்தவரை எங்களுக்கு ஒரு சிறந்த உறவு உள்ளது. சீனாவுடனான எங்கள் உறவைப் பற்றி இந்தியா கவலைப்படக்கூடாது என்று நான் நினைக்கிறேன்.

சீனாவுடன் மட்டுமல்ல, மேற்கத்திய நாடுகளான அமெரிக்கா, ரஷ்யா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுடன் எங்களுக்கு நல்ல உறவு உள்ளது - என்றார். (அ)

# ரூபாவின் பெறுமதி வலுவடைந்தமையின் பலன் மார்ச் மாதத்தில் மக்களுக்கு கிட்டும்

## நளின் பெர்னாண்டோ நம்பிக்கை

கொழும்பு, பெப். 25

ரூபாவின் பெறுமதி வலுவடைந்தமையின் பிரதிபலனை அடுத்த மாதம் முதல் நுகர்வோருக்கு பெற்றுக் கொடுக்கவுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி கடந்த சில மாதங்களாக படிப்படியாக வலுவடைந்து வருவதாக அமைச்சர் நளின் பெர்னாண்டோ குறிப்பிட்டார்.

இதற்கமைய, இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசிய பொருட்களின் விலைகளும் குறைக்கப்பட வேண்டியது அவசியம் என அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கை ரூபாவின் பெறுமதி



வலுவடைந்தமையின் பலன், மார்ச் முதல் வாரத்தில் இருந்து பொது மக்களுக்கு கிடைக்கும் என தான் நம்புவதாக அவர் குறிப்பிட்டார்.

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் தட்டுப்பாடின்றி அத்தியாவசிய பொருட்களை விநியோகிப்பதற்காக விசேட வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் இந்த விடயம் தொடர்பில் இறக்குமதியாளர்களுடன் தொடர்ச்சியாகக் கலந்துரையாடியுள்ளதாகவும் வர்த்தக அமைச்சர் நளின் பெர்ணான்டோ தெரிவித்தார்.

கடந்த டிசெம்பர் 29 ஆம் திகதி அமெரிக்க டொலரொன்றின் விற்பனை விலை 328 ரூபா 77 சதமாக பதிவாகியிருந்தது.

தற்போது அமெரிக்க டொலரின் விற்பனை விலை 316 ரூபா 06 சதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. (அ)

# சஜித் ஒரு முட்டாள்!

கொழும்பு, பெப். 25

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச மிகவும் முட்டாள்தனமான மனிதர் எனவும் அவருடன் பழகியபோது அதனை புரிந்து கொள்ள முடிந்ததாகவும் சமூக ஆர்வலரும் ஆசிரியருமான உபுல் சாந்த சன்னஸ்கல தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சஜித் பிரேமதாச என்பவர் மேடைகளில் கூறுவதை போல் இரவில் வேலை செய்யும் நபர் அல்ல. நீச்சல் தடாகத்தில் குளிக்கும் போதும் கூட சுற்றியும் பாதுகாப்பு பரிவாரங்களை வைத்துக் கொண்டே குளிப்பார்.

மேடைகளில் கூறுவதை போல் நடைமுறை வாழ்க்கையில் நடந்து கொள்வதில்லை.

அதேபோல் அனுரகுமார திஸாநாயக்க மக்கள் அறிந் துள்ள ஊழல் மோசடிகள் பற்றி மீண்டும் உரத்த குரலில் கூறுவதை மட்டுமே செய்து வருகிறார்.

இதனை விடுத்து பொருளாதாரமோ அல்லது நாட்டை கட்டியெழுப்பும் எவ்வித புதிய கொள்கைத் திட்டங்களோ அவரிடம் இல்லை.

இவர்களுடன் ஒப்பிடும் போது, சர்வதேசத்துடன் ஏதோ ஒரு உடன்பாட்டை ஏற்படுத்திக்கொண்டு, வேலை செய்யக்கூடிய ரணில், ஜனாதிபதி பதவிக்கு பொருத்தமானவர் - என்றார். (அ)

# நாட்டு மக்கள் விரும்பும் ஒரே தலைவர் ரணிலே!

## அமைச்சர் ஹரின் புகழாரம்

கொழும்பு, பெப். 25

இலங்கையில் உள்ள சகல மக்களும் விரும்புகின்ற ஒரே தலைவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திகழ்கின்றார் என அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணிலின் வெற்றி, இலங்கை அரசியல் வரலாற்றில் பெரும் சாதனையாகப் பதியப்படும்.

எனவே, ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியேறி ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்திருக்கும் உறுப்பினர்கள் அனைவரும் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைய வேண்டும்.

மீண்டும் ரணிலுடன் இணைவதற்குத் தற்போது கிடைத்துள்ள நல்லதொரு சந்தர்ப்பத்தை சஜித் அணியினர் பயன்படுத்த வேண்டும்.



நாட்டின் பொருளாதாரம் சீரான நிலைக்கு வரவேண்டுமெனில் ரணிலின் ஆட்சி நிலைத்திருக்க வேண்டும் - என்றார். (அ)

# வடக்கு இளைஞர்கள் இருவர் விமான நிலையத்தில் கைது!

கொழும்பு, பெப். 25

ஐரோப்பாவுக்கு தப்பிச்செல்ல முயன்ற இருவரை கட்டுநாயக்க விமான நிலைய குடிவரவு அதிகாரிகள் கைது செய்துள்ளனர். இவர்கள் இருவரும் கிரேக்க சுற்றுலா விஸாக்களை பயன்படுத்திச் செல்ல முயன்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த சம்பவத்தில் வவுனியாவைச் சேர்ந்த 34 வயதுடைய ஒருவரும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 26 வயதுடைய ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்களை விமான நிலையத்தின் வருகை முனையத்தில் வைத்து குடிவரவு அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

குறித்த சந்தேகநபர்கள் நேற்று அதிகாலை கட்டாரின் டோஹாவுக்கு சென்று டோஹாவிலிருந்து, பாரிஸுக்குச் சென்று இறுதியில் ஜேர்மனியின் மியூனிக் நகரை அடைவதற்கு திட்டமிட்டிருந்ததாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

எவ்வாறாயினும், ஆவண பரிசோதனை நடவடிக்கைகளின்போது குறித்த சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

# கீரி சம்பா உற்பத்தியை விரிவுப்படுத்தவேண்டும்

கொழும்பு, பெப். 25

பொதுமக்களுக்கு தேவையான அளவு கீரி சம்பா அரிசியை வழங்க வேண்டுமாயின் அதன் உற்பத்தியை மேலும் விரிவுபடுத்தவேண்டும் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

அம்பாந்தோட்டையில் நேற்று பயிர்ச்செய்கை நிலங்களுக்கு கள விஜயம் மேற்கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். (அ)

**கொள்கலனில் மறைந்து வெளிநாடு செல்லமுயன்ற**

# இரு தமிழர்களும் நாடு கடத்தப்பட்டனர்!

கொழும்பு, பெப். 25

கொள்கலன் ஒன்றில் மறைந்திருந்து மலேசியாவிற்கு தப்பிச் செல்ல முயன்றபோது சீனாவில் கைது செய்யப்பட்ட இரண்டு இலங்கையர்களும் ஒரு வருடத்தின் பின்னர் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த இரண்டு சந்தேக நபர்களும் கொழும்பு துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கப்பலில் ஏற்றப்பட்ட வெற்றுக் கொள்கலனில் மறைந்திருந்து மலேசியாவிற்கு தப்பிச் செல்ல முயற்சித்துள்ளனர்.

26 வயதான மதி ராஜேந்திரன் மற்றும் 39 வயதான ஜெயக்குமார் தருமராசா ஆகிய இருவருமே கொள்கலனில் மறைந்திருந்து தப்பிச் செல்ல முயன்றவர்கள்.

கடந்த ஜனவரி 30, 2023 அன்று, மலேசியா செல்வதற்காக கொழும்பு துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 'மெர்க்ஸ் யூனிகார்ன்' கப்பலில் ஏற்றப்பட்ட வெற்று கொள்கலனுக்குள் குறித்த இருவரும் இரகசியமாக நுழைந்துள்ளனர்.

ஆனால் குறித்த கப்பல் மலேசியாவிற்கு வந்தபோது, கொள்கலனில் மறைந்திருந்த இரு சந்தேக நபர்களையும் ஏற்றுக்கொள்ள மறுத்ததால், கப்பலின் கடல்சார் அதிகாரிகள் சந்தேக நபர்களை ஏற்றிக்கொண்டு பல நாடுகளுக்குச் சென்று இறுதியாக சீனாவுக்கு வந்துள்ளனர்.

அங்கு சீன அதிகாரிகள் இருவரையும் கைது செய்தனர்.

சந்தேகநபர்கள் இருவரையும் நாடு கடத்த நடவடிக்கை எடுத்ததன் பின்னர், நேற்று காலை 05.01', சீனாவின் ஷாங்காய் நகரிலிருந்து சிறிலங்கன் எயார் லைன்ஸ் விமானமான யு.எல்-867 மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த பின்னர், கட்டுநாயக்க விமான நிலைய குற்றப் புலனாய்வு திணைக்களம், ஆட்கடத்தல் மற்றும் ஆட்கடத்தல் புலனாய்வு பிரிவின் அதிகாரிகள் குழுவொன்று அவர்களை கைது செய்து கொழும்பு கிருலப்பனையில் உள்ள பிரதான அலுவலகத்திற்கு அழைத்து வந்தனர்.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 25.02.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# ஜதார்த்தம்

எஸ். ஜெகதீசன்

மண்டப வாசல் ஆராவாரமின்றி அமைதியாக காணப்பட்டது.

நூலாசிரியர் மட்டும் அங்குமிங்குமாக உலவினார். முகத்தில் ஒரு பதட்டம் தெரிந்தது.

வெளியீட்டு விழா ஆரம்பமாகும் என தெரிவிக்கப்பட்டிருந்த நேரத்திற்கும் அரை மணி நேரம் முன்பதாகவே சென்றிருந்த என்னை கரம் கூப்பி வரவேற்றார்.

மேலும் ஒன்று தேறியது என்று மனதுக்குள் நினைத்திருக்கக்கூடும்.

பல்கலை கழக மாணவர்களுக்கு இது ஒரு பாட நூல் போலாகும். இதனை பாடமாகக் கருதும் ஏனையோருக்கோ இதுவே ஒரு பல்கலைக் கழகம் போலாகும் என்றேன்.

சிரித்தவாறே எப்படி என்றவர்... பின்னர் சுதாகரித்துக் கொண்டு எப்படித் தெரியும் என்றார்.

ஏற்கனவே பத்திரிகையில் தொடராக வந்த போதே தொடர்ந்து வாசித்திருந்ததால் தெரியும் என்றேன்.

விழா மண்டபத்துள் நாலைந்து பேர் எட்ட எட்ட இருந்தார்கள். அருகிலிருந்த சிற்றுண்டி அறையில் பத்துப்பதினைந்து பேர் சிற்றுண்டிகளுடன் மிக நெருக்கமாக இருந்தார்கள்.

வெளியிடப்படவுள்ள புத்தகம் மேசை ஒன்றில் வரிசையாக அடுக்கப்பட்டிருந்தது. அதற்கு காவலிருந்த பையனை அலைபேசி நோண்டிக்கொண்டிருது.

அம்மாடி! எவ்வளவு பென்னம் பெரிய புத்தகம் என்று கூறியவாறே கதிரையில் அமர்ந்தவரது கண்கள் அந்தப் புத்தகத்தை விடவும் பெரிதாக விரிந்தன.

ஆயிரம் பக்கங்களுக்கு மேலானது என்றால் பாருங்களேன் என்ற ஏற்கனவே அங்கிருந்த அடுத்தவர் அதற்கு மேல் ஒரு வார்த்தையும் வெளிவராமல் அதிர்ச்சியில் உறைந்தார்

ஆராலை தூக்க முடியும்? அதுவும் வயது போனவர்களால் கிஞ்சித்தும் இயலாது என்றார் வாலிபத்தில் பளு தூக்கும் பயில்வான் எனப் பெயர் பெற்ற இன்னுமொருவர்.

வருடத்துக்கு ஐம்பது புத்தக வெளியீடுகள் என்றால் எங்கு செல்வது என்ற கேள்வியிலும் பார்க்க அவற்றை வாங்கி என்ன செய்வது என்ற கேள்வியிலும் பார்க்க அவற்றை வீட்டில் எங்கு வைப்பது என்ற கேள்வியே இப்பொழுதெல்லாம் மனதில் மேலோங்குகின்றது எனக் கவலைப்பட்டார் ஒருவர்.


எங்களுக்கும் வாழ்க்கைச் செலவு இருக்கு எங்களுக்கும் வசதியீனம் இருக்கு எண்டதை உவர்கள் உணர்வதில்லையா? ஆர்வமுள்ள வாசகர்கள் கோடீஸ்வரர்களாகவே இருப்பார்கள் என கருதுவது எந்த வகையில் ஞாயம்? என்றவரின் கோபம் வெறும் காழ்ப்புணர்ச்சியிலிருந்து வரவில்லை.

உங்களுக்கு புத்தகத்தால் ஒரு எழுத்துக் கூட பிரயோசனம் இராது. ஆனாலுமென்ன? உங்களின் ஜென்டில்மன் ஷிப்பை – அது தாங்க கண்ணியத்தை – காட்டவென நீங்கள் புத்தகத்தை உங்களுக்கு கட்டுப்படியாகாத விலை எனத் தெரிந்தும் வாங்குவீர்கள். பிறகு ஏன் குய்யோ முறையோ எனக் குத்தி முறிவீர்கள் என்றார் ஜதார்த்தவாதி எனப் மக்கள் மத்தியில் பெயரெடுத்த ஒருவர்.

மெத்த மெத்தச்சரி! இன்றைய நூலாசிரியரை பின்னர் ஒரு சமயம் காண நேரிடின் ஏற்கனவே நீங்கள் வெளியீடு செய்திருந்த உங்களின் புத்தக மொன்றை அன்பின் அடையாளமாக அவருக்குக் கொடுத்துப் பாருங்கள். வாங்கவே மாட்டார். கைமாறு செய்ய வேண்டிய கடமையாவது மண்ணாவது.உங்களுககு காசு தருவதற்கு அவர் என்ன முட்டாளா? ஏதாவது சாக்குப்போக்குச் சொல்லி தனது ஜென்டில்மன் ஷிப்பை அவர் காட்டுவார் என்றவருக்கு வெகு ஜன விரோதி என்ற பட்டம் மக்களிடம் உண்டு.

ஆனால் வாங்கிய பின் ஏண்டா இதை வாங்கினோம் என மனதுக்குள் புழுங்காதவர்கள் எவருமிருப்பின் அவர்களைப் பற்றி ஒரு வரியாவது புத்தகத்தில் இருக்கும் என்பது சர்வ நிச்சயம்.அதனால் எப்படி அல்லது எங்கு வெளியிடுகின்றோம் என்பதைப் பொறுத்தே எதுவும் மதிக்கப்படுகின்றது என்றார் ஓர் அனுபவஸ்தர்.

ஒன்றுக்கு இரண்டாய் வசூலிக்கும் ‘வசூல் மேளா’ ஆக மாறி விட்ட மொய் எழுதும் பழக்கம் இப்பொழுது புத்தக வெளியீடு என்ற வடிவிலும் ஊடுருவி விடுமா? உப்படியான வெளியீடுகளுக்கு போகாமலிருந்தால் வீடுகளுக்கே நேரில் வருவதுடன் அவர்களின் விலை போகாத முன்னைய வெளியீடுகளையும் சேர்த்து இரட்டை விலையில் கட்டி அடித்து விடுவார்களோ? என்றவரின் குரலில் நடுக்கம்



இருந்தது.

இந்த நூலை வாங்க எனக்கு விருப்பமில்லை. மிக அதிக பணத்திற்கு ஒரு நூலை வாங்கும் வசதியீனம்.– ஒரு வரலாற்றுப் பொக்கிசமான அந் நூல் வீணே எமது மேசையில் திகழ்வதை விட அதனை நன்கு பயன்படுத்தக் கூடிய ஒருவரின் கையில் தவழ்வது பெருமிதத்துக்குரியது என்ற ஆழ் மன எண்ணம். – ஏற்கனவே பத்திரிகையில் வந்த வேளையிலே தவறாமல் வாசித்த மனப் பதிவு.– உங்களுக்கோ எனக்கோ பாதிப்பு வராது என்ற தளராத அபிப்பிராயம். இது போன்ற எத்தனையோ காரணங்களில் ஒன்றைத்தன்னும் அவருக்கு நேரடியாக சொல்லும் தைரியம் உங்களில் எவருக்கேனும் வராமல் போனதேன்? என்றார் அவருக்கு நெருக்கமானவர்.

சும்மா மொத்தம் மொத்தம் என்கிறீர்களே! உங்கள் எவரையேனும் வலிந்து அவர் அழைத்தாரா? வசதியெனின் வாருங்கள் என்றுதானே வரவழைத்தார். புத்தகத்தின் சிறப்பை பற்றியோ அல்லது அதன் மேம்பாட்டைபற்றியோ ஏதேனும் அறியாமல் சும்மா வெறும் வாயை மெல்லாதீர்கள். அவர்களுக்கும் அச்சு செலவு போன்ற இதர செலவுகளும் இருக்காதா? எனத் தொடர்ந்தது உறவினர் ஒருவரின் கரிசனை.

நூல் மிகவும் தரமானது என்பதில் மாற்றுக் கருத்து எதுவுமில்லை. ஆனால் அதனால் எமக்கு எவ்வித பிரயோசனமும் இராது போன்ற எமது தரப்பின் நியாயமான எந்தக் காரணமும் அவர்கள் முன் எடுபடும் என்று நம்புகின்றீர்களா? பல்கலைகழக மாணவருக்கான புத்தகத்தை பாலர் வகுப்பில் பயில்வோருக்கோ அல்லது பாலர் வகுப்பிற்குரிய புத்தகத்தை பல்கலைகழக மாணவருக்கோ பொருத்தமற்ற முறையில் தடுமாறி தடம் மாறி விற்பனை செய்வதுதானே பிரச்சனையே! என்று கூறினாலும் கூட அவர்கள் அதனை ஏற்றுக் கொள்வார்கள் என நினைக்கின்றீரிகளா? என ஏவறை விட்டவரின் கவனம் முழுவதும் அடுத்த ரவுண்ட் சிற்றுண்டி மீதிருந்தது.

சும்மா கழுவிக்கழுவி ஊத்தாதீர்கள். “கழுவப்பட்ட பொருட்கள் சுத்தமாகி விடுகின்றன. ஆனால் அவற்றை கழுவிய தண்ணீர்தான் அழுக்காகி விடுகின்றது. புறம் கூறுவோர் நிலையும் இதுதான்” என்று இப் புத்தகத்தில் ஒரு வசனம் வருகின்றது. அது உங்களுக்கானதாக ஆகிவிடப் போகிறது என்றார் வரும் போதே புத்தகத்தை தட்டிப் பார்த்த ஆர்வலர்.

கூட்டத்தில் பேச முடியாதவர்கள் கூட்டமாகச் சிற்றுண்டிச் சாலை உரையாடலில் அல்லது சமாவில் அல்லது கச்சேரியில் ஐக்கியமாகியிருந்ததை முடிவுக்கு கொண்டு வந்தது கூட்டம் ஆரம்பமாகவுள்ள அறிவிப்பு.

மேடையில் அமர்ந்திருந்தவர்களின் முகம் தெரியாதவாறு மறைத்தன மேசையில் அடுக்கப்பட்டிருந்த புத்தகங்கள்.

நன்நாங்கு புத்தகங்களை தூக்கி கதிரை கால்களின் கீழ் அடுக்கி விட உத்தேசிப்பது போலிருந்தது கமிராக்காரர் சுழண்டு சுழண்டு அவற்றை விதம் விதமான கோணங்களில் படம் பிடித்தது.

சிறப்புரை சிரிப்புரை வியப்புரை விதப்புரை நயப்புரை பயப்புரை பரப்புரை வழங்கவுள்ள சான்றோர் எவ்வித பதற்றமுமின்றி அமர்ந்திருக்க நூலாசிரியரை நச்சரித்தோ அல்லது இம்சைப்படுத்தியோ மேடையில் தமக்கென ஏதாவது ஒரு பணியை பெற்றுக்கொண்ட ஓரிருவர் மட்டும் இலவசமாக புத்தகம் பெற்றதில் அவர்களின் நோக்கம் நிறைவேறிய திருப்தியில் வாயெல்லாம் பல்லாக காணப்பட்டதை கரிசனையுடன் ஒளிப்படுத்தினார் வீடியோ நிபுணர்.

அதிலும் ஆய்வுரைக்காக அமர்தப்பட்டிருப்பவர் மூன்று மாதங்களுக்கு முன்பே தனக்குப் புத்தகம் கிடைத்திருந்தும் நேற்று இரவுதான் புத்தகத்தின் முதலிரு பக்கங்களையும் நடுவில நாலையும் கடைசி ஆறையும் கடாச முடிந்தது என எவ்வித சங்கோஷமுமின்றி அருகிலிருந்தவரிடம் கிசுகிசுத்துக் கொண்டிருந்ததை ஏதேச்சையாக ஒன்று விடாது பெரிது படுத்தியது நேரடி ஒலிபரப்பாளரின் ஒலிவாங்கி.

சம்பிரதாய சங்கடங்களுடன் – தவறு – சடங்குகளுடன் கூட்டத்தை ஆரம்பித்து சபையை எழுத்தி இருத்தினார் நிகழ்ச்சித் தொகுப்பாளர்.

அரிவரியில் தன்னுடன் படித்த நூலாசிரியருக்கு சிலேட் பென்சில் இரவலாக கொடுத்திருந்தது எழுபது ஆண்டுகள் கடந்த பின்பும் இன்னமும் நினைவில் நிற்பதாக அறிமுக உரையை ஆரம்பித்தவர் அந்த அரிவரியை தாண்டவே அரை மணித்தியாலம் எடுத்தார்.

வாழ்வின் ஜதார்த்தங்களையும் வெற்றிக்கான சூத்திரங்களையும் உணர்த்தும் இந் நூல் தனித்துவம் பெறுகின்றது. நாம் அறிந்ததாக பலது இருந்தாலும் அதன் வழியாக கடத்தப்படும் நீதி விழிகளை உயர வைக்கின்றது. புத்தகத்தின் கனமான கட்டமைப்பு கவனத்தை ஈர்க்கின்றது என்றார் நயப்பு.

தமிழில் தன்னம்பிக்கை நூல்கள் பல வந்துகொண்டிருக்கும் காலம் இது. ஆனால் ஒரு வெற்றியாளரே தனது அனுபவங்கள் வாயிலாக வெற்றியை நோக்கி வழி நடத்திச் செல்வது உளப்பூர்வமானது. ஏதோ டயறிக் கிறுக்கல்கள் போல் அன்றி தரமும் வரையறைகளும் மிகுந்து காணப்படுவது அவரது ஆளுமையை வெளிப்படுத்தி புதிய தென்பைத் தருகின்றது என்றார் வியப்பு.

இது மறக்க முடியாத ஓர் அன்பளிப்புக்குரிய நூல் ஆகும். வாங்கிய புத்தகத்தை வாசியாது வீணே வைத்திருப்பது துரோகம் என்பார்கள் அறிஞர்கள். வாசகர் மீது கிஞ்சித்தும் இரக்கமின்றி திணிக்கப்படுகின்றது என பார்த்தவர்கள் சொல்லலாம். படித்தவர்கள் சொல்ல மாட்டார்கள் என்றார் பயப்பு.

இந்த நூல் தோற்றத்தில் மட்டுமல்ல தேற்றத்திலும் பிரமாண்டமானது. அனுபவ அறிவை அலட்சியப்படுத்தக் கூடாது என்பதில் முத்திரை பதிப்பது இதன் சிறப்பு இந்தத் துறையில் பரிணமிக்க விரும்புபவர்களுக்கு இந்தப் புத்தகம் ஒர திரையாக இருக்க மாட்டாது. நிச்சயம் ஒரு திசையாகவே இருக்கும் என்றார் பரப்பு.

ஒரு துறை பற்றி அறிய விளைவோருக்கும் ஆராய முனைவோருக்கும் நல்லதொரு துணை நூலாக ஆவணமாகியுள்ளது என்றார் சிறப்பு.

உங்களுக்கு நன்றி கூற என்னிடம் வார்த்தைகளே இல்லை என்றவாறே மைக்கைப் பிடித்தார் ஏற்பு. என்னை நானே நிருபித்து கொள்வதற்காகவே எழுதத் தொடங்கினேன் என்று எண்ணத் தோன்றகின்றது. தெரியப் படாத பல விடயங்களை தெரியப்படுத்தி யுள்ளேன் என்ற நிறைவு நெஞ்சில் நிறை கின்றது. அவர் பேசியது மிச்சம் ஒன்றும் காதில் விழவில்லை.

சனம் வரிந்து கட்ட – மன்னிக்கவும் வரிசை கட்ட – முண்டியக்கத் தொடங்கிவிட்டது.

முன்னொரு காலத்தில் மதமாற்றிகளை கண்டு மருண்ட சனம் இப்பொழுது புத்தகம் வெளியிடுபவர்களை கண்டு வெருளுது அல்லது எரிச்சலடைகின்றது என்ற பொது வெளி அபிப்பிராயம் பொய் போலிருந்தது அவர்களின் முண்டிப்பு.

புத்தகம் வாங்குபவர்கள் ஒன்றில் கேடியாக இருக்க வேண்டும் அல்லது கோடிகளில் புரள வேண்டும் என்றார் அந்த வரிசையில் ஆகக் கடைசியாக நின்றவர் தனக்கு முன் நின்றவரின் முதுகை சுரண்டி.

புத்தகம் வாங்குபவர்கள் ஒன்றில் கேடியாக இருக்க வேண்டுமோ? உது என்னப்பா புதுக் கதையாக் கிடக்கு என்றவாறே 360 பாகையில் முதுகைத் திருப்பினார் அவருக்கும் முன்பாக நின்றவர்.

கேடி தெரியாதோ? கேடி என்ன செய்வான் ஏமாற்றுவான். மோசடி செய்வான். வில்லங்கமாக விற்பனை செய்து அந்தரங்கமாக ஒரு சிலரையாவது ஏமாளிகள் ஆக்குவதால்தான் அடுத்த நிகழ்ச்சிக்கு செல்லாத காசையோ அல்லது வெற்று என்வலப்பையோ கொடுத்து அவர்களும் கோமாளிகள் ஆகின்றார்கள்.

ஆனாலுமென்ன? பெறுமதி அற்ற சிலர் சொற்பமான காசை அற்பத்தனமாகக் கொடுத்து நூலை பெற்றுக்கொண்டனர் என்ற கதைதானே அரசல்புரசலாக வெளியே உலவிடப் போகின்றது. பெரு மூச்சுடன் தொடர்ந்தார் அடுத்தவர்.

மெத்தச்சரி. திறந்த வெளியில் அவர்களது பெயர்கள் அம்பலப்படுத்தும் வரை அவர்கள் திருந்தப் போவதில்லை என்று மேடையில் கூச்சலிடத் தெரிந்தவர்களுக்குக் கூட அவர்களில் ஒருவரது பெயரைத் தன்னும் உரத்துக் கூறத் தென்பில்லை என்றார் இன்னுமொருவர் அப்பாவித்தனமாக.

ம்...ஊருக்குப் புதுசா? அவர்கள் எந்த அடையாளத்தை விட்டுச் செல்கின்றார்கள் அவர்களை அடையாளப்படுத்துவதற்கு? என்றவர் பழைய பொலிஸ்காரர்.

இன்னுஞ் சிலர் மகா கெட்டிகள். வெளியிடப்படும் புத்தகத்தின் விலை முன் கூட்டியே தெரிந்திருந்தால் அதனிலும் அரைவாசிக் காசை மட்டுமே தம்முடன் எடுத்துச் செல்வார்கள். அதற்கு வெளியீடாளர்கள் பரிதாபம் காட்டினால் இவருக்கு லாபம். உடன்படாவிடினும் இவருக்கு நட்டமில்லை. இலவசமாக கிடைத்த தேநீரும் சிற்றுண்டியும் – ஏதோ உலக வங்கியில் பெற்ற மீளளிக்கத் தேவையற்ற கடன் – தந்த திருப்தியுடன் வீடு திரும்புவார்கள்.

நீங்கள் வேறு! இவர்கள் எவ்வளவோ மேல் என நினைக்க வைக்கும் இன்னொரு சாரார் இருக்கின்றார்களே? அவர்களைப் பற்றித் தெரியுமா?

யாரப்பா அந்தக் கில்லாடிகள்?

சிலர் திட்டமிட்டே தமது பர்ஸை வீட்டில் விட்டு விட்டு வருவார்கள். கேட்டால் ‘தீர அயத்துப் போனன்’ என்பார்கள் சற்றே வயிற்றெரிச்சலுடன். எவருமே கேட்காவிடின் வெறும் என்வலப்பைக் கூட ஓஸியில் தேடி மண்டபம் முழுதும் அலைவார்கள் கொடுப்புக்குள் சிரிப்புடன்.

பல நாடுகளில் தேவையற்ற பொருட்களை மீளளிக்கும் நல்ல நடைமுறை வழக்கத்தில் உள்ளது.அது புத்தக விற்பனையிலும் கடைப் பிடிக்க வேண்டும் என்பது எனது விருப்பம். காசோலை மூலமோ மின் பரிமாற்றம் மூலமோ நூல்கள் கையளிக்கப்படு மெனின் தகுந்த ஆதாரம் வெளியீட்டாளருக்கும் கிடைக்கும். ஏமாற்றுபவர்களுக்கு இடமிராது. மீளளிக்கும் வசதியில் சிரமமின்மை போன்ற பல நன்மைகள் ஏற்படும். அட்லீஸ்ட் நல்ல மனங்களையாவது சம்பாதிக்கலாம்.

வாசித்துவிட்டு திருப்பி தருவார்கள் என்று நேர்மையில் வெளியீட்டாளர்கள் சந்தேகப் படுவாரெனின் வெற்று என்வலப் வெற்று வேட்டுகளின் பொய்மையையும் தவிர்கேலாது.

விரும்பியவர்கள் கைகளில் புத்தகம் தெரிவது விழாவின் சுவை. விரும்பியவர்கள் கைகளில் பலகாரப் பாசல் தெரிவது விழாவின் சுமை.

தெரிஞ்ச கதை! என்ற தலைப்பு இக் கதைக்குப் பொருத்தமாயிருக்குமோ என்ற யோசனை உள்ளத்துள் அல்லாடியது.

ஒரு புத்தகமும் கொஞ்சப்பேரும் என்று கூட வைத்திருக்கலாமோ என்ற எண்ணமும் வருவதும் போவதுமாக இருந்தது.

புத்திசாலிகள் மட்டுமே தவறுகளிலிருந்து பாடம் கற்கிறார்கள்.

எது எப்படியோ? பலருக்கு இதயம் துடித்திராது! குதித்திருக்கும்.

அது கனத்த கைகளுடனும் லேசான மனங்களுடனும் என்றிருந்தால் மட்டுமே விழாவின் வெற்றி!

# அநீதிகளைக் கண்டிக்க மேடையேறிய வட்டுக்கோட்டை வேதவல்லி

பகவதாஸ் சிறிஸ்கந்ததாஸ்

இலங்கை 1948இல் சுதந்திரமடைந்தபோது தமிழ் மாதர் மத்தியிலிருந்து மேடைப் பேச்சாளர்கள் தோன்றும் சூழல் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணப்படவில்லை. ஒரு சில பெண்கள் மேடையேறியிருப்பின், அவர்கள் ஆன்மிக விடயங்களுக்கு மாத்திரமே தமது சொற்பொழிவுகளை மட்டுப்படுத்தியிருப்பர். பொதுவாக, சமூக நீதி அவர்களின் சிந்தனைக்கு அப்பாற்பட்ட விடயமாகவே விளங்கியது. இதற்கு முக்கியக் காரணம், அங்கு அன்றைய தமிழ்ச் சமுதாயத்தை வழிநடத்திய பெரும்பான்மையான ஆண்களின் சிந்தனையில் தெளிவில்லாமையாகும். குறுகிய சிந்தனை காரணமாக, இந்த ஆண்கள், தாம் வாழும் சூழலில் காணப்பட்ட அக்கிரமங்களையும், அநீதிகளையும் கண்டிக்க முன்வரவில்லை. இந்நிலையில், அன்றைய தமிழ் மாதர் தீண்டாமை ஒழிப்பு, பெண் விடுதலை, தொழிலாளர் உரிமை முதலிய விடயங்களுக்குக் குரல் எழுப்பப் பின்வாங்கியமை ஓர் அதிசயமாகப் பார்க்கப்படவில்லை. இத்தகைய நிலைக்கு விதிவிலக்காக விளங்கியவர் வேதவல்லி. இவர் கல்விக்குப் பெயர் பெற்ற வட்டுக்கோட்டையில் 1920ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம் 19ஆம் திகதி பிறந்தார்.

இவரது தந்தையார் பெயர் அழகரத்தினம். தாயார் இராசலட்சுமி, வேதவல்லி பிறந்த ஊர் கல்விக்குப் பிரசித்தி பெற்றபோதும், இவர் சிறுமியாக இருந்த காலத்தில், மாணவிகள் ஒரு குறிப்பிட்ட வயதிற்குப்பின் தமது பாடசாலை வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வழக்கம் நிலவியது. கல்வியை இடையில் கைவிட்ட இம்மாணவிகள் தமது வீடுகளில் இருந்துகொண்டு இல்வாழ்க்கைக்குத் தம்மைத் தயார்படுத்தினர். எனினும் வேதவல்லி, முற்போக்கான எண்ணம் படைத்த அவரது சிறிய தந்தையின் ஊக்குவிப்புக் காரணமாகக் கல்வியை இடையில் நிறுத்தாமல் தொடரக்கூடியதாக இருந்தது. இச்செயல் மூலம் தமிழ் ஆசிரியையாகக் கடமையாற்றுவதற்கான கல்வித்தகைமையைப் பெற்றார்.

வேதவல்லி நீர்வேலி என்னும் ஊரில் உள்ள அத்தியார் இந்துக்கல்லூரியில் தனது ஆசிரியச் சேவையைத் தொடங்கினார். இவர் இக்கல்லூரியில் தமது கடமையை ஏற்ற காலத்தில், இரண்டாம் உலகப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்தது. இவரது பாடசாலைச் சூழலில் இருந்த வயல்வெளிகள், வாழைத்தோட்டம், காய்கறித் தோட்டம் என்பனவும் – இவருடன் நெருங்கிப் பழகிய – அவ்வூர்ப் பெண்களின் களங்கமற்ற மனங்களும், நீர்வேலி மீது இவருக்கோர் பிணைப்பை ஏற்படுத்தியது.

### திருமணமும் கம்யூனிஸ்ட் கட்சியும்

வேதவல்லி, நீர்வேலியில் பணியாற்றிய காலத்தில், அதே ஊரைச் சேர்ந்த திரு. எஸ். கே. கந்தையா என்ற அறிவுஜீவியைத் திருமணம் செய்து கொண்டார். அடுத்த ஊரில் ஆசிரியராகப் பணிபுரிந்த திரு. கந்தையா, திருமணத்தைத் தொடர்ந்து மனைவியுடன் நீர்வேலியில் கடமையாற்றினார்.

இரண்டாம் உலகப்போர்க் காலத்தில் கணவர் இடைநிறுத்தியிருந்த இலண்டன் பல்கலைக்கழகத்திற்கான பட்டதாரிப் படிப்பைத் தொடர்வதற்கான சூழலை வேதவல்லி இல்லத்தில் உருவாக்கிக் கொடுத்தார். இதன் விளைவாக, நீர்வேலியின் முதலாவது இலண்டன் பல்கலைக்கழகப் பட்டதாரி என்ற பெருமை இவருக்குக் கிட்டியது.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியான 'கேசரி' என்ற ஏட்டின் ஆசிரியர் குழுவில் அங்கம் வகித்த கந்தையாவின் கட்டுரைகள், தலைநகரிலிருந்து வெளியான பல பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டன. இவர் மார்க்சியச் சித்தாந்தத்தில் பரந்த அறிவு படைத்தவராகக் கருதப்பட்டார். திரு. எஸ்.கே. கந்தையா இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் கிளையொன்றை யாழ்ப்பாணத்தில் தொடங்க, மற்றையோருடன் இணைந்து செயல்பட்டவர். 1848ஆம் ஆண்டு ஐரோப்பாவில் வெளிவந்த கம்யூனிஸ்ட் அறிக்கையை, தோழர் இராமசாமி ஐயருடன் இணைந்து 1948ஆம் ஆண்டு தமிழில் மொழியாக்கம் செய்தவர்.

மக்களுக்குச் சேவையாற்ற வேண்டுமென்ற நோக்கத்துடன் வாழ்ந்த வேதவல்லிக்கு, பல்துறை வல்லுநர் திரு. கந்தையா கணவராகக் கிடைத்ததை ஓர் அதிர்ஷ்டமாகவே கருத வேண்டும். சிறிது காலத்தில் மனைவியும் கம்யூனிஸ்ட் கட்சியில் அங்கத்துவம் பெற்றார்.

தமிழ் ஆசிரியையாகக் கடமையாற்றிய வேதவல்லி அம்மையார், சங்க இலக்கியங்கள், சங்கம் மருவிய கால நீதி இலக்கியங்கள் என்பனவற்றில் ஆழ்ந்த அறிவு படைத்தவராக விளங்கினார். இருப்பினும் அம்மையாரின் இதயத்தில் நிரந்தர இடம் பிடித்த கவிஞன் பாரதி என்பதில் எள்ளளவு சந்தேகமுமில்லை. தீண்டாமை ஒழிப்பு, பெண் விடுதலை முதலிய விடயங்களைப் பற்றி வேதவல்லி மேடையேறிப் பேசும்போது, பாரதியார் பாடல்களிலிருந்து சில வரிகளை மேற்கோள் காட்டுவது ஒரு வழமையான செயல்.

அறிவை வளர்ப்பதில் எப்போதும் ஆர்வம் காட்டிய வேதவல்லி அம்மையார், கணவரிடம் ஆங்கிலம் பயின்று அம்மொழியில் போதிய புலமை பெற்றார். இலங்கையில் தமிழ்ப் பெண்கள் கம்யூனிஸ்ட் கட்சியுடன் எந்தவிதமான தொடர்பும் வைத்திருக்கத் தயங்கிய காலத்தில் வேதவல்லி அக்கட்சியில் அங்கத்துவம் வகித்தமை ஒரு புரட்சிகரச் செயலாகும்.

மார்க்சியச் சிந்தனை பற்றிய அரிய நூல்களையும், வெளிநாட்டு இலக்கியங்களையும் திரு. கந்தையா மனைவிக்கு அறிமுகம் செய்து வைத்தார். புத்தகப் பிரியரான எஸ். கே. கந்தையா, தனது இல்லத்தில் ஆயிரக்கணக்கான நூல்களைச் சேமித்து வைத்திருந்தார். இச்சேகரிப்பிலிருந்து லியோ டால்ஸ்டாய், மார்க்சிம் கார்க்கி, அன்டன் செகோவ் உட்படப் பல ருஷ்ய எழுத்தாளர்களின் ஆக்கங்களை வேதவல்லி விரும்பி வாசித்தார். இவர், தான் வாசித்த நூல்களில் காணப்பட்ட சிந்தனையைத் தூண்டும் விடயங்களைப் பற்றிக் கணவருடன் கலந்துரையாடவும் தவறவில்லை.

யாழ்.மாவட்டக் கம்யூனிஸ்ட் மகளிர் அமைப்பின் முக்கிய அங்கத்தவராகச் செயலாற்றிய வேதவல்லி, ஒரு போதும் இப்பணி தனது பாடசாலைக் கடமைகளுடன் மோத இடமளிக்கவில்லை. அதேபோன்று எச்சந்தர்ப்பத்திலும் தனது அரசியல் சிந்தனைகளை மாணவர்கள்மீது திணிக்கவும் முயலவில்லை. அரசியல் மேடைகளில் எவ்வளவு தெளிவாகச் சொற்பொழிவாற்றினாரோ, அதேபோன்று வகுப்பறையிலும் எடுத்த விடயத்தை மாணவர்களுக்கு விளக்கும் ஆற்றல் அம்மையாருக்கு அமைந்திருந்தது.

தனது மாணாக்கர்களைப் பேச்சுப் போட்டி, நாடகம் முதலியவற்றில் ஈடுபடுமாறு ஊக்கப்படுத்துவதுடன், சில சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு அவசியப் பயிற்சியும் வழங்கினார். மாணாக்கர்களுக்கு ஏட்டுக் கல்வியை மாத்திரம் வழங்கும் நிலையமாகப் பாடசாலை இருக்கக்கூடாது என்ற நிலைப்பாட்டில் வேதவல்லி உறுதியாக இருந்தார்.

ஆசிரியப்பணி ஒரு புனிதமானது என் பதுவும் வேதவல்லியின் நிலைப்பாடு. இத்தொழிலில் ஈடுபட்டுள்ளோரை ஒருங்கிணைத்த அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தில் இவர் அங்கத்துவம் வகித்தார். அச்சங்கத்தின் முக்கியக் கிளைகளில் ஒன்றான வலிகாமம் கிழக்குத் தமிழாசிரியர் சங்கத்தில் அம்மையார் பல பதவிகளை வகித்தார். அக்காலகட்டத்தில் அங்கத்தவரின் நலன் கருதி வேதவல்லி எடுத்த நடவடிக்கைகள், அவர் மறைந்த பின்னரும் பல ஆசிரியர்கள் மனங்களில் நிலைத்து நிற்கின்றன.

### சமூக சேவை

ஒரு சமூக சேவகியென்ற அடிப்படையில் தனது ஊரிலும், அதற்கு அண்மையிலும் வாழ்ந்த விவசாயிகளின் நலன்களில் அக்கறை செலுத்தினார். விவசாயிகள் தமது



விளைச்சலைப் பெருக்குவதற்கான ஆலோசனைகளை, உரிய நிபுணர்களைக் கிராமத்திற்கு வரவழைத்து, அவர்கள் மூலம் வழங்கினார். அத்துடன், விவசாய உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளிலும் அக்கறை செலுத்தினார்.

தான் வாழும் சூழலிலும், தேசிய மட்டத்திலும் பெண்கள் முன்னேற வேண்டுமென்பது வேதவல்லியின் சிந்தனையின் ஒரு வெளிப்பாடு. பெண்கள் தனியாக இயங்குவதிலும் பார்க்க, கூட்டாக இயங்குவதன் மூலம் ஒரு பாரிய சக்தியாக உருவெடுக்கலாம் என்பது இவரது கருத்து. இதன் மூலம் பல கருமங்களைப் பெண்கள் சாதிக்கலாம் என்பதை இவர் வலியுறுத்தினார்.

இதன் முதற்படியாக, பெண்களை மையப்படுத்தி, கூட்டுறவுக் குழுக்கள் நிறுவப்படுவதின் அவசியத்தை இவர் சுட்டிக்காட்டினார். ஏற்கனவே வடமாகாணத்தில் கூட்டுறவு இயக்கங்களின் முக்கியத்துவம் பரவலாக அறிமுகமாயிருந்தமை வேதவல்லியின் முயற்சிக்கு அனுகூலமாக அமைந்தது.

இவரால் பல சிற்றூர்களில் மகளிர் குழுக்கள் தொடங்கப்பட்டன. இங்கு மகளிர் தமது ஆக்க சக்தியை முன்னெடுப்பதற்கு அம்மையார், ஜனநாயக அடிப்படையில் அவர்களைத் தொடக்க காலங்களில் நெறிப்படுத்தினார். இம்மகளிர் குழுக்கள், தரமான கைப்பணிப் பொருள்கள், உணவு வகைகள் என்பவற்றை நியாயமான விலையில் நுகர்வோர் பெறுவதற்கு ஆவன செய்தன.

1955ஆம் ஆண்டு நீர்வேலியில் பாலர் பகல் விடுதி (CRECHE) ஒன்றை, தொழில் புரியும் பெற்றோரின் நலன் கருதி நடத்துவதற்குச் சமூக சேவைகள் அமைச்சு முதல் ஒதுக்கீடு செய்தது. பாலர் பகல் விடுதிகள் ருஷ்யா உட்படப் பல வளர்ச்சியடைந்த நாடுகளில் காணப்பட்டன.

நீர்வேலியில் பாலர் பகல் விடுதியைச் செயற்படுத்த, ஏற்கனவே வெளிநாடுகளில் இவை செயற்பட்ட முறையை அறிந்திருந்த வேதவல்லியின் உதவியை அரசு அதிகாரிகளும், உள்ளூர்வாசிகளும் நாடினர். நீர்வேலியில் தொடங்கப்பட்ட பாலர் பகல் விடுதி, அவ்வூரைச் சேர்ந்த தொழில் புரியும் பெண்களுக்குப் பெருமளவில் ஆதரவாக அமைந்தது.

யாழ்ப்பாணத்தில் கம்யூனிஸ்ட் கட்சிக் கிளை தொடங்கப்பட்ட சில நாட்களில் அதனுடன் தன்னை இணைத்துக்கொண்ட வேதவல்லி, கட்சியின் வளர்ச்சிக்குத் தனது பங்களிப்பை வெவ்வேறு வகையில் வழங்கினார். அன்றைய யாழ்ப்பாண சமூகத்தில் காணப்பட்ட அநீதிகளையும், அக்கிரமங்களையும் கண்டிக்க அம்மையார் தயங்கவில்லை. இந்த அநீதிகளுக்கெதிராக நடத்தப்பட்ட போராட்டங்களில் தவறாமல் பங்குபற்றினார்.

தோழர் எம்.சி. சுப்பிரமணியம் தலைமை தாங்கிய அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபையும், அவர் முக்கிய அங்கத்தவராகச் செயற்பட்ட கம்யூனிஸ்ட் கட்சியும் இப்போராட்டங்களை வழிநடத்தின. கோவில்கள், உணவகங்கள், ஏனைய பொது இடங்கள் என்பவற்றில் யாவரும் சமமாக நடத்தப்பட வேண்டுமென்பது இப்போராட்டங்களில் ஈடுபட்டவர்கள் முன்வைத்த முக்கியக் கோரிக்கைகளாகும். இப்போராட்டங்கள், பிற்காலத்தில் சமூகத்தில் பல மாற்றங்கள் தோன்றுவதற்கு வித்திட்டன.

### வெளிநாட்டுப் பயணம்

மக்களுக்குத் தொண்டாற்றுவதை வேதவல்லி ஒருபோதும் சுமையாகக் கருதவில்லை. தனிப்பட்ட வகையில் பல துன்பங்களுக்கு இவர் முகம் கொடுக்க நேரிட்டபோதும், சமூகத்திற்குத் தான் ஆற்ற வேண்டிய கடமைகளை உதாசீனம் செய்யவில்லை. நீண்டகாலம் நோய்வாய்ப்பட்டிருந்த கணவர் 1970ஆம் ஆண்டு காலமானபோது, ஆழ்ந்த துயரத்தில் மூழ்கினார்.

வேதவல்லி 30 ஆண்டுகளுக்கு மேல் ஆற்றிய ஆசிரியப்பணி மூலம் பண்பும், சமூக உணர்வும் கொண்ட ஒரு மாணவப் பரம்பரையை உருவாக்கினார். 1977ஆம் ஆண்டு அம்மையார் ஓய்வு பெற்றபோது, இவர் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் பிரதம (பகுதி) தலைமை ஆசிரியராகக் கடமையாற்றினார். அரசாங்கப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற வேதவல்லி, சமூகத் தொண்டில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்.

1978ஆம் ஆண்டு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை இவரை ரூஷ்ய நாட்டிற்கு அனுப்பி வைத்தது. அங்கு செல்லும் வேளையில் அம்மையாரின் உடல்நிலையில் தளர்ச்சி காணப்பட்டது. ரூஷ்யாவில் இருந்தபோது மருத்துவர்களால் பரிசோதிக்கப்பட்டதுடன், சிகிச்சையும் இவருக்கு வழங்கப்பட்டது.

உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, ரூஷ்யப் புரட்சியின் பின் அந்த நாட்டில் நிகழ்ந்த மாற்றங்களை நேரடியாகப் பார்க்கும் வாய்ப்பு அம்மையாருக்குக் கிட்டியது. முக்கியமாக, மாதர் நலன் கருதி அங்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும், பாலர் பகல் விடுதி இயங்கும் முறையையும் அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டினார். ரூஷ்யாவில் இருந்த நாட்களில் அந்த நாட்டின் வரலாறு, கலை, இலக்கியம் என்பனவற்றுடன் தொடர்புடைய இடங்களுக்கும் இவர் அழைத்துச் செல்லப்பட்டார்.


வேதவல்லி அம்மையார் தனது ஊரிலும், அண்மை ஊர்களிலும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களைத் தொடங்கி வைத்ததுடன், அவற்றில் பெண்களை உற்சாகத்துடன் ஈடுபட வைத்தார். அம்மையாரின் கடும் உழைப்புக் காரணமாக, ஒரு கட்டத்தில் அவர் கொழும்பில் இயங்கிய கூட்டுறவுச் சிக்கனக் கடனுதவிச் சம்மேளனத்தின் உப தலைவியாக நியமிக்கப்பட்டார். 1980களின் தொடக்கப் பகுதிகளில் இலண்டன் மாநகரில் சிறப்பாக நடைபெற்ற அகில உலக கூட்டுறவு மகளிர் மாநாட்டில் வேதவல்லி இலங்கைப் பிரதிநிதியாகக் கலந்து கொண்டதன் மூலம் நீர்வேலிக்குப் பெருமை தேடித்தந்தார்.

இறுதி நாட்களில் வேதவல்லி அம்மையார், உடல்நிலை பாதிக்கப்பட்ட நிலையில், சில்லு இணைக்கப்பட்ட ஆசனத்தில் அமர வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார். அந்நிலையிலும், இயன்றவரை தனது பணிகளைத் தொடர்ந்த இவர், 1988ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23ஆம் திகதி காலமானார். இவர் மறைந்தபோதும், இவரால் தொடங்கப்பட்ட கழகங்கள், சங்கங்கள், குழுக்கள் என்பன மேலும் வளர்ச்சியடைந்த நிலையில், மக்கள் நலனுக்காகத் தொண்டாற்றுகின்றன.

வேதவல்லி அம்மையார் மறைந்து பல ஆண்டுகளாகிவிட்ட போதும், அவர் மக்கள் இதயங்களில் வாழ்கின்றார் என்பதை உறுதி செய்கின்றது, 2019ஆம் ஆண்டு நீர்வேலியில் அவருக்கு அமைக்கப்பட்ட உருவச் சிலை.

# கண்ணீர் அஞ்சலி







**தமிழீழ மக்கள் மக்கள் விடுதலைக் கழகம் மற்றும் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் (PLOTE - DPLF) சிரேஷ்ட உபதலைவரும் , ஜனநாயக தமிழ் தேசிய முன்னணியின் (DTNA) செயலாளருமான**

## தோழர் இராகவன், R.R

## ( வேலாயுதம் நல்லைநாதர் )

அவர்களின் திடீர் மறைவானது எமக்கு அதிர்ச்சியையும் ஆழாத் துயரையும் உண்டு பண்ணியுள்ளது. அவர் தனது வாழ்நாளில் பெரும்பகுதியை எமது இன விடுதலைக்காகவே தியாகம் செய்தார். அவருக்கு நாம் செலுத்தும் உண்மையான அஞ்சலி என்பது அவரின் இலக்கான தமிழர் உரிமைக்காக நாம் தொடர்ந்தும் போராடுவதே ஆகும். கனத்த இதையத்தோடும் ஆழாத்துயரோடும் தோழா உன்னை வழி அனுப்பி வைக்கின்றோம்.

**எமது ஆழ்ந்த அஞ்சலிகள்.**

**இவ்வண்ணம்**

**புலம்பெயர் கழக தோழர்களும் நண்பர்களும்.**